குழந்தைகள் ஞானஸ்நானம்

Y. சாமுவேல்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Rev. N. Clement Durai Singh, B.A.

கிறிஸ்தவ சித்தாந்தம்

குழந்தைகள் ஞானஸ்நானம்

Y. சாமுவேல்

திருப்பணி விடையாளர் இறையியனூல் வரிசை

Published for the C. S. I. Tamil Theological Series by
Tamilnad Theological College, Tirumaraiyur.
Editor : Rev. C. Selvamony, M. A., B. D., S. T. M.
Associate Editor : Rev. S. Daniel Abraham, B.D., S.T.M.

First Printed 1968

Printed at the Tirunelveli Diocesan Press, Tirunelveli—2

ஏசுவடியான்

ஏசு நேசம்மாள்

ஆகிய எமது அருமைப் பெற்றோர்க்குச்

சமர்ப்பணம்.

பதிப்புரை

திருப்பணிவிடையாளரின் பணிபற்றிய இன்றைய பிரச்னைகளில் முதலிடம் பெற்றுள்ளது ஞானஸ்நானம் பற்றி சபைகளில் பரவிவரும் பல்வேறு தப்பறை உபதேசங்களேயாகும். இந்த உபதேசங்கள் சபை மக்களை விசுவாசத்தினின்று வழுவ வைப்பதாகவும் சபைகளில் பிரிவினைகளை உண்டாக்கி சபை ஐக்கியத்தைச் சிதறடிப்பதாகவும் இருக்கின்றன. ஞானஸ்நானம் தொடர்பான திருமறை, இறையியல் கருத்துக்களை அறிந்து கிறிஸ்தவ விசுவாசத்தில் தான் நிலைத்திருப்பதும், தனது சபை மக்களுக்கு அவைகளைப் போதித்து, விசுவாசத்தினின்று அவர்கள் வழுகி விடாதபடி அவர்களைப் பெலப்படுத்துவதும், திருச்சபையின் ஒருமைப்பாட்டினைக் காத்துக் கொள்ளுவதும் திருப்பணிவிடையாளரின் கடமையாகும். ஞானஸ்நானம் என்ற பொருளின் மேல் இந்நூல் வரிசையில் எழுதப்பட்ட இரண்டாம் நூல் இதுவாகும். இதன் நடை, போக்கு யாவும் காப்புரை இலக்கிய (Apologetic) நடை சார்ந்ததாகும். திருப்பணிவிடையாளர் தாங்கள் இதனைப் படிப்பதுடன் தங்கள் சபையாரும் படித்து பயனடைய உதவுவார்கள் என நம்புகிறோம்.

இந்நூலின் ஆக்கியோன் காப்ற்றன் கனம் Y. சாமுவேல் ஐயர் ஞானஸ்நானம் தொடர்பான பல நூல்களை ஆய்வு செய்து இந்நூலைத் தோற்றுவித்துள்ளனர். இந்நூலைப் படிப்போர் அவர்களின் ஆய்வுத்திறனையும் முயற்சியையும் கண்டு, பாராட்டாதிருக்கமுடியாது. அவர்களுக்கு எம் நன்றி. இந்நூலை தென் இந்திய திருச்சபை திருப்பணிவிடையாளர் நூல் வரிசையில் வெளியிட அனுமதித்த மகா கனம் நெல்லை அத்தியட்சர் அவர்களுக்கும், நெல்லை அத்தியட்சாதீன இலக்கிய கழகத்தினருக்கும் எம் நன்றி.

திருமறையூர்
ஜூலை, 1968

சா. தானியேல் ஆபிரகாம்
துணைப்பதிப்பாசிரியர்.

நூன்முகம்

குழந்தை ஞானஸ்நானம் தற்கால கிறிஸ்தவ சபைகளில் வெகுவாய் தர்க்கிக்கப் பட்டுவருகிறது. சிறந்த கிறிஸ்தவ மக்களில் சிலர், மறு முறையோ, பலமுறைகளோ, இரசியமாகவோ, பகிரங்கமாகவோ ஞானஸ்நானம் பெற்றிருப்பதுமுண்டு. இதைக்குறித்து சத்திய வேதம் என்ன சொல்லுகின்றது என்பதை ஆராய்வதே இச்சிறு நூலின் நோக்கம். ஆகவே இதைப் படிப்போர், குறிப்பிட்டிருக்கும் வேத பாகங்களை கவனமாய் வாசித்தல் அவசியம்.

குழந்தை ஞானஸ்நானத்தைப் பற்றி ஆராய எம்மை ஊக்குவித்தது, மகாகனம் அசரியா அத்தியக்ஷரவர்களின் "பரிசுத்த ஞானஸ்நானம்" என்றும் புத்தகமே. இப்புத்தகம் 1929-ம் ஆண்டில், நான் ஜெல் அத்தியக்ஷர் வேதாகம பரீட்சை எழுதுகையில் பாடமாகக் குறிக்கப் பட்டிருந்தது. 1948-ம் ஆண்டிலிருந்தே தாய்மார், வாலிபர் கூட்டங்களிலும், ஆவிக்குரிய கூட்டங்களிலும், வேத ஆராய்ச்சியாக இவ்விஷயம் பலமுறை எம்மால் நடத்தப்பட்டதுண்டு. அவ்வப்போது இதை புத்தக ரூபமாக வெளியிட வேண்டுமென பலர் விரும்பினர். இதற்கிடையில் நெல்லை அத்தியக்ஷாதீன இலக்கிய கழகம் கேட்டுக் கொண்டதற் கிணங்க இப்புத்தகம் எழுத ஆரம்பிக்கப் பட்டது.

கையெழுத்துப் பிரதியைப் பார்வையிட்டு ஊக்குவித்த கனம் ஆ. அருள் தங்கையா, கனம் V. D. சகாயம், சென்னை கிறிஸ்தவ இலக்கிய கழக திரு. D. கோவில்பிச்சை, தமிழ்நாடு கிறிஸ்தவ கவுன்சில் இலக்கியபகுதி காரியதரிசி திருமதி P. சுந்தரராஜ் ஆகியவர்களுக்கும் இது வெளியிடப் படுவதற்கு அதிக முயற்சி எடுத்த திரு. ஜியார்ஜ் முல்லர், கனம் S. தானியேல் ஆபிரகாம் அவர்களுக்கும் எமது நன்றி.

சபாநாயகர் தாமே இச்சிறு நூலை தம் நாம மகிமைக்காக உபயோகிப்பாராக!

நெல்லை அத்தியக்ஷாதீனம்
ஆறுமுகநேரி S. Ry.
ஈஸ்ற்றர், 1968.

Y. சாமுவேல் ஐயர்.

பொருளடக்கம்

		பக்கம்
	முன்னுரை	
I	ஞானஸ்நானமாவது என்ன?	5
II	திருச்சபையும் குழந்தைகளும்	14
III	குழந்தை ஞானஸ்நானமும் சத்திய வேதமும்	19
IV	குழந்தைகளும் கடவுளின் உடன்படிக்கையும்	27
V	குழந்தைகளும் வீட்டார் ஞானஸ்நானமும்	34
VI	விசுவாசமும் குழந்தை ஞானஸ்நானமும்	41
VII	மறு ஞானஸ்நானம்	51
VIII	முழுக்கு ஞானஸ்நானம்	63
IX	குழந்தை ஞானஸ்நானமும் சரித்திரச் சான்றுகளும்	79
X	குழந்தை ஞானஸ்நானமும், பெற்றோர்; ஞானப் பெற்றோர் பொறுப்பும்	84
XI	தென் இந்திய திருச்சபையும், ஞானஸ்நானமும்	90
XII	முடிவுரை	94
	ஆக்கியோனின் ஆராய்ச்சிக்கு உதவிய நூல்கள்	97

முகவுரை

ஞானஸ்நானம் தொன்று தொட்டு திருச்சபையில் அநுசரிக்கப்பட்டு வரும் இரு சாக்கிரமெந்துக்களில் ஒன்று. இது மனிதனின் படைப்பன்று. கடவுளின் கட்டளை. ஆதிக் கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டோருக்கு ஞானஸ்நானம் கொடுத்தபோது, பரி. மத்தேயு 28ம் அதிகாரத்தின் இறுதியில் கண்டுள்ள ஆண்டவரின் கட்டளையைக் கைக்கொண்டதாகத் திட்டமாய் விசுவாசித்தனர். ஞானஸ்நானத்தின் மூலமாயன்றி வேறு எந்த முறையினுலும் எவரும் கிறிஸ்தவரானதாக புதிய ஏற்பாட்டில் எவ்விதச் சான்றும் கிடையாது (அப். *2 : 38; 8 : 12; 8 : 36 38; 9 : 18; 10 : 47; 16 : 15, 33; 18 : 8; 19 : 5*).

ஞானஸ்நானத்தின் மூலம் ஒன்ருய் இணைக்கப்பட்டோராகிய ஒரு சமுதாயமே திருச்சபை என புதிய ஏற்பாடு விளம்புகின்றது. திருச்சபை இரு வகைப்படும். (1) காணக்கூடிய திருச்சபை (2) காணக் கூடாத திருச்சபை. காணக் கூடிய திருச்சபையின் அங்கத்தினர் எவர் என்பதை இலகுவில் கண்டு கொள்ளலாம். ஞானஸ்நானமாகிய ஒரு வெளிப்படையான சடங்கின் மூலம் நுழைந்து, பரிசுத்த நற்கருணை என்னும் மற்றுமொரு வெளிப்படையான சடங்கின் மூலம் நிலை பெற்றுள்ள ஒரு சமுதாயமே காணக் கூடிய திருச்சபையாம். கடவுள் நம்மைத் தெரிந்தெடுத்து அழைத்ததாலேயே நாம் கடவுளின் பிள்ளைகளாயிருக்கிறோம். இக் கிருபையை நமது எந்தச் செயலாலும் நாம் பெற்றுக் கொள்ள முடியாது. கடவுளின் கிருபை எப்போதும் இலவசமே.

முதல் கிறிஸ்தவ மக்கள் யூதரே. பெந்தேகோஸ்தே தினத்திற்குப் பின்னரும் அன்னுர் தங்களை யூதரெனவே கருதி வந்தனர். கிறிஸ்து பெருமான் யூதனுகப் பிறந்து, யூதனுக வளர்ந்து, யூதனுகவே மரித்தார். யூதனுகப் பயிற்சி பெற்ற அவர், யூத ஜெப ஆலயங்களிலேயே கடவுளை வழிபட்டார். (பரி. லூக் 4 : 16). யூதரையே தமது சீடராகத் தெரிந்து கொண்டார். யூதரின் திருமறையாகிய பழைய ஏற்

பாடே அவரது திருமறையாகவுமிருந்தது. யூத சமுதாயம் மனிதனின் படைப்பன்று. அது கடவுளால் தோற்றுவிக்கப் பட்டு, அவரது செயலால் நிலைபெற்றுள்ளது. கடவுளுக்கும் யூதருக்குமுள்ள சம்பந்தம் 'உடன்படிக்கை' என்பதன் மூலம் விளக்கிக் காட்டப்பட்டது. உடன்படிக்கையின் மூலம் கடவுள் அவர்களைத் தம் ஜனமாக முத்திரித்து, அவர்களின் வாழ்க்கை விதிகளையும் வகுத்துக் கொடுத்தார்.

இந்த உடன்படிக்கையின்படி பிறப்பினால் எவரும் கடவு ளின் ஜன சமுதாயத்தில் அங்கத்தினராக முடியாது. அவன் விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும். (ஆதி. 17 : 10—14). புறஜாதியாரும் விருத்த சேதனத்தின் மூலமாய் மட்டும் இந்த உடன்படிக்கையின் கீழ் கொண்டுவரப்படக் கூடும். விருத்தசேதனம் பண்ணப்பட்டவன், தான் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், அதன் கருத்துக்களை உணர்ந்து கொள்ள முடியாவிட்டாலும், அந்த உடன்படிக்கை யின் புத்திரனே. இந்த அடிப்படையிலேயே தீர்க்கத் தரிசி கள் இஸ்ரவேலரைக் கடிந்து கொள்ள நேரிட்டது. அவர்கள் கடவுளின் சொந்த ஜனமாயினும் அவருக்குக் கீழ்ப்படிய வில்லை (ஆமோஸ் 3 : 2 ஏசா. 1 : 2, 3). திருச்சபை ஞானஸ்நானம் புதிய உடன்படிக்கையின் முத்திரையாக ஏற் பட்டுள்ளது.

மேலே காட்டியுள்ள பழைய ஏற்பாட்டின் சூழ்நிலையிலும், யூத சமுதாயத்தின் அடிப்படையிலுமே புதிய ஏற்பாட்டு ஆக மங்கள் எழுதப்பட்டன. குறிப்பிட்ட கிறிஸ்தவ குழுக்க ளுக்கு, அவர்களுக்குரிய குறிப்பிட்ட பிரச்சனைகளைத் தீர்த்து வைக்குமாறு எழுதப்பட்ட புத்தகங்களின் தொகுப்பே புதிய ஏற்பாடாம். தற்கால கிறிஸ்தவர்களுக்கு ஏற்பட்டுள்ள பல பிரச்சினைகளுக்கு அங்கு நேரடியாக விளக்கம் கொடுக்கப்பட வில்லை. ஏனெனில் அவை அக்காலத்தில் பிரச்சினைகளாகக் கருதப்படவில்லை. கொரிந்து சபையில் திருவிருந்தை ஆசரிப் பதைக் குறித்து பல பிரச்சனைகள் எழுந்தபடியால், பரி. பவுல்

அதன் சம்பந்தமாகத் தமது கருத்தை விபரமாய் எடுத்துக் கூறியிருக்கிருர் (I கொரி. 11 : 17 முதல் முடிய). ஆனுல் அது போன்ற ஒரு விளக்கம் ஞானஸ்நானத்தைப் பற்றிக் கொடுக்கப்படவில்லே. ஞானஸ்நானத்தைப் பற்றிய எவ்வித அபிப்பிராய பேதமும் அப்போது எழும்பாதிருந்ததே இதற்குக் காரணம். எனினும் ஞானஸ்நானத்தைப்பற்றிய பல குறிப்புகள் புதிய ஏற்பாட்டில் உண்டு. ஞானஸ்நானம் அற்பமாய் எண்ணப்பட்டு அசட்டை செய்யப்படும் ஒரு செயலன்று. கிறிஸ்தவன் கண்டிப்பாய் கடைபிடித்தொழுக வேண்டிய ஒரு புனித செயல்.

தற்கால கிறிஸ்தவ சபைகளில், ஞானஸ்நானம் மிகைப் படுத்தியும், திரித்தும், குறைவுபடுத்தியும் பேசப்பட்டும் அநுசரிக்கப்பட்டும் வருகின்றது. இக்காலத்து கிறிஸ்தவர்களுக்கு ஞானஸ்நானம் தேவையில்லே எனக் கூறும் கிறிஸ்தவர்களுமுளர். அன்னுர், ஞானஸ்நானம் யூதச் சபைக்கு மட்டுமே உரிய ஒரு நியமன மெனவும், அப்போஸ்தவர் நடபடிகளின் புத்தகத்திற்குப் பின்னர், திட்டமாய் குறிப்பிட முடியாத ஒரு மாறுதலின் காலத்தில் ஞானஸ்நானம் கொடுக்கும் வழக்கம் நின்று விட்டதெனவும், பரி. மத்தேயு சுவிசேஷம், கிறிஸ்தவர்களுக்கல்ல யூதருக்கு மட்டுமே எனவும், பரி. பவுல் ரோமச் சிறையிலிருந்து எழுதிய நிருபங்கள் மட்டுமே விசுவாசிகளுக்குரியது எனவும் சொல்லுகின்றனர். தங்கள் அங்கத்தினரின் தொகையை அதிகரிக்கும் நோக்கத்துடன், சில சபைகள், ஞானஸ்நானம் பெருமலும் அல்லது எந்த முறையில் ஞானஸ்நானம் பெற்றும் தங்கள் சபையில் சேர்ந்து கொள்ளலாமென்றுங் கூட திட்டம் வகுத்துள்ளனர். எல்லாரையும் பிரியப்படுத்துகிறவர்களாகவே இவர்கள் காணப்படுகின்றனர்.

தமிழ்ச் சபைகளில் தற்போது ஞானஸ்நானத்தைப் பற்றி பல பிரச்சனைகள் எழும்பியிருக்கின்றன. சபையின் வளர்ச்சிகது அவை பெரும் இடையூறுகளே. குழந்தை

ஞானஸ்நானம் தவறு; ஆதலால் மறுபடியும் ஞானஸ்நானம் பெறவேண்டும்; முழுக்கு ஞானஸ்நானமே பெறவேண்டு மெனவும் பலர் உபதேசிக்கின்றனர். இதனுல் சபையின் ஐக்கியம் சிதைவுபடுகின்றது. திருச்சபை ஊழியங்கள் பாதிக்கப்படுகின்றன. ஆதித்திருச்சபையின் உபதேசத் தைக் கைக்கொண்டு வருபவர், வேதத்தை அறியாதாராகக் கருதப்படுகின்றனர். இரண்டாம் ஞானஸ்நானம் மூழ்கிப் பெறுவோர் தங்களை மேம்பட்டோராகக் கருதி வருகின்றனர். "வேதத்தை அறியாதவர்களாகிய இந்த ஜனங்கள் சபிக்கப் பட்டவர்கள்" (பரி. யோவான் 7 : 49) எனவும் "நீ இஸ்ரவே லில் போதகனுயிருந்தும் இவைகளை அறியாமலிருக்கிருயா?" (பரி. யோவான் 3 : 10) எனவும் நம்மைக் குறித்துச் சொல் லப்படுவதை நாம் அறிவோம்.

ஞானஸ்நானம் சம்பந்தமாய் நாம் கையாண்டுவரும் முறைகளுக்கு நியாயஞ்சொல்லி தப்புவித்துக் கொள்ள வேண் டுமென்பதற்காக இச்சிறு நூல் எழுதப்படவில்லை. இதைக் குறித்து திருமறை என்ன போதிக்கின்றது என்பதைத் திறந்த மனதுடன் ஆராய்வதே இப்புத்தகத்தின் நோக்கம். இந்த ஆராய்ச்சி பயனளிக்க வேண்டுமாயின் முதலாவதாக நமது பிடிவாதத்தையும், ஏற்கனவே நிச்சயித்துள்ள அபிப்பி ராயங்களையுமகற்றி, திறந்த மனதுடனும் தேவ ஆவியான வர் நம்மை நடத்த வேண்டுமென்ற ஜெபசிந்தையுடனும் இந்த ஆராய்ச்சியில் ஈடுபடவேண்டும். இந்த முன்னுரையில் கூறப் பட்டுள்ள குறிப்புகளில் சில இதர அத்தியாயங்களிலும் காணப்படலாம்; இன்னுஞ்சில குறிப்புகள் அதன் கருத்தை விளக்குமாறு ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளிலும் கூறப் படலாம்.

ஒருவரின் ஞானஸ்நானம் அதிமுக்கியத்துவம் வாய்ந் தது. ஆண்டவரே அதை வற்புறுத்தியிருக்கிருர். நாம் அதன் கருத்தையும், மகிமையையும் ஏற்றவாறு உணர்ந்து, அந்த மகிழ்ச்சியில் நிலைத்திருப்பது அவசியம்.

I. ஞானஸ்நானமாவது என்ன ?

"கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே."

புதிய ஏற்பாட்டு உபதேசப்படி, ஒரு தனி நபர் கிறிஸ்துவின் சரீரத்துடன் இணைக்கப்படுவதே ஞானஸ்நானமாம். (I கொரி 12 : 12, 13; 12 : 27; கலா 3 : 27; அப் 2 : 41). ஆதலால் ஞானஸ்நானம் பெறுவது, அவரது சரீரமாகிய திருச்சபையில் (எபே 1 : 23) சேர்க்கப்படுவதாகும். ஞானஸ்நானம் பெற்றோர் கிறிஸ்துவின் சரீரத்தின் உறுப்புகள் ஆகின்றனர். (I கொரி 12 : 27). அவர்கள் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டு, அவருடன் ஒன்றாய் வளர்ந்து வருகின்றனர். ஞானஸ்நானம் பெற்றோர் யூதருமல்லர், புற ஜாதியாருமல்லர். அவர்கள் புதிய இஸ்ரவேலராம். காணப்படும் திருச்சபையில் சேர்க்கப்படும் யத்தனமாக கிறிஸ்தவ ஞானஸ்நானம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இஃது திருச்சபைக்குள் பிரவேசிக்கும் வாசல். (I கொரி 12 : 12, 13),. பரலோகத்திற்குள் பிரவேசிக்கும் வாசலாகவும் ஞானஸ்நானம் அமைகின்றது. (பரி. யோவான் 3 : 5.).

ஞானஸ்நானம் அவசியமா ?

விருத்தசேதனம் பண்ணப்பட்டவனே யூதன். விருத்தசேதனம் பண்ணப்படாதவன் தன்னை யூதனாகக் கருத முடியாது. அவனை யூதனாகப் பிறரும் ஒப்புக்கொள்ளுகிறதில்லை. கிறிஸ்து சபையில் விருத்தசேதனத்திற்குப் பதிலாக 'கையினால் செய்யப்படாத விருத்தசேதனமாக' (கொலோ 2 : 11) ஞானஸ்நானம் ஏற்பட்டுள்ளது. ஒருவன் கிறிஸ்தவனெனக் கருதப்படுவதற்குப் புறம்பான அடையாளமாக ஞானஸ்நானம் விளங்குகின்றது. "ஞானஸ்நானம் பெறவேண்டியது அவசியமா? இயேசு பெருமானின் போதனையைத் தனியாளாகக் கைக்கொண்டால் போதாதா?" என்ற கேள்வி பண்டிதர் ஸ்டான்லி ஜோன்ஸ் இடம் 1925-ம் ஆண்டு ஓர் வழக்கறிஞ

ரால் திருநெல்வேலியில் கேட்கப்பட்டது. அதற்கு அவர் "எமது வீட்டின் உக்கிரான அறையில் பல பொருட்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. பிள்ளைகளுக்குப் பிரியமான மிட்டாய், தேன் போன்ற பதார்த்தங்கள் அங்குண்டு. சிறுவருக்குக் கெடுதி விளைவிக்கக் கூடிய பொருட்களும் அங்கு உண்டு. ஆனால் புறம்பான தோற்றத்திலிருந்து அவை நன்மை விளைவிக்கக்கூடியனவோ, இன்றேல் கெடுதி விளைவிக்கக்கூடியனவோ என்பதை அறிய முடியாது. நாங்கள் ஒன்றுக்குப் பதில் ஒன்றைத் தின்றுவிடாதபடி எமது தாயார் ஒவ்வொரு ஜாடியின் மீதும் அதனுள்ளிருக்கும் பொருளின் பெயரை எழுதி வைப்பதுண்டு. அதேபோல் ஞானஸ்நானம், ஒருவன் கிறிஸ்தவன் என்பதை வெளிப்படையாகக் காட்டும் அடையாளம். ஆதலால் ஞானஸ்நானம் பெறுவது அவசியமே," என விடையளித்தார். ஞானஸ்நானத்தின் மூலம் திருச்சபையில் சேர்ந்தவரே, கிறிஸ்தவ விசுவாசிகள் என அழைக்கப்படுவர்.

ஞானஸ்நானம் பெற்றவரே கடவுளின் மக்கள்.

ஞானஸ்நானம் பெற்ற அனைவரும் கடவுளின் மக்களாக அங்கீகரிக்கப்பட்டு விளம்பரப்படுத்தப்படுகின்றனர். கிறிஸ்து பெருமான் கடவுளின் குமாரனாகவே அவதரித்தார். எனினும் அவர் ஞானஸ்நானம் பெற்றபோதுதான், "இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்" எனப் பிதா விளம்பரப்படுத்தியதாக திருமறை கூறுகின்றது. அது போலவே கிறிஸ்தவக் குடும்பங்களில் பிறந்துள்ள பிள்ளைகள் பிறப்பின்படி பரிசுத்தராயும் (I கொரி 7 : 14) கிறிஸ்து பெருமானின் வாக்குப்படி, பரலோக ராஜ்யத்திற்குள் பிரவேசிக்கத் தகுதியுள்ளவராயிருந்தாலும் (மாற் 10 : 14) ஞானஸ்நானத்தின் மூலமாகவே கடவுளின் புத்திரராக அங்கீகரிக்கப்படுகின்றனர். மேலும் கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றபோது, அவருக்காக வானம் திறக்கப்பட்ட வண்ணம் மக்கள் ஞானஸ்நானம் பெறும்போதெல்லாம், வானம் திறக்கப்படுவதற்கு அடையாளமாகத் திருச்சபையின் கதவுகள் திறக்கப்படுகின்றன.

இயேசு பெருமான் பெற்ற ஞானஸ்நானம்.

இயேசு பெருமான் பெற்ற ஞானஸ்நானம் எத்தன்மை யதூ? அதுவும் அவர் ஒரு வகுப்பாருடன் சேர்ந்து கொள்ளு வதற்கு யத்தனமாக உபயோகிக்கப்படுவதாகக் கருத இட முண்டு. பாவிகளை இரட்சிக்கவே கிறிஸ்து இயேசு உலகிற்கு வந்தார். பாவிகளைச் சிநேகியாது, அவர்களுடன் உண்டு உறங்காது, பொதுப்படச் சொல்லின் அன்னுருடன் தம்மை இணைத்துக்கொள்ளாவிடில், இது சாத்தியமாக முடியாது. ஆகவே அவர் அத்தகையோருடன் தம்மை இணைத்துக் கொண்டு, ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் நண்பரானுர். பரி. பவுலும் 'பாவமில்லாத அவரை நமக்காகப் பாவமாக்கினுர்' என்று கூறியிருக்கிருர். ஆகவே தாம் ஈடேற்ற வந்த மக்க ளுடன் தாம் சேரும்படியாக, அவர்களைப் போலவே அவரும் யோவானிடம் ஞானஸ்நானம் பெற வேண்டியதாயிற்று.

யூத மதமும் ஞானஸ்நானமும்.

கடவுள் ஒருவரே என்ற சத்தியத்தை முதன் முதல் உல கிற்கு வெளிப்படுத்தியது யூத மதமே. விக்கிரக வணக்க மற்ற யூத மதம் பல புற ஜாதியாரைக் கவர்ந்தது. அத்தகை யோர் தங்களின் பழைய மதத்தைத் துறந்து, யூத மதத்தைத் தழுவி வந்தனர். அன்னுர் 'யூத மார்க்கத்தமைந்தவர்கள்' என அழைக்கப்பட்டனர். (அப் 2 : 10; 13 : 43). இவ் வாறு அவர்கள் யூத மதத்தைத் தழுவும்போது செய்ய வேண் டிய சடங்குகளில் ஒன்று, வீட்டாரோடு ஞானஸ்நானம் பெறு வதாம். அவ்வாறு அவர்கள் ஞானஸ்நானம் பெறுகையில் யூத மதத்தில் இணைக்கப்படுகின்றனர். ஆகவே ஞானஸ் நானமே இஸ்ரவேல் சமுதாயத்தில் சேருவதற்கு வாயிலாக அமைந்துள்ளது. கிறிஸ்தவ ஞானஸ்நானத்தின் அடிப்ப டையும் இதுவே.

யோவானின் ஞானஸ்நானம்.

ஞானஸ்நானம், மக்களை ஒரு சபையில், சமூகத்தில் அல்லது சங்கத்தில் சேர்ப்பதற்கு உபயோகிக்கப்பட்ட ஓர் நியமனமாயின், யோவான் ஸ்நானகன் கொடுத்த ஞானஸ்நானமும் இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டதுதானு? "ஆம்" என்றே விடை கூறலாம். கர்த்தருக்குத் தகுதியான ஒரு ஜனத்தை அவருக்கு ஆயத்தப்படுத்துவான்' (பரி. லூக்கா 1 : 17 A. V.) என்பது யோவான் ஸ்நானகனைப் பற்றிய வாக்குத்தத்த உரை. அவ்வாறே மேசியா வரும்போது அவரை ஏற்றுக்கொண்டு அவரைப் பின் செல்லக் கூடிய ஒரு சமுதாயத்தை ஆயத்தஞ் செய்தான். அதில் சேர்க்கப்படுவோருக்கு ஜெபம், உபவாசம் இவற்றை நன்கு உபதேசித்திருந்தான். இப்புனிதக் குழுவில் சேருவதற்கு ஞானஸ்நானத்தையே வாயிலாக உபயோகித்தான் யோவான். யோவானுல் ஞானஸ்நானம் பெற்ற அனைவரும் அவ்வாறு ஞானஸ்நானம் பெற்ற பின்னரே இக்குழுவில் ஒருவராக ஏற்றுக்கொண்டனர். ஆகவே ஸ்நானகனின் ஞானஸ்நானமும் அவனுல் உருவாக்கப்பட்ட சங்கத்தில் சேர்க்கப்படும் எத்தனமாகவே இருந்தது.

மோசேக்குள்ளாக ஞானஸ்நானம்.

"இப்படியிருக்க சகோதரரே, நீங்கள் எவைகளை அறிய வேண்டு மென்றிருக்கிறேனென்ருல்; நம்முடைய பிதாக்களெல்லாரும் மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள். எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்து வந்தார்கள். எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்திலும் சமுத்திரத்திலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள்." (I கொரி 10 : 1, 2.) இஃது புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானத்தைத் திருஷ்டாந்தப்படுத்தும், பழைய ஏற்பாட்டுச் சரித்திரக் காட்சி என கனம் பார்ன்ஸ் லாரன்ஸ் ஐயர் கூறியிருக்கின்ருர். "மோசேக்குள்ளாக ஞானஸ்நானம்" என்பது, "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம்" (ரோமர் 6 : 3) என்பதற்கு ஒத்திருக்கின்

றது. மோசேயினுல் வழி நடத்தப்பட்ட "ஆட்டு மந்தை யாகிய" (சங் 77 : 20) யூத சபையோடு இணைக்கப்பட்ட வகை, கிறிஸ்துவின் மந்தையாகிய திருச்சபைக்குள் நாம் இணைக்கப்படுவதை முன் குறிக்கும. இதை ஞானஸ்நான மென்றே பரி. பவுல் கூறுகின்ருர்.

இதைக் குறித்து பார்க்ளே பண்டிதர், "இங்கு பரி. பவுல் இஸ்ரவேல் புத்திரர் வனுந்தரத்தில், பரதேசிகளாகவும், பிர யாணிகளாகவும் இருந்த காலத்தைக் குறிப்பிடுகிருர். அக் காலத்தில் அவர்களுக்கு அதி அற்புத நிகழ்ச்சிகள் நடைபெற் றன. மேலே இருந்த மேகம் அவர்களுக்கு ஆபத்திற்கு அடைக்கலமாகவும், வழிகாட்டியாகவுமிருந்தது. (யாத்13:21; 14 : 19) அவர்கள் சிவந்த சமுத்திரத்தைக் கடந்து சென்ற னர். (யாத் 14 : 19—31). கிறிஸ்தவன் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெறுமாப்போல், மோசேக்குள்ளாக ஞானஸ் நானம் பெற்ருர்கள் எனக் கூறும் அளவுக்கு, இவ்விரு அநுப வங்களும், மாபெரும் தலைவனும், நியாயப் பிரமாணிகனுமான மோசேயுடன் அவர்களைப் பூரணமாய் இணைத்தன" எனக் கூறுகிருர். ஆகவே ஈண்டும் ஞானஸ்நானம் ஓர் இணைப் பின் சாதனமாகவே கூறப்பட்டுள்ளது. மேலும் 'எல்லாரும்' என்ற பதம், எகிப்திலிருந்து புறப்பட்ட 20 லட்சம் மக்களில் அடங்கியுள்ள பகுத்தறிவற்ற பல்லாயிரக்கணக்கான குழந்தை களையும் குறிக்கும்.

கிறிஸ்து பெருமானின் உபதேசம்.

கிறிஸ்து பெருமான் பரி. யோவான் சுவிசேஷத்தில் 'என் ஆடுகள்' (21:17) என்றும், 'என் ஆட்டுக் குட்டிகள்' (21:15) என்றும், 'வேறே ஆடுகள்' (10 : 16) எனவும் குறிப்பிடுகி ருர். ஆகவே வேறே ஆட்டுக் குட்டிகளும் அவருக்குண்டு. வேறே ஆடுகளும், வேறே ஆட்டுக் குட்டிகளும் ஞானஸ் நானத்திஞல் திருச்சபையில் சேர்க்கப்படாத மக்களையும், 'என் ஆடுகள், என் ஆட்டுக் குட்டிகள்' என்பது ஞானஸ்

ஸ்நானம் பெற்று திருச்சபையில் சேர்க்கப்பட்டுள்ள மக்களையும் குறிப்பதாம்.

ஞானஸ்நானம் கடவுளின் செயலே.

ஞானஸ்நானத்தின் மூலம் திருச்சபையில் சேர்க்கப்படுவது தெய்வத்தின் சாதனையே. இது மனிதனின் முயற்சிக்குப் புறம்பானது. தகுதியற்ற மக்கள்பாற் கடவுள் கொண்டுள்ள கருணைக்கு இது ஓர் சான்று. அவரது இலவசக் கிருபைக்கு இஃதோர் அத்தாட்சி. ஒருவன் விருத்தசேதனம் பண்ணப்படுமாப்போல் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுகிறுன். (கொலோ 2 : 11) கடவுளின் 'முந்து செயல், முந்து அன்பு' என்பவை கிறிஸ்தவ சித்தாந்தத்தின் அம்சங்களாகும். ஞானஸ்நானம் இதற்கு ஓர் எடுத்துக் காட்டு. பிரஜா உரிமை, அதைப் பெற்றுக்கொள்ள யாதா மொன்றையும் செய்ய முடியாத குழந்தைகளுக்கும் வழங்கப்படுவதை அறிவோம். அதே போல், தெய்வ ராஜ்ஜியத்தின் பிரஜா உரிமையும், தெய்வத்தால் ஞானஸ்நானம் பெறுவோருக்கு, அன்னவரின் பாத்திரா பாத்திரத்தைக் கவனியாது அளிக்கப்பட்டு வருகின்றது.

ஞானஸ்நானம் கடவுளின் அன்பை எடுத்துக் காட்டும் ஓர் புறம்பான அடையாளம். மக்களிலுள்ள யாதாமொரு சற்குணம் அன்னுரை ஞானஸ்நானத்திற்குத் தகுதியாக்குகிறதில்லை. ஞானஸ்நானம் பெற மக்களை அழைக்கும்போது, முதலில் கடவுளின் அன்பையே அவர்களுக்கு அளிக்கின்ருேம். கடவுள் அன்பு கூராத ஆணே, பெண்ணே, பெரியாரோ, சிறியாரோ கிடையாது. கடவுளின் அன்பைப் பெறும் தகுதியும் எவருக்கும் கிடையாது. எனினும் அவர் எல்லாரையும் நேசிக்கிருர். அன்றும், இன்றும், என்றும் அவர் பாவிகளை நேசிக்கிருர். இதுவே சுவிசேஷம். ஞானஸ்நானமும் இதையே குறிப்பிடுகின்றது. மனுக்குலம் கடவுளைப் புறக்கணிக்குமாப்போல், ஞானஸ்நானத்தையும் புறக்கணிக்கக் கூடும்.

ஞானஸ்நானம் ஓர் ஆரம்பம்.

ஞானஸ்நானம் ஓர் புதிய ஆரம்பம். பரி. மத். 28 : 18, 19-ல் நமது ஆண்டவர், முதலில் மக்களைச் சீஷராக்கி, ஞானஸ்நானங்கொடுத்து, பின்னரே அவர்களுக்கு உபதேசஞ் செய்யவும் கட்டளையிட்டிருக்கிறுர். இதன்படி ஞானஸ்நானம் பெற்ற பின்பே கற்றுக்கொள்ள ஆரம்பிக்கிறுன். கிறிஸ்துவைப் பற்றிய அறிவில் வளரவும் ஆரம்பிக்கிறுன். அப். 2:42-ல் ஞானஸ்நானம் பெற்றவர்கள் அவ்வாறே அப்போஸ்தலர் உபதேசத்திலும், அந்நியோன்யத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுவதிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் என சொல்லப்பட்டிருக்கிறது. புதியதோர் ஆரம்பம் அவர்களில் உதயமாயிற்று. இயேசு பெருமான் நற்கருணையின் நல் ஆயனுகத் தன் மந்தையை ஊட்டி வளர்க்குமுன்னர் ஞானஸ்நான வாயிலாகத் தம் ஆடுகளைத் தம்மிடம் சேர்த்துக் கொள்ளுகிறுர்.

மகா கனம் ஸ்தேவான் நீல் அத்தியட்சர் "கிறிஸ்தவ வாழ்க்கை ஞானஸ்நானத்தில் ஆரம்பமாகின்றது. தெய்வக் கிருபையால், திருச்சபையின் மூலம் மூல பாவம் நீங்கிப் போக, மக்கள் உள்ளத்தில் தெய்வீக ஜீவ வித்து விதைக்கப்படுகின்றது. கிறிஸ்தவப் போதனை, திருச்சபையின் வாழ்க்கை, சாக்கிரமெந்தின் மூலம் கிடைக்கும் கிருபை, இவற்றுல் அந்த வித்து வளரக் கூடும் ... கடவுள் ஏற்கனவே தன்னில் நடப்பித்ததை அறிந்துகொள்ளவே தனி நபர் அழைக்கப்பட்டிருக்கிறுன் ... திருச்சபையில் அங்கமாயிருத்தல் சொந்தக் கிறிஸ்தவ அநுபவத்திற்கு வழி நடத்தப்பட எதிர்பார்க்கப்படுகின்றது" என எழுதியுள்ளார். ஆகவே ஞானஸ்நானம் கிறிஸ்தவ வாழ்க்கையின் ஆரம்பமேயாகும். அஃது பூரணப்படுத்தப்பட்ட வாழ்க்கையுமன்று, வாழ்க்கையின் முடிவுமன்று.

பற்பல சபைகளின் விளக்கம்.

இத்தகைய சத்திய வேத ஆதாரங்களே அடிப்படையாகக் கொண்டு, பற்பல சபைகள் தங்களின் ஞானுபதேசத்தில் ஞானஸ்நானத்திற்கு விளக்கம் தெரிவித்திருக்கின்றனர்.

(ஞானஸ்நானம்) "சாதாரணமாகத் திருச்சபையினுள் சேர்க்கப்படுவதாம்." — ரோமன் சபை.

(ஞானஸ்நானத்தில்) "நீங்கள் கிறிஸ்துவுடனே ஒட்டப்பட்டிருக்கிறீர்கள்." — லுத்தரன் சபை.

(ஞானஸ்நானமாவது) "கிறிஸ்து மார்க்கத்தை அநுசரித்துக்கொள்ளுவதற்கு அடையாளமாகவும், கிறிஸ்தவர்களும் கிறிஸ்தவர்களாகாத மற்றவரும் இன்னுரென்று காண்பிக்கத் தக்க வேற்றுமைக் குறிப்பாகவும் மாத்திரம் அல்ல, மறு பிறப்புக்கு அடையாளமாகவும் இருக்கிறது." — இங்கிலாந்து திருச்சபை.

"ஒவ்வொரு சபையும் ஞானஸ்நானத்தின் மூலம் தனது அங்கத்தினரை ஏற்றுக்கொள்ள வேண்டும்." — பாப்டிஸ்ட் சபை

(ஞானஸ்நானத்தை சபையின்) "அங்கத்தினராவதற்கு ஓர் நிபந்தனையாக ஏற்படுத்தியிருப்பதால் நாம் (அதாவது தென் இந்திய திருச்சபை) நமது ஆண்டவரின் கட்டளைக்குக் கீழ்ப்படிகிறோம்." — தென் இந்திய திருச்சபை.

"நமது ஞானஸ்நானத்தால், அநேகரான நாம், அவருக்குள் (கிறிஸ்துவுக்குள்) இணைக்கப்பட்டு, அவருடனும், அவருக்குள்ளும் ஒன்ருகிறோம்." — அனைத்துலக கிறிஸ்து சபை ஆராய்ச்சி — (An Ecumenical Study in Baptism)

ஐசிலாந்து தீவில் ஓர் குழந்தை பிறந்தவுடன், அதை வளர்க்க வேண்டுமா, கொன்றுவிட வேண்டுமாவென அதன் தகப்பனிடம் கேட்க, வளர்க்கவேண்டுமென அவன் சொல்லு வானுகில், குழந்தையின் மேல் சிறிது தண்ணீர் வார்த்து அதற்குப் பேரிடும் வழக்கம் முற்காலத்தில் இருந்து வந்தது. இச்சடங்கின் மூலம் அப்பிள்ளை மக்கள் சமுதாயத்தில் சேர்க் கப்பட்டு விட்டபடியால், அப்பிள்ளையைக் கொல்லுவது கொலை பாதகமாகக் கருதப்பட்டு வந்தது. கிறிஸ்தவ ஞான ஸ்நானமும் மக்களின் இத்தகைய இயற்கை மனே நிலையையே அடிப்படையாகக் கொண்டது.

ஆகவே ஞானஸ்நானமானது திருச்சபையின் ஐக்கியத் திற்குள் இணைக்கப்பட ஏற்பட்டுள்ள நியமனமாயும், கிறிஸ் தவ வாழ்க்கையின் ஆரம்பமாகவும் இருக்கின்றது. இச் சத் தியத்தை சரியாய் அறிந்துகொள்ளக் கூடுமாயின், ஞானஸ் நானத்தைப் பற்றிய இதர பிரச்சினைகள் இலகுவில் நீங்கக் கூடும்.

(எனினும் இரட்சணிய சேனையும், அன்பர் குழுவும் (Society of Friends) ஞானஸ்நானத்தை நிராகரித்திருப் பது குறிப்பிடத் தக்கது.)

II திருச்சபையும் குழந்தைகளும்

"இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையில் சேர்த்துக் கொண்டு வந்தார்."

திருச்சபை குடும்பமென அழைக்கப்படுகின்றது. (எபே. 4 : 14). குழந்தைகளையும் சேர்ந்தே குடும்பம் உருவாகிறது. பரலோகத் திருச்சபையிலும் (குடும்பத்திலும்) பூலோகத் திருச்சபையிலும், தனித்தனி குடும்பங்களிலும் பிள்ளைகள் காணப்படுகின்றனர். "சிறியோரையும், பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக் கண்டேன்" (வெளி. 20 : 12) என வெளிப்படுத்தின விசேஷ ஆக்கியோன் கூறுகிறுர். காணக் கூடியதும் காணக் கூடாததுமான திருச்சபையில் குழந்தைகளும் அங்கங்களே. திருச்சபைக்குள் பிரவேசிக்கும் வாசல் ஞானஸ்நானமே என முன் கவனித்தோம். அப்படியாயின் திருச்சபைக்குள் காணப்படும் குழந்தைகளும் இந்த ஞானஸ்நானமாகிய வாசல் வழியாகப் பிரவேசித்தவர்களே. திருச்சபையுடன் இணைக்கப்பட இந்த ஒரே வழியேயன்றி வேறுவழி கட்டளையிடப்படவில்லை.

கிறிஸ்துவும் குழந்தைகளும்.

எனினும் 'சந்தேகத்தின் அதிபதி' தன் முழு பலத்தையும் இங்கு உபயோகித்து மக்களைக் கலக்குவதை நாம் அறிவோம். குழந்தைகளின் அறியாப்பருவத்தில், அன்னவரின் ஒப்புதலின்றி ஞானஸ்நானம் கொடுத்து திருச்சபையில் சேர்ப்பது சரியாகுமா என்பதே சிறுபான்மை கிறிஸ்தவரின் தற்காலக் கேள்வி. குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கக் கூடாதென கிறிஸ்துவோ, அப்போஸ்தலரோ கட்டளையிடவில்லை. ஆனுல் இதற்கு மாருகப் பிள்ளைகளைப் பற்றி கிறிஸ்து பெருமான் விளம்பியிருப்பது கவனிக்கப்பட வேண்டியது. கிறிஸ்து அவர்களை 'என் ஆட்டுக்குட்டிகள்' என்கிருர். (பரி. யோவான் 21 : 15) 'தேவனுடைய ராஜ்யம் அப்

படிப்பட்டவர்களுடையது' என்கிறுர். (பரி. மாற் 10 : 14) 'அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பிதாவின் சமுகத்தை எப்போதும் தரிசிக்கிறுர்கள்' என்கிறுர். (பரி. மத் 18 : 10). 'இவர்களுக்கு இடறல் உண்டாக்குகிறவன் (ஒரு வேளை அவர்கள் ஞானஸ்நானத்திற்கு இடறலாயிருக்கிறவன்) நித்திய தண்டனையை அடைவான்' எனவும் கூறியிருக்கிறுர். (பரி. மத் 18 : 6). தமது நாமத்திஞல் சிறுவரை ஏற்றுக கொள்ளுகிறவன் தம்மையே ஏற்றுக் கொள்ளுகிறுன் எனவும் கூறப்பட்டுள்ளது. (பரி. மத். 18 : 6). ஆகவே ஞானஸ்நானத்தின் மூலம் திருச்சபையில் குழந்தைகளை ஏற்றுக் கொள்ளாதவன், கிறிஸ்துவையே ஏற்றுக் கொள்ள மறுக்கிறவஞகக்கரு தப்படவும் கூடும். குழந்தைகள் பரலோகக் குடும்பத்தின் அங்கத்தினராயிருப்பதொன்றே, பூலோகத் திருச்சபையின் அங்கத்தினராவதற்கும் போதிய காரணமாகும்.

அறியாப் பருவத்திலும் குழந்தையின் உரிமை.

குழந்தை பிறந்தவுடனே, அதன் சம்மதத்தைப் பெருமலேயே குடும்பப் பெயர் அதற்குச் சூட்டப்படுகின்றது. குடியரசு உரிமையும் உடனடியாக அதற்கு வழங்கப்படுகின்றது. யூத சபையின் குழந்தைகள் அவ்வாறே அவர்கள் ஒப்புதல் இன்றியே எட்டாம் நாளில் விருத்த சேதனமாகிய அடையாளத்தையும் முத்திரையையும் பெறுகின்றனர். விருத்த சேதனத்தின் நிறைவேறுதலாகிய ஞானஸ்நானத்தைக் கிறிஸ்தவப் பெற்ருேரின் பிள்ளைகள் தாங்கள் பரிசுத்த பிள்ளைகளாயிருப்பதால் (I கொரி. 7 : 14), குழந்தைப் பருவத்திலேயே ஞானஸ்நானத்தின் மூலமாயத் திருச்சபையில் சேர்க்கப்படுகின்றனர்.

குழந்தை ஞானஸ்நானத்தில் ஏதோ ஒன்று குறைவுபட்டுள்ளது எனக் கூறுபவருமுளர். ஆஞல் குழந்தை சம்பந்தப்பட்டவரை, அது ஒரு குழந்தையாக இருப்பதினிமித்தம்,

ஞானஸ்நானமாகிய சாக்கிரமெந்திலே குறை ஒன்றுளது எனச் சொல்லுவதற்கிடமில்லை. குழந்தை ஆட்பிராயமடைந்த தன்று. நமது பரலோக பயணத்தில் நாம் அனைவரும் குறை வுள்ளவர்களே. 'நான் அடைந்தாயிற்று' (பிலி. 3 : 12) என்று சொல்லக் கூடிய நிலைமையை, நாம் இவ்வுலகில் அடைய முடியாது. நமது வாழ்க்கையிலே முன்னேறிச் செல்வதற்கான உரிமையை ஞானஸ்நானம் நம் மீது சுமத்தி யுள்ளது. அவ்வாழ்க்கையின் நிறைவை அடையும் வரை, குறைவான சில காரியங்கள் இருந்து கொண்டேயிருக்கும். நமதாண்டவர் மேலுலகில் புகுவோர் அனைவருக்கும் குழந்தை களையே மாதிரியாய் வைத்திருப்பது கவனிக்கத் தக்கதே.

கோதுமையும் களையும்.

ஞானஸ்நானம் பெற்ற அனைவரும் கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்களாயினும், அவர்களில் பலர் பின்வாங்கி, கிறிஸ்துவைச் சேராதோரைப் போன்று வாழ்வதை நாம் அறி வோம். காணப்படும் திருச்சபை, பூரண பரிசுத்தரால் எப் போதுமே அமைந்திருக்கவில்லை. ஆதித் திருச்சபையும் இதற்கு விலக்கல்ல. ஞானஸ்நானம் பெற்று திருவிருந்தில் பங்கெடுத்து, திருப்பணியில் நீண்டகாலமோ, சொற்பகா லமோ ஈடுபட்டு, திருச்சபையில் முக்கிய பதவி வகித்தோரும் கூடப் பின்வாங்கியதுண்டு. திருச்சபையாகிய திராட்சைச் செடியில் கனி கொடாத கொடிகளுமுண்டு. கோதுமையும் களையும் கலந்ததே பூலோகத் திருச்சபை. களைகளைப் பிடுங்கி எறிய நமக்கு அதிகாரங் கிடையாது. (பரி. மத். 13 : 28—30). திருச்சபையாகிய மாளிகையில் கனமும் கனயீனமு மான பாத்திரங்களுமுண்டு. பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ், சாத்தானின் கையாளாகவேயிருந்தான். பிற்காலத் தில் பல அப்போஸ்தலரிடமும் குறைவுகள் காணப்பட்டன. (2 கொரி. 11 : 4, 13; கலா. 2 : 6). பெந்தேகோஸ்தே நாட் களுக்குப் பின், அனனியா, சப்பீராள் ஆகிய சீஷரும் தவறி யவரே. (அப். 5 : 1—6). புதிய ஏற்பாட்டின் காலத்தில்

ஞானஸ்நானம் பெற்று திருச்சபையில் சேர்ந்த பலர் கொரிந்து சபையில் அசுத்த வாழ்க்கை நடத்தி வந்தனர். (I கொரி. 5 : 1—11). இமெனேயும், பிலேத்தும் சத்தியத்தை விட்டு விலகி, கள்ளப் போதகர்களாக மாறினர். (2 தீமோ. 2 : 16—18). இமெனேயும், அலெக்சந்தரும் நல்மனச் சாட்சியைத் தள்ளிவிட்டனர். (I தீமோ 1 : 20). தேமா இப்பிரபஞ்சத்தின் மேல் ஆசை வைத்தான்; கன்னுகிய அலெக்சந்தர் பரி. பவுலுக்கு வெகு தீமை செய்தான். (2 தீமோ. 4 : 10, 14). தியோத்திரேப்பு சபைக்குத் தீங்கிழைத்தான். (3 யோவான் 9—11).

திருச்சபையில் கள்ளச் சகோதரர்களும், கள்ளப் போதகர்களும், வேறே கிறிஸ்துவையும், வேறே சுவிசேஷத்தையும், வேறே ஆவியையும் போதித்த கள்ள அப்போஸ்தலர்களும் காணப்பட்டனர். (2 கொரி. 11 : 4, 13. 26; கலா. 1 : 6—9; 2 : 4—6; 1 தீமோ. 4 : 2). II பேதுரு 2ம் அதிகாரம் இப்படிப்பட்டவர்களையே குறித்து எழுதப்பட்டது. திருச்சபையில் பிரிவினைகளையும், இடறலையும் உண்டாக்குகிறவர்கள் இருந்தனர். (ரோமர் 16 : 17—20). பரிசுத்த ஆவியைப் பெற்றும், மறுதலித்துப் போனவர்கள் பலர் (எபி 6 : 4—6). ரோமாபுரி சபையிலும், கொரிந்து சபையிலும் லௌகீக கிறிஸ்தவர் பலர் இருந்தனர். இத்தகையோர் யாவரும் அப்போஸ்தலர் காலத்து திருச்சபையின் அங்கத்தினரே; ஞானஸ்நானம் பெற்று பரிசுத்த ஆவியின் கிருபையையும் அனுபவித்தோரே. மானிடரின் இருதயத்தின் இரகசியங்களை அறிய முடியாத மண்பாண்டங்களால், காணப்படும் திருச்சபை நடத்தப்பட வேண்டியதாயி ருப்பதால், இத்தகைய நிலை அமைந்துள்ளது. திருச்சபை பூரண பரிசுத்தமானோரால் ஆகிய சங்கமன்று; அஃது இரட்சிக்கப்படுகிறவர்களாலேயே ஆகிய குழு. (அப். 2 : 47).

கெட்டாலும் மக்கள் மக்களே.

இத்தகையோர் தாங்களாகவே திருச்சபையின் ஐக்கியத்தை விட்டு வெளியேறிக் கொள்ளாதிருக்கும் வரை, திருச்சபையின் கடிந்து கொள்ளுதலாலும், போதனையாலும், மற்றக் கிறிஸ்தவ சகோதரரின் மாதிரியாலும் சீர்திருத்தமடைகின்றனர். திருச்சபை அவர்களேயும் உடன்படிக்கையின் மக்களாகவே கருதுகின்றது. ஏனெனில் அவர்கள் ராஜ்ஜியத்தின் புத்திரர்; (பரி. மத் 8 : 12); முதல் அழைப்புப் பெற்ற விருந்தினர் (பரி. லூக்கா 14 : 16—24); முதல் முதலாக சுவிசேஷம் அறிவிக்கப்படவேண்டியவர்கள். (அப் 13 : 46).

இத்தகையோரையும் ஆதாயப்படுத்த வேண்டியது திருச்சபையின் கடமை. "நீங்கள் கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்கள் அல்ல; ஆகையால் இப்போதே உங்களே அவருக்கு ஒப்புக் கொடுங்கள்" என்று கூறி இவர்களேத் திருத்தப் பார்ப்பதை விட, "உங்கள் ஞானஸ்நானத்தில் நீங்கள் கிறிஸ்துவுடனே இணைக்கப்பட்டீர்கள். ஆகவே உங்களேச் சொந்தமாக்கிக் கொண்ட அவரிடம் திரும்புங்கள்" என அழைப்பதே சாலச் சிறந்த முறையாகும். ஞானஸ்நானம் பெற்ற பின்னும் பாவத்தில் நிலேத்திருப்போர் செய்யும் ஒரே பாவம், உடன்படிக்கைக் குள்ளிருந்தும், உடன்படிக்கைக்குப் புறம்பாக இருப்போரைப் போன்ற வாழ்க்கை நடத்துவதாம். விருத்த சேதனத்தின் மூலம் யெகோவாவைத் தகப்பனுக ஏற்றுக் கொண்ட யூதர், சீர்கெட்டுப்போன போதிலும் அவர்கள் யூதராகவே கருதப்பட்டனர். "சீர்கெட்ட பிள்ளேகளே, திரும்புங்கள்" என்றே அவர்களுக்குச் சொல்லப்பட்டது. பிள்ளேகளென்றே அவர்கள் அழைக்கப்பட்டனர். கெட்ட குமாரனேயும் தகப்பன் தன் குமாரனுகவே கருதி ஏற்றுக் கொண்டான். ஞானஸ்நானம் பெற்ற நாமனேவரும் கடவுளின் மக்களே. சீர்கேடு நம்மில் காணப்படினும், தம் சொந்தப் பிள்ளேகளாகவே கருதுகிருர். இதில் எவ்வித மாற்றமும் கிடையாது. சீர்கேடு நீங்கும்போது அவர் மகிழுகிருர்.

III. குழந்தை ஞானஸ்நானமும் சத்திய வேதமும்.

''எல்லாரும் மோசேக் குள்ளாக மேகத்திலும், சமுத்திரத்திலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள்''

வேதப் புத்தகம் 'இரு புறமும் கருக்குள்ள' பட்டயம் (எபி. 4 : 12). அதில் அடங்கியுள்ள சத்தியத்தை, அதை எழுதித் தந்த தேவ ஆவியினாலேயன்றி உலகின் எந்த ஞானியும் தன் அறிவால் அறிந்து கொள்ள முடியாது. உதாரணமாக, ஞானஸ்நானம் பற்பல விதமாய், பற்பலரால் அனுசரிக்கப்பட்டு வருகின்றது. அவ்வாறு அனுசரிப்போருக்குள் விகற்பம் காணப்படினும் அன்னார் யாவரும் வேதப்புத்தகத்தையே தங்கள் தங்கள் கொள்கைக்கு ஆதாரமாகக் கூறுகின்றனர். குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுககலா மென்போரும், வயது வந்தோருக்கு மட்டுந்தான் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் என்போரும், தண்ணீரை வார்த்துக் கொடுத்தால் போதும் என்பாரும், முழுகித்தான் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் என்பாரும், ஞானஸ்நானமே வேண்டாம் என்பாரும் (இரட்சன்னிய சேனை, அன்பர்குழு—Society of Friends) வேதத்தையே ஆதாரமாகக் கூறுகின்றனர். இதை நோக்குங்கால், சத்திய வேதத்தின் மெய்க் கருத்தை அறிந்து கொள்ளுவது எத்தனை கடினம் என்பது தெளிவாகின்றது.

நேரடி குறிப்பில்லாமை ஓர் குறைவு அல்ல.

குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கக் கூடாது என்பதற்குச் சொல்லப்படும் ஒரே காரணம், வேதத்தில் 'குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள்' என்ற நேரடியான சட்டளையோ, அன்று 'குழந்தைகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள்' என்ற தெளிவான அறிவிப்போ இல்லாமையே. இக்காரணத்தைக் கொண்டு குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பது சரியல்ல என நாம் முடிவுகட்டி விட முடியாது. சில முக்கிய கொள்கைகளுக்கும், சித்தாந்தங்களுக்கும் இத்த

கைய நேரடியான ஆதாரம் இல்லாதிருப்பதை நாம் அறிய வேண்டும். குறிப்பாக 'பெண்கள் திருவிருந்தில் பங்கு பெற்றனர்' என்றுவது, அல்லது 'பெண்களும் திருவிருந்தில் பங்கெடுக்கலாம்' என்றுவது புதிய ஏற்பாட்டில் எங்கும் சொல்லப்படவில்லை. அதே சமயத்தில் பெண்கள் திருவிருந்தில் பங்கு பெறக் கூடாதென்ற கட்டளையுமில்லை. நேரடியான ஆதாரம் இல்லை என்ற காரணத்தால், குழந்தை ஞானஸ்நானம் கூடாது என்போர், அதே விதமான நேரடி ஆதாரமற்ற மற்றொரு செயலுக்கு, அதாவது பெண்கள் நற்கருணை பெறுவதற்கு ஆதரவளிக்கின்றனர். இதற்காக அவர்கள், முதலில் திருவிருந்து ஏற்படுத்தப்பட்ட வரலாற்றையும், பின்னர் அதன் கருத்துக்களையும், முக்கியத்தையும், அதன் சம்பந்தமாகக் கிறிஸ்து பெருமானின் நோக்கத்தையும் ஆராய்கின்றனர். முடிவாகப் புதிய ஏற்பாட்டின் கிருபையின் உபதேசத்தையும் ஆராய்ந்து, 'ஆணென்றும், பெண்ணென்றுமில்லை' (கலா. 3 : 28) போன்ற வசனங்களை மகிழ்வுடன் காட்டி, திருவிருந்து ஏற்பட்டுள்ள நோக்கத்தின்படி, இது ஆண்களைப் போலவே பெண்களுக்கும் உரியதாம் என்னும் முடிவுக்கு வருகின்றனர். ஆனால் குழந்தைகள் ஞானஸ்நானம் பெறும் விஷயத்தில், இவ்வாறு ஆராய்ந்து முடிவு கட்டுவதை அத்தகையோர் ஒப்புக் கொள்ளாதிருப்பது சரியல்ல.

இவ்வாறு, ஏழாம் நாள் ஆசரிப்புக்குப் பதிலாக வாரத்தின் முதல் நாள் ஆசரிக்கப்படுவதற்கும் திட்டமான வேத ஆதாரம் கிடையாது. ஆனால் கிறிஸ்தவர்கள், நமது ஆண்டவரின் உயிர்த்தெழுதலுக்குப் பின் வாரத்தின் முதல் நாளிலே கூடிக் கடவுளைத் தொழுது கொண்டதையும், ஏழாம் நாள் ஆசரிப்பு நின்று விட்டதையும் ஆதாரமாகக் கொண்டு ஞாயிறு ஆசரிப்பை கடைபிடித்து வருகின்றனர். மேலும் புதிய ஏற்பாட்டு ஆகமங்களெல்லாம் 'பரிசுத்த வேத எழுத்துக்கள்' தான் என்பதற்கும் திட்டமான வேத ஆதாரம் காட்ட முடியாது. பரி. யோவான் 5 : 39. 'வேத வாக்கியங்களை

ஆராய்ந்து பாருங்கள்' என்பதும், II தீமோ 3 : 15, 16 'கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக் கேற்ற ஞானமுள்ளவனுக்கத் தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறு வயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும், வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது;......' என்பதும் பழைய ஏற்பாட்டு ஆகமங்களையே குறிக்கும். எனினும் நாம் பழைய ஏற்பாட்டு ஆகமங்களை விடப் புதிய ஏற்பாட்டு ஆகமங்களையே அதிகமாக மதித்து வருகிறோம்.

குழந்தை ஞானஸ்நானத்திற்கு நேரடியான ஆதாரம் வேதாகமத்தில் இல்லை என்பதால் குழந்தை ஞானஸ்நானம் தகாது என்போர், கிறிஸ்தவப் பெற்றோருக்குப் பிறந்த பிள்ளைகள், தகுந்த வயது வரும் வரை காத்திருந்து, பின்னர் தங்களின் சம்மதத்துடனேயே ஞானஸ்நானம் பெற்றார்கள் என்பதற்கு வேத ஆதாரம் காட்ட முடியுமா? புதிய ஏற்பாட்டுச் சரித்திரம் சுமார் அறுபது ஆண்டு சம்பவங்களை அடக்கிக் கொண்டிருக்கிறது. அக்கால அளவில், திரளான யூதரும், புறஜாதியாரும் கிறிஸ்தவராயினர். எனினும் அச்சரித்திர வரலாற்றில் கிறிஸ்தவ பெற்றோருக்குப் பிறந்த பிள்ளைகள் காத்திருந்து பருவங் கடந்த ஞானஸ்நானம் பெற்றனர் என்பதற்கு ஒரு குறிப்பும் கிடையாது. குழந்தை ஞானஸ்நானத்தைப்பற்றிய பிரச்சினை ஆதிச் சபையில் எழும்பவில்லை. குழந்தைகள் ஞானஸ்நானம் பெற்றிருப்பின் அதை ஒருவரும் தடுக்கவில்லை.

ஆதித் திருச்சபையும் குழந்தைகளும்.

கிறிஸ்தவப் பெற்றோருக்குப் பிள்ளைகள் பிறந்தபோது ஆதித் திருச்சபை என்ன செய்தது? இக்குழந்தைகளுக்கு உடனடியாக ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டதா? அல்லது தகுந்த வயதாகும் வரை ஞானஸ்நானம் ஒத்திவைக்கப்பட்டதா? அல்லது ஞானஸ்நானமே கொடுக்கப்படா திருந்ததா? (யூத மதத்தைச் சேர்ந்த புறஜாதியாருக்கு, அன்னார் தயூ

மதத்தைத் தழுவியதன் பின்னர் பிறந்த குழந்தைகள், ஞானஸ்நானம் பெருமல் விருத்தசேதனம் மட்டும் பெற்றனர்.) இது விஷயத்தில் ஆதிச் சபை முழுவதிலும் ஒரே ஒழுங்கு இருந்ததாகத் தெரியவில்லே. ஏனெனில் விருத்த சேதனத்தைப் பற்றி யூத கிறிஸ்தவ வட்டாரத்திலும், புறஜாதி கிறிஸ்தவ வடடாரத்திலும் ஒரே ஒழுங்கு இருக்க வில்லே. புறஜாதி கிறிஸ்தவரும் விருத்த சேதனம் பண்ணப்பட வேண்டுமென விரும்பிய யூத கிறிஸ்தவர்கள், தங்கள் குழந்தைகளுக்கு விருத்த சேதனம் பண்ணி வைத்தனர் என்பது திண்ணம். (கலா 5 : 2: அப் 15 : 1). அவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்தனரா அல்லது விருத்தசேதனமே போதுமென நினைத்தனரா? பரி. பவுலின் ஊழியத்தினுல், கிறிஸ்தவரானவர்களுக்குப் பிறந்த பிள்ளேகள் விருத்த சேதனம் பண்ணப்படவில்லே. இவ்விஷயம் புறஜாதி கிறிஸ்தவர்களின் பிள்ளேகள் சம்பந்தமாய் கலா. 5 : 2லும், யூத கிறிஸ்தவரின் பிள்ளேகள் சம்பந்தமாய் அப். 21 : 21லும் காணப்படுகின்றது. 'கிறிஸ்துவைப் பற்றும் விருத்தசேதனமாகிய' ஞானஸ்நானம் (கொலோ. 2 : 11), விருத்த சேதனத்திற்குப் பதிலாக உபயோகப்பட்டிருக்கக் கூடும்.

ஆதித் திருச்சபையில் கிறிஸ்தவப் பெற்ருேருக்குப் பிறந்த பிள்ளேகளுக்குச் செய்யப்பட்ட காரியத்தைத் தெளிவு படுத்த ஒரு சில வசனங்களே காணப்படுகின்றன—I கொரி. 7 : 14; அப் 22 : 21; பரி. மாற்கு 10 : 13—16—.

(அ) I கொரி 7 : 14 "என்னத்தினுலெனில், அவிசுவாசியான புருஷன் தன் மனேவியால் பரிசுத்தமாக்கப்படுகிறன். அவிசுவாசியான மனேவியும் தன் புருஷனுல் பரிசுத்தமாக்கப்படுகிருள். இல்லாவிட்டால் உங்கள் பிள்ளேகள் அசுத்தமாயிருக்குமே; இப்பொழுதோ அவைகள் பரிசுத்தமாயிருக்கின்றன." குழந்தைகளின் பரிசுத்தம் ஞானஸ்நானத்தினுலல்ல, கிறிஸ்தவக் குடும்பத்தில், கிறிஸ்தவப் பெறருேருக்குப் பிறந்ததினுலேயே ஏற்படுகின்றது என்பது இவ்வாக்கியத்தின் கருத்து. இதை ஒப்புக்கொள்ளப்பட்

சத்தியமாகவே பரி. பவுல் எழுதுகிறுர். இது திருச்சபையின் பிள்ளைகள் யாவருக்கும் பொருந்தும். "வேரானது பரிசுத்த மாயிருந்தால் கிளைகளும் பரிசுத்தமாயிருக்கும்." (ரோமர் 11 : 16). கொலோ 2 : 11ல் கிறிஸ்தவ ஞானஸ்நானம் விருத்தசேதனத்தின் நிறைவேறுதலாகக் கருதப்பட்டு, விருத்த சேதனத்திற்குப் பதிலாக உபயோகிக்கப்பட்டதாலும், I கொரி. 7 : 14ன் படி கிறிஸ்தவக் குழந்தைகள் பரிசுத்தராகக் கருதப்படுவதாலும், அவர்கள் குழந்தைப் பருவத்தில் ஞானஸ்நானம் பெற்றனர். இந்நிகழ்ச்சி பரி. பவுல் ஊழியஞ் செய்த இடங்களில் நடைபெற்றதைக் குறிப்பனவாம்.

(ஆ) அப். 21 : 21. "புறஜாதிகளிடத்திலிருக்கிற யூதரெல்லாரும் தங்கள் பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் பண்ணவும், முறைமைகளின்படி நடக்கவும் வேண்டுவதில்லை யென்று நீர் சொல்லி, இவ்விதமாய் அவர்கள் மோசேயை விட்டுப் பிரிந்து போகும்படி போதிக்கிறீரென்று இவர்கள் உம்மைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறுர்கள்" இவ்வசனம் எருசலேமுக்கு நம்மைக் கொண்டு போகின்றது. இதன் மூலம் நாம் கி. பி. 55ம் ஆண்டில் (அதாவது பரி. பவுல் மேற்காட்டிய வசனத்தின்படி குற்றஞ் சாட்டப்பட்ட போது) எருசலேமிலுள்ள யூத கிறிஸ்தவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு விருத்த சேதனம் செய்வித்தனர். மேலும் அத்துடன் அக்குழந்தைகள் கிறிஸ்தவ ஞானஸ்நானமும் பெற்றதாக 'டானஸற்றிஸ்ட் சிரிசானியஸ்' (Donastist Cresconius A. D. 400) எழுதியிருக்கிறுர். இவ்வாறு கிறிஸ்தவக் குழந்தைகளுக்கு விருத்த சேதனமும், ஞானஸ்நானமும் கொடுக்கும் வழக்கம், காப்ற்றிக் (Coptic) சபையிலும், அபிஸீனிய சபையிலும் இன்றும் காணப்படுகின்றது.

ஆனுல் பரி. பவுல் ஊழியஞ் செய்த இடங்களிலுள்ள யூத கிறிஸ்தவர், பரி. பவுலின் உபதேசப்படி தங்கள் குழந்தைகளுக்கு, விருத்த சேதனத்திற்குப் பதிலாக (கொலோ. 2 : 11) ஞானஸ்நானம் மாத்திரம் கொடுத்தனர்.

(இ) பரி. மாற்கு 10 : 13—16—இப்பகுதியில் இயேசு பெருமான் சிறு குழந்தைகளை ஆசீர்வதித்த வரலாறு சொல்லப்பட்டுள்ளது. இச்சம்பவம் பரி. மத் 19 : 13—15; பரி. லூக் 18 : 15—17 ஆகிய இடங்களிலும் கூறப்பட்டுள்ளது. இஃது மகா பாவ நிவாரண நாளின் மாலையில் எருசலேமில் சாதாரணமாய் நடைபெற்றதோர் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டது. பக்தியுள்ள யூதர், ஆண்கள், பெண்களான தங்களின் குழந்தைகளை மகா பாவ நிவாரண நாளில் உபவாசம் இருக்கச் செய்வார்கள். ஒரு வயது குழந்தைகள் அதிகாலை வரையும், பன்னிரண்டு வயது வரையுள்ள பிள்ளைகள் மாலை வரையும் உபவாசம் இருக்க வேண்டும். பின்னர் அவர்களைப் பெற்றோர் வேதபாரகரிடம் கொண்டு வந்து அவர்கள் அக்குழந்தைகள் மேல் கைகளை வைத்து, ஆசீர்வதித்து ஜெபிக்கச் செய்வார்கள். இவ்வாறாக கிறிஸ்துவண்டை கொண்டுவரப்பட்ட பிள்ளைகளை சீஷர்கள் தடுத்தனர். தங்கள் போதகரைச் சாதாரண வேதபாரகருக்குச் சமமாக்கியது, சீஷரைக் கோபப்படுத்தி அவ்வாறு தடுக்கச் செய்தது. கிறிஸ்துவோ, சீஷரைக் கடிந்து கொண்டு பெற்றோரின் விருப்பத்தை நிறைவேற்றினார். பிள்ளைகளைத் தம்மிடம் கொண்டுவரலா மெனவும், பரலோக ராஜ்ஜியத்தில் அவர்களுக்கு உரிமை உண்டு எனவும் விளம்பினார்.

சுவிசேஷங்களில் காணப்படும் வரலாறுகள் இருவகை சரித்திர ஸ்தானத்தை வகிப்பதாகும். ஒன்று, அவை கிறிஸ்து பெருமானின் மானிட வாழ்க்கையில் நிகழ்ந்த நிகரற்ற சம்பவங்களாயிருப்பது. மற்றது, அவை ஆதித் திருச்சபையின் உபதேசமும் போதனையுமாயிருப்பது. இவற்றில் இரண்டாவது குறிப்பின்படி இவ்வரலாற்றை ஆராயுங்கால், ஆதிச்சபை இச்சரிதையை ஏன் பாதுகாத்து வந்தது? திருச்சபைக்கு இதிலுள்ள முக்கியத்துவம் யாது, என்பன போன்ற கேள்விகள் எழும்புகின்றன. இதற்கு முதல் விடை, இவ்வரலாறு விவாகரத்துக்கும் (பரி. மாற்கு 10 : 1—12) தனவந்த

ஞன வாலிபனின் சரிதைக்கும் (பரி. மாற் 10 : 17—31) நடுவில் அமைந்துள்ளது என்பதை அறிந்து கொள்வதில் அடங்கியுள்ளது. ஆகவே கிறிஸ்துவின் மக்கள், திருமணம், சிறுவர், ஆஸ்தி இவற்றைப் பற்றி எவ்வாறு செயலாற்ற வேண்டுமென போதிப்பதாகும். இவ்வரலாறு முதன் முறையாக, கி. பி. 200ம் ஆண்டில் குழந்தைகள் ஞானஸ்நான சம்பந்தமாய் தெர்த்துல்லியனால் (De Baptism) கூறப்பட்டுள்ளது.

இயேசு பெருமான் குழந்தைகளை ஆசீர்வதித்த வரலாறு அவர் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார் என்பதற்கு நேரடியான ஆதாரமன்று. ஆனால் பரி. மாற்கு தம் சுவிசேஷத்தை எழுதிய காலத்தில், ரோமாபுரியிலும், இதர இடங்களிலுமுள்ள திருச்சபையிலும் குழந்தைகள் ஞானஸ்நானம் அமுலிலிருந்தது. அதற்கு இவ்வரலாற்றில் போதிய சான்றுகள் கிடக்கின்றன. "அவர்களைத் தடை பண்ணாதிருங்கள்" (பரி. மாற்கு 10 : 14) என்பது முதல் நூற்றாண்டு ஞானஸ்நான ஆராதனையில் காணப்படும் ஓர் முக்கிய குறிப்பைச் சுட்டிக் காட்டுகிறது. அதாவது ஞானஸ்நானம் பெற வருவோரிடம் 'ஏதாவது தடை உண்டா' என்ற கேள்வி கேட்கப்பட்டு, 'இல்லை' என தெரிந்த பின்னரே ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. ஈண்டு கிறிஸ்து பெருமானே குழந்தைகளுக்கு எவ்வித தடையும் விதிக்கலாகாதெனக் கூறியிருப்பது கவனிக்கப்பட வேண்டியதாகும்.

'கைகளை வைத்தல்' (பரி. மாற்கு 10 : 16; பரி. லூக்கா 19 : 15) ஞானஸ்நான ஆராதனையின் ஓர் சடங்காகும். இந்த வரலாற்றை வாசிக்கும் போதெல்லாம், அதைக் கேட்போர் ஞானஸ்நான ஆராதனையையே ஞாபகப்படுத்திக் கொண்டனர். இவ்வரலாற்றை எழுதுகையிலும், சுவிசேஷகர் அக்காலத்து சபைகளில் சாதாரணமாய் வழங்கி வந்த குழந்தை ஞானஸ்நானத்தைக் கருத்தில் கொண்டே எழுதினர்.

ஆதித் திருச்சபையில், ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்தவர்கள், ஞானஸ்நானம் பெருத கிறிஸ்தவர்கள் என இரு வகுப்பார் இருந்ததில்லை. பரி. பேதுரு எழுதிய முதல் நிருபம், ஓர் மாபெரும் சுவிசேட படை முயற்சிக்குப் பின் ஞானஸ்நானம் பெற்று, புதிதாக திருச்சபையில் சேர்க்கப்பட்டோருக்கு நிகழ்த்தப்பட்ட அருளுரையாகக் கருதப்படுகின்றது. இந்த அருளுரையில் பிள்ளைகளுக்கும் பெரியோருடன் சேர்த்து போதனை கொடுக்கப்பட்டிருப்பது கவனிக்கத் தக்கது. ஞாஸ்நானத்தைப் பற்றிய குறிப்புகள் ஈண்டு எதிரொலிக்கின்றன.

IV. குழந்தைகளும் கடவுளின் உடன்படிக்கையும்

"வாக்குத்தத்தமானது உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது."

கடவுள் ஆபிரகாமுடனும், அவன் சந்ததியுடனும் ஓர் நித்திய உடன்படிக்கையை ஏற்படுத்தி யுள்ளார். (ஆதி. *12 : 1—3; 15 : 1—21; 17 : 1—14; 22 : 15—24; 26 : 1—5 28 : 10—18.*). இதிலடங்கிய வாக்குத்தத்தங்களை ஆபிரகாம் விசுவாசத்தால் பற்றிக்கொண்டான். புதிய ஏற்பாடு இவ் வாக்குத் தத்தங்களின் ஆவிக்குரிய கருத்தை வெளிப்படுத்து கின்றன. இவற்றின் மூலம் கடவுள் ஆபிரகாமுக்கு சுவி சேஷத்தை அறிவித்துள்ளார் எனவும் பகரலாம் (கலா. 3 : 8). கிறிஸ்துவின் மூலம் மனுக்குலம் அடையவிருக்கும் ஆசீர்வாதங் களுக்கும், இவற்றுக்கும் சம்பந்தமுண்டு (கலா. 3 : 17, 18). யூதரிலும், புறஜாதியாரிலும் விசுவாசிகள் யாவரும் இவ் வாக்குத் தத்தங்களின்படி ஆபிரகாமின் மக்களேயாவர் (கலா. 3 : 7, 8, 14, 29; அப். 3 : 25, 26). ஆபிரகாமுக்குப் பிள்ளைகள் இல்லாதிருந்த காலத்திலேயே, அவன் அநேக ஜாதிகளுக்குத் தகப்பனாவான் என்று சொல்லப்பட்டது. ஆபிரகாமும் அதை நம்பினான். அவனது முதிர் வயதிலே அவனுக்கு ஓர் குமாரன் பிறப்பானென்பதை அறிவித்து, ஈசாக்கு பிறக்கு முன்னரே, அக்குமாரனுடன் ஓர் உடன் படிக்கையையும் கடவுள் ஏற்படுத்தினார். 'விசுவாசத்தின் நீதிக்குரிய முத்திரையை' (ரோமர் 4 : 11, 12) அவன் குமார னுக்கு அளிக்க கடவுள் கட்டளையிட்டார். ஆபிரகாமும் விசுவாசத்தினால் அவ்வாறு செய்தான். ஆபிரகாம் தன் சொந்த இரட்சிப்புக்காக, கடவுளின் உடன்படிக்கைக்குரிய ஆசீர்வாதத்திற்குள் விசுவாசத்தினால் பிரவேசித்தான். அதன் பின்பு விருத்த சேதனம் பண்ணப்பட்டான். விருத்தசேதனம் அவனை இரட்சிக்கவில்லை. கடவுளின் வாக்குத்தத்தத்தை முதலாவது விசுவாசத்தினால் பெற்று, அதன் பின்னரே

அதற்குரிய அடையாளமாகிய விருத்த சேதனத்தைப்பெற்றுக கொண்டான் (ரோமர் 4 : 11, 12). விருத்தசேதனம் ஈசாக் கையோ, மற்றெந்த யூதனையோ இரட்சிக்கவில்லை. ஆனால் தங்கள் பெற்றோரின் விசுவாசத்திற்கு முத்திரையாகவே விருததசேதனம் இருந்து வந்தது.

நாமும் நமது குழந்தைகளும் உடன்படிக்கையின் வாரிசுகளே.

ஆகவே, இப்பொழுது கிறிஸ்துவினுடையவர்களாயிருக் கும் நாமனைவரும் அந்த உடன்படிக்கையின் வாரிசுகளே. விசுவாசத்தினால் அந்த வாக்குத்தத்தத்தின் பாக்கிய சிலாக் கியங்களை நம் பிள்ளைகளுககும் உரித்தாக்கிக் கொள்ளலாம். அந்த உடன்படிக்கை நித்தியமானதால் ஆண்களுக்கும், பெண்களுக்கும் பொதுவான, விசுவாசத்தின் நீதிக்குரிய புதிய முத்திரையாகிய ஞானஸ்நானத்தை (கொலோ. 2 : 11), நம் பிள்ளைகள் குழநதை பருவத்திலேயே பெற்று ஆனந் திப்பது எவ்வளவு பொருத்தமானது.

பரி. பேதுருவும் உடன்படிக்கையின் குழந்தைகளும்.

பெந்தேகோஸ்தே தினத்தில் பாவ உணர்வடைந்த மக்கள், பேதுருவிடமும், மற்ற அப்போஸ்தலரிடமும்; "சகோ தரரே நாங்கள் என்ன செய்ய வேண்டுமென" கேட்டபோது, பேதுரு அவர்களிடம், "நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவு மன்னிப்புக்கென்று இயேசுவின் நாமத்தினாலே ஞான ஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது, உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டா யிருக்கிறது......" (அப். 2 : 37—39) என்று சொல்லி யிருப்பது கவனிக்கத்தக்கது. இவ்வார்த்தைகளைக் கேட்ட வரில் பெரும்பான்மையோர் யூதரே (அப். 2 : 10). இது விஷயத்தில் அவர்கள் தங்கள் குழந்தைகளும் உடன்படிக் கைக்குள்ளானவர்களென்பதையும், அதன் முத்திரையைப்

பெற்றவர்கள் என்பதையுமே யன்றி, இதற்கு மாறுன தொன்றையும் அறியாதவரே. அப்படிப்பட்டவர்களைப் பார்த்து, "ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் — வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும்......உண்டாயிருக்கிறது" என்கிருர். கடவுளுக்கும் குடும்பங்களுக்கும் இதுவரை ஏற்பட்டுள்ள சம்பந்தத்தில் எவ்வித மாறுதலும் ஈண்டு குறிப்பிடப்படவில்லை. அச்சமயம் குழந்தைகள் ஞானஸ்நானம் பெற தகுதியற்றவரெனக் கருதப்பட்டிருப்பின் அதைப்பற்றிய திட்டமான ஓர் கட்டளை இச்சமயம் கண்டிப்பாய்ப் பிறப்பிக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனல் அவ்விதமாக யாதொன்றும் இங்குக் கூறப்படாதிருப்பதாலும், பழைய ஏற்பாட்டில் விருத்தசேதன உடன்படிக்கையின் போது கூறப்பட்டுள்ள வாக்குத்தத்தமே ஈண்டு மீண்டும் வலியுறுத்தப்படுவதாலும், விருத்த சேதனத்தைப் போலவே ஞானஸ்நானமும் குழந்தைகளுக்குரியது என்பது இங்குப் புலனுகின்றது இச்சந்தர்ப்பத்தில் ஞானஸ்நானமானது, நமது குழந்தைகள் விஷயத்தில் கடவுளின் வாக்குத்தத்தமாயிருக்கின்றது.

மேலும் அப். 2 : 39-ல் குறிப்பிட்ட பிள்ளைகள் யாரைக் குறிக்கும்? ஆதித் திருச்சபையினர் கிறிஸ்துவின் இரண்டாம் வகை அதிசமீபத்தில் எப்படியும் தங்கள் வாழ்நாளில் இருக்குமென உறுதியாய் நம்பியிருந்ததை நாம் அறிவோம். ஆகவே பேதுரு இங்கு, வருங்கால சந்ததியைக் குறிப்பிடாமல், தமது பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்குப் பிறந்திருந்த குழந்தைகளையே குறித்துப் பேசினுர் எனக் கூற முடியும். பரிசுத்த ஆவியின் வரம் மாம்சமான யாவருக்கும் உண்டு (அப். 2 : 17; யோவேல் 2 : 28). முதியோர், வாலிபர், பிள்ளைகளுக்கும் இவ்வரம் உரியதே. பரிசுத்த ஆவியின் வாக்குத்தத்தமும், ஞானஸ்நானமும் சேர்த்தே சொல்லப்பட்டிருப்பதால் (அப். 2 : 38) அன்றையத்தினம் பெற்ருேரோடு அங்கு ஆஜராயிருந்த குழந்தைகளும் ஞானஸ்நானம் பெற்றனர் என்பது திண்ணம்.

சத்திய வேத சான்றுகள்.

சத்திய வேதத்தின் சில வசனங்கள் இவ்விஷயத்தை இன்னும் தெளிவுபடுத்துகின்றன. "பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான்" (நீதி. 22 : 6). இவ் வசனத்தில் கடவுளின் திட்டமான ஓர் வாக்குத்தத்தத்தைக் காண்கிறோம். "கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனுக்கத் தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவனென்று உனக்குத் தெரியும்" (II தீமோ. 3 : 15). இந்த வாக்கியத்தில் "சிறுவயது முதல்" என்ற பதத்திற்கு உபயோகிக்கப்பட்டுள்ள மூலபதம் (BREPHOS) ஓர் இளைஞனைக் குறியாது, ஓர் குழந்தையையே குறிப்பதாம். "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" (அப். 16 : 31) என்னும் வசனத்தின் மூலம், குடும்பத் தலைவனின் விசுவாசம், அக்குடும்பத்தைச் சேர்ந்த வயது வந்தோரை இரட்சிகக்க் கூடுமானால், அக்குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளையும் இரட்சிக்கக்கூடாதோ?

மேலும், புதிய உடன்படிக்கையைப்பற்றி எரேமியா கூறுகையில் (எரே. 31 : 31 – 34) "சிறியவன் முதல் பெரியவன் பட்டும், எல்லாரும் என்னை அறிந்து கொள்வார்கள்" என விளம்பியிருக்கின்றார். கடவுளை அறிந்து கொள்ளுவதில், கடவுளின் அருளைப் பெறுவதில் சிறியோர், பெரியோர் என வித்தியாசம் காட்டத் தேவையில்லை யென்பது புலனுகின்றது.

பழைய ஏற்பாட்டு சம்பிரதாயப்படி, கிறிஸ்துவும் அவரது அப்போஸ்தலரும், குடும்பங்களை ஒரே ஆவிக்குரிய தொகுதிகளாகவே கருதி வந்தனர். சகேயு (பரி. லூக்கா. 19 : 9). ராஜாவின் மனுஷரில் ஒருவன் (பரி. யோவான்

4 : 53), கொர்னேலிஃபு (அப். 10 : 2), லீதியாள் (அப். 16 : 14 —), சிறைச்சாலேக்காரன் (அப். 16 : 30 – 33), கிறிஸ்பு (அப். 18 : 8), ஒநேசிப்போரு (II தீமோ. 1 : 16) முதலிய குடும்பத்தலேவரின் செயல் இதை நன்கு விளக்கு கின்றது. இங்குக் குடும்பங்களிலுள்ளோர், தங்கள் குடும்பங் களிலுள்ள ஒருவரின், சாதாரணமாகத் தகப்பனின், (தகப்ப னில்லாவிடில் தாயின்) விசுவாசத்தின் மூலம் இரட்சிக்கப் பட்டதாக அறிகிறோம். நோவாவின் குடும்பமும் இவ்வாறே இரட்சிக்கப்பட்டது. ஏனெனில் கடவுள் நோவாவை நோக்கி, "நீயும் உன் வீட்டார் அனேவரும் பேழைக்குள் பிரவேசியுங் கள், இந்த சந்ததியில், உன்னே எனக்கு முன்பாக நீதி மாளுகக் கண்டேன்," என்று சொல்லுகிறுர் (ஆதி. 7 : 1). மேலும், எபி, 11 : 7-ல் விசுவாசத்திஞலே நோவா தற்காலத் திலே காணுதவைகளேக் குறித்து, தேவ எச்சரிப்புப் பெற்று, பயபக்தியுள்ளவஞகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டு பண்ணிஞன்" என்றும் சொல்லப் பட்டிருக்கிறது.

பெற்ருேரினின்று பிள்ளேகள் பிரித்துக் கூறப்படவில்லே.

கடவுளின் பார்வையில் பெற்ருேரும் அன்னவரின் மக்களும் ஒன்றேயாம். தெய்வீக நீதியின்படி பெற்ருேரே பிள்ளேகளின் அனுமதிக்கப்பட்ட பிரதிநிதிகளாவர். பிள்ளே களுக்காகச் செயலாற்றுபவருமவரே. பிள்ளேகளுக்காகவும், பிள்ளேகளின் பெயரிலும் ஆவிக்குரிய விஷயத்தில் கடமைப் பட்டோரும் பெற்ருேரே. இதுவே கடவுளின் ஒழுங்கு. இக் காரணத்தையிட்டே புறஜாதியார் யூத மதத்தில் சேருங்கால், தங்கள் கைக்குழந்தைகளுடன் உடன்படிக்கையினுட் பிரவே சித்து, குழந்தைகளுடன் ஞானஸ்நானமும் பெற்றனர். (இத்தகைய ஞானஸ்நானத்திற்கு மூன்று சாட்சிகள் தேவைப் பட்டனர்).

சுவிசேஷத்தைக் கூறி அறிவிக்க சீஷர் சென்ற போது வீடுகள் (குடும்பங்கள்) தனித் தொகுதிகளாகவே கிறிஸ்துவினல் கருதப்பட்டன. சீஷர் வரவேற்கப்பட்டு, திருவசனம் (வயது வந்தோரால்) ஏற்றுக்கொள்ளப்பட்ட போது 'சமாதானம்' அந்த வீட்டார் அனைவர் மேலும் (குழந்தைகள் உட்பட) தங்கிற்று. வசனம் ஏற்றுக் கொள்ளப்படாத போது வீட்டார் அனைவரும் 'சமாதானத்திற்கு' அபாத்திரராக கருதப்பட்டனர். (பரி. மத். 10 : 12—14.)

சவக்கடல் அருகிலுள்ள கும்ராம் (Kumram) என்ற இடத்திலுள்ள மடத்தில், சில புராதன பிரதிகள் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டன. கி. மு. 20க்கும் கி. பி. 70க்கும் இடையில் யூத குழுக்கள் இங்கு இருந்ததாகவும், தீர்க்கர் முன்னறிவிப்பின்படி புதிய உடன்படிக்கையின் காலம் ஆரம்பமாயிற்றென அவர்கள் நம்பியதாகவும், பழைய உடன் படிக்கையை ஏற்றுக்கொண்ட முறையின்படியே, புதியதையும் அவர்கள் ஏற்றுக்கொண்டதாகவும், இப்புதிய உடன் படிக்கையை ஏற்பதில் பெண்களும் குழந்தைகளும் விலக்கப் படவில்லை என்பதும் இவற்றின் மூலம் தெளிவாகின்றது.

இதைக் குறித்து, பண்டிதர் வில்லியம் ஸ்டுவட் பின்வருமாறு அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்ருர். "பழைய ஏற்பாட்டில் குழந்தைகளும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கையில் பங்கு கொண்டதற்கு ஏராளமான சான்றுகள் உள. இது பிறப்பிலிருந்தே கடவுளின் உரிமை தெளிவாக்கப்பட்ட சிம்சோன், மோசே அல்லது எரேமியா போன்ற குறிப்பிட்ட குழந்தைகள் விஷயத்தில் மட்டுமன்று, கடவுளது ஜனத்தின் குழந்தைகள் யாவரின் விஷயத்திலும் இது உண்மையே. இக்காரணத்தையிட்டே விருத்தசேதனத்தின் சின்னம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. அவர்கள் 'செங்கடல் நடுவாகக் கடந்து சென்ருர்களெனப்' புனிதர் பவுல் நினைவூட்டுகின்ருர். (Iகொரி. 10 : 1—4— இப்பகுதியில் 'எல்லாரும்' என்னும் பதம் ஐந்து தடவை கூறப்படுகிறது.) எகிப்தி

னின்று வந்த பிரயாணத்தில் பெரியவர்கள் மோசேயின் அழைப்புக்கிணங்கிப் பின் வந்தார்கள். குழந்தைகளைப் பெற்றோர் சுமந்தார்கள்; அல்லது அவர்களோடு சென்றார்கள். அக்காலத்தில் குழந்தையையும் பெற்றோரோடு ஒரு ஆளாகச் சேர்த்துக் கொள்ளப்படும் முறை பொதுவாக எங்கும் நிலவி வந்தது. ஆதலால் புதிய ஏற்பாடு, குழந்தைகள் தக்க அறிவு அடைந்த பின்னரே சேர்க்கப்படவெண்டு மென்ற எண்ணத்தை இப்பொழுது புகுத்தியிருக்குமாயின், அது நிச்சயமாகவே அதன் பக்கங்களில் உள்ளக் கிளர்ச்சியை உண்டு பண்ணுமொரு புதிய காரியமாக அறிவிக்கப்பட்டிருக்கும். ஆனால் அத்தகையதொரு கூற்றுக்குப் பதிலாக, வேறு விதமானதொரு எண்ணம் தான் நமக்குப் புலப்படுகின்றது. குழந்தைகளும் உடன்படிக்கைக் குள்ளானவர்களே என்பது சீஷர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனாலும், குழந்தைகள் இயேசுவின் கவனத்தை ஈர்க்க முடியாத அளவுக்குச் சிறியவர்களெனத்தான் அவர்கள் கருதினார்கள். ஆனால் இயேசு அதற்கு மாறாக அவர்களைத் கடிந்துகொண்டு, ‘பரலோக ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது’ (மத். 19 : 14) எனக் கூறினார். ”

ஆகவே, கடவுளின் உடன்படிக்கைகளில், பெரியோரைப் போலவே சிறியோரும் இடம் பெற்றனர் என திட்டமாகக் கூறலாம். குழந்தைகளுடனும் கடவுள் தமது உடன்படிக்கையை ஏற்படுத்தியுள்ளார். ”

V. குழந்தைகளும் வீட்டார் ஞானஸ்நானமும்.

"கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்."

புதிய ஏற்பாடு ஓர் 'மிஷனெரி' சூழ்நிலையில் எழுதப் பட்டது. ஆகவே, புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ள ஞானஸ்நான வரலாறுகளெல்லாம் 'மிஷனெரி' ஞான ஸ்நானங்களைப்பற்றியதே. அதாவது யூதரும், புறஜாதி யாரும் கிறிஸ்து மார்க்க ஐக்கியத்தினுள் ஏற்றுக்கொள்ளப் படும் போது கொடுக்கப்பட்ட ஞானஸ்நானங்களைக் குறிப் பனவாம். அதனுல் தான் குழந்தை ஞானஸ்நானத்தைப் பற்றிய நேரடி குறிப்புகள் கிடைக்கவில்லை. 'மதம் மாறி யோரின் குழந்தைகளும் பெற்ருேருடன் ஞானஸ்நானம் பெற்றனரா' என்பதே கேள்வி. இதற்கு ஓர் விடை கண்டு பிடிக்க இவ்வத்தியாயத்தில் முயலுவோம்.

வீட்டாரோடு ஞானஸ்நானம் பெற்றதைக் குறிக்கும் சில வசனங்கள் வருமாறு: I கொரி. 1 : 16 "ஸ்தேவானுடைய வீட்டாருக்கும் நான் ஞானஸ்நானம் கொடுத்ததுண்டு." அப். 16 : 15 "அவளும் (லீதியாளும்) அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்ற பின்பு... ..." அப். 16 : 33 "அவனும் (சிறைச்சாலைக்காரனும்) அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்ருர்கள்." அப். 18 : 8 "ஜெப ஆலயத் தலைவனுகிய கிறிஸ்பு என்பவன் தன் வீட்டார் அனைவரோடும் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவனுனன். கொரிந்தியரில் அநேகரும் சுவிசேஷத்தைக் கேட்டு, விசு வாசித்து ஞானஸ்நானம் பெற்ருர்கள்." இவற்றில் கிறிஸ்பு, ஸ்தேவான் ஆகியவர்களின் வீட்டார் யூத வீட்டாரையும், லீதியாள், சிறைச்சாலைத் தலைவன் ஆகியவர்களின் வீட்டார் புறஜாதி வீட்டாரையும் குறிக்கும். வீட்டார் என்னும் பதம், தகப்பன், தாய், வயது பேதமின்றி எல்லாப் பிள்ளைகளையும்,

அந்த வீட்டைச் சேர்ந்த வேலைக்காரரையும் அவர்களின் குழந்தைகளையும் குறிக்கும். வீட்டார் அனைவரோடும் ஞான ஸ்நானம் பெற்றார்கள் என்பதில், வீட்டிலுள்ள குழந்தை களும் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்பது தெளிவாகின்றது. மற்றப்படி 'ஸ்தேவானுடைய வீட்டாரில் வயது வந்தவர் களுக்கு நான் ஞானஸ்நானம் கொடுத்தேன்' என எழுதப் பட்டிருக்கவேண்டும்.

வீட்டார் என்பதின் கருத்து.

"வீட்டார்" அல்லது "வீட்டார் அனைவரும்" என்னும் வார்த்தைகளை புதிய ஏற்பாட்டில் உபயோகித்தோர், எந்தக் கருத்தில் அவற்றை உபயோகித்தனர் என்பதை அறிய வேண்டுமாயின், அன்னாருக்குப் பழக்கமான பழைய ஏற் பாட்டில் அவ்வார்த்தைகள் எந்தக் கருத்தில் உபயோகிக்கப் பட்டுள்ளது என்பதை முதலில் அறிந்து கொள்ளுவது நலம்.

1. தகப்பனுடன் உணவருந்தும் யாவரையும் குறிக் கிறது. எண். *18 : 31*; உபா. *12 : 7; 14 : 26; 15 : 20.*

2. தகப்பனுடன் அடைக்கலம் புகும் யாவரையும் குறிக் கிறது. I சாமு. *27 : 3*; ஆதி. *7 : 1.*

3. தகப்பனுடன் குடிபெயர்ந்து போகும் யாவரையு குறிக்கிறது. II சாமு. *2 : 3; 15 : 16*; ஆதி, *36 : 6.*

4. தகப்பனுடன் ஆசீர்வதிக்கப்படும் யாவரையும் குறிக்கிறது. I சாமு. *25 : 6*; II சாமு. *6 : 11.*

5. தகப்பனுடன் விடுதலை பெறுவோர் யாவரையும் குறிக்கிறது. எரே. *38 : 17.*

6. தகப்பனுடன் வாதிக்கப்படுவோரைக் குறிக்கிறது. ஆதி. *12 : 17.*

7. தகப்பனுடன் அழிவுக்கு ஏதுவானவர்கள் யாவரையும் குறிக்கிறது. ஆதி. 34 : 30; நியா. 18 : 25; எஸ்தர். 4 : 14.

8. தகப்பனுடன் சுட்டெரிக்கப்படுவோர் யாவரையும் குறிக்கிறது. நியா. 14 : 15.

9. தகப்பனுடன் மடிந்தவர்கள் யாவரையும் குறிக்கிறது. I சாமு. 22 : 16, 19.

10. தகப்பனுடன் கடவுளைத் தொழுது கொள்வோர் யாவரையும் குறிக்கிறது. யோசுவா. 24 : 15.

11. தகப்பனுடன் பலி செலுத்தப்போகும் கூட்டத்தைச் சேர்ந்த யாவரையும் குறிக்கிறது. I சாமு. 1 : 21. (இக் கூட்டத்துடன் சாமுவேலும் சென்றிருக்கவேண்டும். ஆனால் அவன் செல்லவில்லையாதலால் அதற்குக் காரணம் I சாமு. 1 : 22-ல் கூறப்பட்டிருக்கின்றது.)

12. தகப்பனுடன் விருத்தசேதனம் பண்ணப்பட்ட எல்லா ஆண் பிள்ளைகளையும் குறிக்கிறது. ஆதி. 17 : 23.

மேற்காட்டிய வசனங்களை ஆராயுங்கால், வீட்டார் எனக் குறிப்பிடுகையில் குழந்தைகள் எல்லாம் அவற்றில் அடங்கியேயிருந்தனரென்பது தெளிவு. வீட்டாருக்கு விளக்கம் தேவைப்படும் போது, பிள்ளைகளும் அதில் அடங்கியிருந்தனர் என்பது விபரமாய்க் காட்டப்பட்டிருக்கின்றது.

1. ஆதி 17 : 23 "அப்பொழுது ஆபிரகாம் தன் குமாரனாகிய இஸ்மவேலையும், தன் வீட்டிலே பிறந்த யாவரையும், தான் பணத்திற்குக் கொண்ட அனைவருமாகிய தன் வீட்டிலுள்ள ஆண் பிள்ளைகள் எல்லாரையும் சேர்த்து, தேவன் தனக்குச் சொன்னபடி, அவர்கள் நுனித்தோலின் மாம்சத்தை அந்நாளிலேதானே விருத்தசேதனம்பண்ணினான்."

2. ஆதி. 17 : 27. "வீட்டிலே பிறந்தவர்களும் அந்நியரிடத்திலே பணத்திற்குக் கொள்ளப்பட்டவர்களுமாகிய அவன் வீட்டு மனுஷர்கள் எல்லாரும் அவனோடே கூட விருத்தசேதனம் பண்ணப்பட்டார்கள்."

3. I சாமு. 22 : 16, 19 "ராஜாவோ: அகிமெலேக்கே, நீயும் உன் தகப்பன் வீட்டார் அனைவரும் சாகவே சாகவேண்டும் என்றார்.........ஆசாரியர்களின் பட்டணமாகிய நோபிலுமுள்ள புருஷரையும், ஸ்திரீகளையும், பிள்ளைகளையும், குழந்தைகளையும், மாடுகளையும், கழுதைகளையும், ஆடுகளையும் பட்டயக்கருக்கினால் வெட்டிப்போட்டான்."

'வீட்டார்' என்று கூறப்பட்டுள்ள ஒரு இடத்திலாவது குழந்தைகள் விட்டுவிடப்பட்டதில்லை.

I கொரி. 1 : 16-ல் சொல்லப்பட்டுள்ள ஸ்தேவானுடைய வீட்டார், அப். 16 : 15-ல் கூறப்பட்டுள்ள லீதியாளும் அவளுடைய வீட்டாரும், அப். 16 : 33-ல் குறிப்பிட்டுள்ள பிலிப்பி பட்டணத்து சிறைச்சாலைக்காரனும் அவன் வீட்டார் அனைவரும், அப். 18 : 8-ல் நாம் வாசிக்கிற கிறிஸ்பு என்பவனும் அவன் வீட்டார் அனைவரும் ஞானஸ்நானம் பெற்றனர் என கூறப்பட்டுள்ளது. மேற்காட்டிய நான்கு இடங்களிலும் குறிக்கப்பட்டுள்ள வார்த்தை குடும்பத்தைச் சேர்ந்த வயது வந்தவரை மட்டும் குறிப்பிடுவதன்று. இதற்குமாறாக குடும்பத்தைச் சேர்ந்த யாவரையும், குழந்தைகளையும் உட்படுத்தி கூறப்படுவதாகும். ஆகவே வீட்டார் ஞானஸ்நானம் பெற்றபோது குழந்தைகள் ஒருபோதும் விலக்கப்பட்டிருக்கவில்லை என்பது வெளிப்படை.

குடும்பத் தலைவன் வழியே குழந்தைகள் வழி.

முற்காலத்தில் குடும்ப ஒருமைப்பாடு நன்கு மதிக்கப்பட்டு வந்தது. குடும்பத் தலைவனால் ஒப்புக் கொள்ளப்பட்ட முடிவை அக்குடும்பத்தைச் சேர்ந்த மற்றோர் யாவரும் ஒப்புக் கொள்ளக்

கடமைப் பட்டவராவர். மத சம்பந்தமாகவும் இதுவே பிரமாணம். அப். 16 : 30—34 வரையுள்ள வரலாறு இதை உறுதிப்படுத்துகின்றது. "ஆண்டவன் மாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்" என்ற சிறைச் சாலைக் காரன் கேள்விக்கு, "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" என்று சொல்லப்பட்டது மன்றி, 'அவனும் அவனுடையவர்கள் அனைவரும்' ஞானஸ்நானம் பெற்றதாகக் கூறப்பட்டுள்ளது. குடும்பத்தலைவனின் மத மாற்றம் குடும்பத்திலுள்ள யாவரையும் பாதிக்கின்றது.

அப். 16 : 14—15ல் லீதியாளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றவரலாறு கூறப்பட்டுள்ளது. லீதியாள் ஓர் விதவையாகவும், தனது குடும்பத்திற்கு அவளே தலைவியாகவும் இருந்தாள் எனக் கருதப்படுகின்றது. ஈண்டு அவள் மதம் மாறியதால், அவள் வீட்டாரும் அவள் வழியைப் பின்பற்றி ஞானஸ்நானம் பெற்றனர். இவ்வாறு குடும்பமாக மதம் மாறுகையில் குழந்தைகளும் ஞானஸ்நானம் பெருதிருக்க முடியாது.

இந்த நமது முடிவு 'யூத மார்க்கத்தமைந்தவர்கள்' (Proselytes) பெற்ற ஞானஸ்நானத்தால் உறுதிப்படுத்தப் படுகின்றது. புறஜாதியார் யூத மார்க்கத்தைத் தழுவும் போது செய்து கொள்ள வேண்டிய சடங்குகளில் ஞானஸ்நானம் பெறுவதும் ஒன்று. அவ்வாறு ஞானஸ்நானம் பெறுங்கால் வீட்டாரோடு அதாவது கைக் குழந்தைகளுடனும் ஞானஸ்நானம் பெற்று வந்தனர். ஆதிச்சபையில் கிறிஸ்து மதத்தைத் தழுவ விரும்புவோர், சாதாரணமாய், மூன்ருண்டுகள் பயிற்சி பெறுவர். பின்னர் குறிப்பிட்ட தினத்தில் (பெரும்பாலும் உயிர்த்தெழுந்த பண்டிகையில்) ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வந்து கூடுவர். ஞானஸ்நானம் மூன்று பிரிவாக கொடுக்கப்படும். முதலில் குழந்தைகள் ஞானஸ்நானம் பெறுவர். தங்களுக்காக உத்தரவு சொல்லக் கூடிய

யாவரும் அவ்வாறு செய்ய வேண்டும். ஆனால் பேசக் கூடாத குழந்தைகளுக்காக, பெற்றோராவது, அக்குடும்பத்தைச் சேர்ந்த வேறு யாராவது மாறுத்தரம் சொல்ல வேண்டும். பின்னர் வயது வந்த ஆண்களும், கடைசியாக வயது வந்த பெண்களும் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுவது வழக்கம். (இவ்வரலாறு 'அப்போஸ்தலர் பாரம்பரியம்' என்னும் மிகப் பழைய நூல் ஒன்றில் சொல்லப்பட்டுள்ளது.)

கிறிஸ்தவ ஞானஸ்நானம் குடும்ப ஞானஸ்நானமே.

புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவ ஞானஸ்நானம் பத்து தடவைகளில் நடைபெற்றதாக எழுதப்பட்டுள்ளது.

(1) பெந்தேகோஸ்தே தினத்தில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் அப். 2 : 41.

(2) சமாரியாவில் ஞானஸ்நானம். அப். 8 : 12.

(3) எத்தியோப்பிய மந்திரியின் ஞானஸ்நானம். அப். 8 : 27 - 38.

(4) சவுலின் ஞானஸ்நானம். அப். 9 : 1—18.

(5) கொர்நேலியுவின் வீட்டில் ஞானஸ்நானம். அப். 10 : 47.

(6) லீதியாளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றது. அப். 16 : 15.

(7) சிறைச்சாலைக்காரனும் அவனுடையவர்கள் அனைவரும் ஞானஸ்நானம் பெற்றது. அப். 16 : 32, 33.

(8) கிறிஸ்பு என்பவனும் அவன் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றது. அப். 18 : 8.

(9) எபேசுவில் யோவானின் சீஷர் ஞானஸ்நானம் பெற்றது. அப். 19 : 1—5.

(10) ஸ்தேவானுடைய வீட்டார் ஞானஸ்நானம் I கொரி. 1 : 16. இவற்றில் 2, 3, 4, 9 ஆகிய நான்கு எண்களில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் தவிர, இதர ஆறு இடங்களிலும் குடும்பங்களின் ஞானஸ்நானமே குறிப்பிட்டிருப்பதைக் கவனிக்குங்கால் அப்போஸ்தலர் காலத்தில் (குழந்தைகளடங்கிய) வீட்டார் ஞானஸ்நானம் சாதாரண சம்பவமாகவே இருந்திருக்கின்றது.

I கொரி. 10 : 1, 2ல் பரி. பவுல் எடுத்துக் காட்டும் ஓர் சிறந்த காட்சியைக் கற்பனை செய்யுங்கால், ஆறுலட்சம் காலாட்களும், அன்னவரின் குடும்பத்தாரும், பால் குடிக்கும் குழந்தைகள் உட்பட சிவந்த சமுத்திரத்தைக் கடந்து வருகையில், கடவுளின் ஓர் அரிய சாதனையினால், அத்திரள் கூட்டம் "மோசேக்குள்ளாக" ஞானஸ்நானம் பண்ணப்பட்ட மக்களாகக் காட்சியளிக்கின்றனர். ஒருவரும் எண்ணக் கூடாத திரள் கூட்டமான திருச்சபையின் மக்கள் யாவரும், வயது பேதமின்றி "கிறிஸ்துவுக்குள்" ஞானஸ்நானம் பெற்று அவரது மக்களாகக் காட்சியளிப்பதை இவ்வரலாற்றின் காட்சி முன் குறிக்கின்றது.

VI, விசுவாசமும் குழந்தைகள் ஞானஸ்நானமும்.

"விசுவாசமுள்ளவனுகி ஞானஸ்நானம் பெற்றவன் ரட்சிக்கப் படுவான் : விசுவாசியாதவனே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்." பரி. மாற்கு 16 : 16.

"இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக, ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரிது; நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக் கடவது என்றார். அந்நேரமே அவள் மகள் ஆரோக்கியமானுள்" பரி. மத். 15 : 28.

"அங்கே படுக்கையிலே கிடந்த ஒரு திமிர்வாதக்காரனை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். இயேசு அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி; மகனே, திடன்கொள், உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார்." பரி. மத். 9 : 2.

மேலே குறிப்பிட்டுள்ள பரி. மாற்கு 16 : 16 ஐ சொல்லர்த்தமாக ஆராயின், குழந்தைகளுக்கு விசுவாசிக்கும் சக்தியில்லாதபடியால் அவர்கள் இரட்சிப்படைய முடியாதெனவும் அந் நிலையில் குழந்தைகள் யாவரும் ஞானஸ்நானம் பெறத் தகுதியற்றவர்களாயிருப்பதால் ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப் பட்டு, பரலோக ராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்க அருகதையற்றவர்கள் என்றே முடிவு கட்ட வேண்டியதாகின்றது. ஆனுல், குழந்தை ஞானஸ்நானத்தை ஆதரிப்போரும், அதை நிராகரிப்போரும் ஏக வாக்காக, பரலோகத்தில் குழந்தைகளும் இருப்பதாகவே கூறுகின்றனர். மேற் கூறிய வசனத்தை எழுதிய பரி. மாற்கு தானும், தமது சுவிசேஷத்தில் மற்றுமொரு இடத்தில் (10 : 14) "தேவனுடைய ராஜ்ஜியம் அப்படிப்பட்டவர்களுடையது" என கிறிஸ்து பெருமானே சொல்லியதாக எழுதியுள்ளார். குழந்தைகளும் வாக்குத்தத்தத்தின் சுதந்தரவாளிகளே. தாங்களாகவே ஓர் வழியைத் தெரிந்தெடுக்கும் காலம் வருமுன்னர், குழந்தைகள் மரிப்பின், அவர்களின் இரட்சிப்பைப் பற்றி திருச்சபையும், பக்தியுள்ள பெற்றோரும், கவலைப்பட நிமித்தமில்லை. ஏனெனில் கிறிஸ்த

வக் குழந்தைகள், தங்கள் பெற்ருேருடன் கிருபையின் உடன் படிக்கைக்குட்பட்டிருப்பதால், அவர்களின் இரட்சிப்பைப் பற்றி பெற்ருேர் சந்தேகிக்க வேண்டியதில்லே யென்பதே வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய சித்தமாம்.

ஆதாமின் பிள்ளேகள் கிறிஸ்துவின் பிள்ளேகளாதல்.

சிறு பிள்ளேகளும் பரலோக ராஜ்ஜியத்தில் இருக்கிருர்கள் என்பதை, குழந்தை ஞானஸ்நானத்தை ஒப்புக் கொள்ளாதோரும் நம்புகின்றனரென ஏற்கனவே கவனித்தோம். குழந்தைகள் எப்படி பரலோக ராஜ்ஜியத்தை அடைந்தார்கள்? பரிசுத்தமாக்கப்படாமலும், மறுபிறப்படையாமலும் பரலோக ராஜ்ஜியத்தின் பிரஜையாக முடியுமா? ஆதாமின் மக்களாகவே இருந்து கொண்டு நித்திய ஜீவனே அடைய முடியுமா? ஆதாமுக்குள் யாவரும் மரித்து, கிறிஸ்துவின் மூலமாய் மாத்திரம் நித்திய ஜீவனேப் பெற்றுக் கொள்ளுகிருேமே. அப்படியாயின் குழந்தைகளும் கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவங்களாக வேண்டியதாகின்றது. ஜென்ம சுபாவத்தின்படி நாமனேவரும் பாவ ஆக்கினேக் குட்பட்டிருக்கிருேம் என்று வேதம் கூறுகின்றது. ஆகவே குழந்தைகள் தேவ ராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்க, அவர்களின் ஜென்ம சுபாவம் ஒழிக்கப்பட வேண்டும். "மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்ஜியத்தைச் சுதந்தரிக்க மாட்டாது." ஆகவே குழந்தைகள் பரலோக ராஜ்ஜியத்தின் சுதந்தரராவதற்கு, அன்னவரின் விழுந்து போன நிலே அழிக்கப்பட வேண்டும். தாம் ஒருவர் மாத்திரமே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருப்பதாக கிறிஸ்து பெருமான் கூறியிருக்கிருர். மரணத்தின் ஆதிக்கத்தினின்று விடுதலே பெற, குழந்தைகள் கிறிஸ்துவுக்குள் வரவேண்டியதாகின்றது. ஆகவே குழந்தைகளும் ஆதாமிடமிருந்து கிறிஸ்து வண்டையும், கிரியையின் உடன்படிக்கையினின்று கிருபையின் உடன்படிக்கைக்கும், ஜென்மசுபாவத்தினின்று கிருபையினிடத்திற்கும் கடந்து செல்ல வேண்டியதாகின்றனர்.

கிறிஸ்தவக் குழந்தைகள் ஆதாமின் பிள்ளைகளாயிருப்பதால் அல்ல, கிறிஸ்துவின் பிள்ளைகளாயிருப்பதாலும், அவர் தமது ஜீவனில் அவர்களைப் பங்குபெறச் செய்வதாலும் பிள்ளைகள் பரலோக ராஜியத்தில் பிரவேசிப்பது சாத்தியமாகின்றது. ஆகவே கிறிஸ்தவக் குழந்தைகள் உயிரோடிருப்பினும்,மரிப்பினும் கடவுளின்வாக்குத்தத்தத்தில் மாத்திரமல்ல பரமராஜ்ஜியத்திலும் பங்கு பெறுகின்றனர். மேலும் அவர்கள் கிறிஸ்துவின் இரத்தத்தால் இரட்சிக்கப்பட்டு மீட்கப்படுகையில் இரட்சிக்கப்படுவதற்கும் அங்கத்தினராவதற்கும் அடையாளமான ஞானஸ்நானத்தைப் பெற தகுதியுள்ளவரே. ஞானஸ்நானத்தில் அடங்கியுள்ள கருத்துக்கள் குழந்தைகளில் நிறைவேறும் போது அதன் அடையாளத்தை (ஞானஸ்நானத்தை) அளிப்பது எவ்வகையில் குற்றமாகும்? கடவுள் நமக்குப் பின் வரும் சந்ததிக்கும் தாமே கடவுளாக இருப்பதாக வாக்களிப்பதால் நம் பிள்ளைகள் பிறக்கு முன்னதாகவே அவர்களை தமக்கென்று சுவிகரித்துக் கொள்ளுகிறார். (ஆதி. 17 : 7) இந்த வாக்குத்தத்தத்தின் பேரிலேயே அவர்களின் விசுவாசம் நிலைத்திருக்கின்றது. இதை மறுப்பது கடவுளின் வாக்குத்தத்தத்தையேமறுப்பதாகும்.ஞானஸ்நானம் கடவுளின் இந்த வாக்குத் தத்தத்தை உறுதிப்படுத்துவதாம். வெறும் அடையாளமாக மட்டும் இதைக் கருத முடியாது. கிறிஸ்தவப் பெற்றோருக்குப் பிறந்த பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்படுவது, அன்னார் அதற்கு முன் கடவுளுக்குச் சொந்தமானவர்கள் அல்லவென்றும், ஞானஸ்நானத்தின் மூலமாகவே கடவுளின் பிள்ளைகளாகிறார்கள் என்றும் கருதப்படாமல், அவர்கள் கிறிஸ்துவின் சரீரத்தில் அவயவங்களாயிருப்பது, ஞானஸ்நானத்தின் மூலமாகத் தெரிவிக்கப்படுகிறது என்பதாக கல்வீன் கூறியிருக்கிறார்.

குழந்தைகளும் ஞானஸ்நான நிபந்தனைகளும்.

குழந்தை ஞானஸ்நானத்தை நிராகரிப்போர், ஞானஸ்நானம் பெறுபவர் எவராயினும் (குழந்தைகளாயினும் வயது

வந்தோராயினும்) ஒரே வகையான நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டுமென வற்புறுத்த விரும்புகின்றனர். ஆனால் விருத்தசேதன ஏற்பாட்டின் மூலம் கடவுள், வயது வந்தோருக்கும், குழந்தைகளுக்கும் இச்சாக்கிரமெந்து அளிக்கப்படுவதில் வித்தியாசம் காட்டப்பட வேண்டுமென்பதை வேதத்தின் மூலம் தெளிவுபடுத்தியிருக்கிறார். விருத்தசேதனம் ஓர் ஆவிக்குரிய சாக்கிரமெந்து. வயது வந்தோர் இச்சாக்கிரமெந்தைப் பெறுகையில் விசுவாசமும், மனந்திரும்புதலும், தெய்வ நெறிப்படி ஒழுகுதலும் அவர்களிடம் எதிர்பார்க்கப்படுகின்றது. புதிய ஏற்பாட்டில் விருத்தசேதனத்திற்கும் ஞானஸ்நானத்திற்கும் அதிக வித்தியாசம் காட்டப்படவில்லை. (கொலோ *2 : 11—12*). ஞானஸ்நானம் விருத்தசேதனத்திற்குப் பதிலாக அமைந்துள்ளது.

வயது வந்தோர் விருத்தசேதனம் பெறுகையில், பல்வேறு காரியங்களை நிறைவேற்றக் கடமைப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு செயலாற்ற முடியாத நிலையிலுள்ள உடன்படிக்கையின் குழந்தைகளும் விருத்தசேதனம் பெற வேண்டுமென்பது வெளிப்படை. விசுவாசமும் மனந்திரும்புதலும் விருத்தசேதனம் பெற வேண்டிய வயது வந்தோரிடம் எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அவற்றை நிறைவேற்ற முடியாத குழந்தைகளும் விருத்தசேதனம் பெற வேண்டுமென்பதே தெய்வ தீர்மானம். விருத்தசேதனமாகிய அடையாளத்தைப் பெறு முன்னர் ஆபிரகாம் விசுவாசிக்க வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது? விசுவாசிக்கக் கூடிய நிலையை அடையாத ஈசாக்கு, அந்நிலையை அடையாதிருக்கையில் எவ்வாறு விருத்தசேதனமாகிய அடையாளத்தைப் பெற்றான்? உடன்படிக்கைக்குப் புறம்பாகவுள்ள வயது வந்தோர், உடன்படிக்கையின் கருத்துக்கள் எவை என்பதை முதலில் அறிந்து கொண்டதின் பின்னரே அதனுட் பிரவேசித்து, அதன் முத்திரையைப் பெற வேண்டியதாயிற்று. ஆனால் அத்தகையோருக்கு (உடன்படிக்கைக் குட்பட்டவருக்கு) பிறந்த பிள்ளைகள், தங்கள் பெற்றோருக்குக் கடவுள் அளித்த வாக்குத்தத்தத்தின் வாரிசுகளா

தலால், அந்த உடன்படிக்கை என்ன வென்பதை அறிந்து கொள்ளும் சக்தியை அடையுமுன்னரே அதன் முத்திரையை யும் அடையாளத்தையும் பெறுகின்றனர்.

கடவுளின் கட்டளைப்படி. வயது வந்தோர் விசுவாசமும் மனந்திரும்புதலுமின்றி விருத்தசேதனம் பெற முடியாது. ஆனால் விசுவாசிகளின் குழந்தைகள் உடன்படிக்கையின் புத்திரராயிருப்பதே போதுமானது. இவ்விரு காரியங்களிலும் விருத்தசேதனத்தின் அடிப்படை ஒன்றேயாம் — அதாவது உடன்படிக்கையினுள் பிரவேசிப்பதற்கு அடையாளமாகவும், முத்திரையாகவுமிருப்பது. வயது வந்தோர் விசுவாசத்தினால் அதனுள் பிரவேசிக்கிறார்கள். குழந்தைகளோ கடவுளின் ஒரு மகத்துவ தீர்மானப்படி அதனுள் வந்து அமைகின்றனர்.

விருத்தசேதனமும் ஞானஸ்நானமும்.

குழந்தைகள் விருத்தசேதனம் பெறவேண்டுமென்ற கட்டளை நீதியும், தகுதியுமாயிருப்பதாலும் ஞானஸ்நானம் விருத்தசேதனம் ஆகிய இரு சாக்கிரமெந்துகளும், வாக்குத் தத்தத்திலும் ஒப்பனையிலும், சாரத்திலும், காரணத்திலும், நோக்கத்திலும், வழக்கத்திலும், பலிதமாகுதலிலும் ஒத்திருப்ப தாலும், குழந்தைகள் விருத்தசேதனம் பெறுவதை ஒப்புக் கொண்டு, குழந்தைகள் ஞானஸ்நானம் பெறுவதை நிராகரிப் பது நியாயமன்று.

இஸ்ரவேலின் குழந்தைகள், விருத்தசேதனத்தைப்பற்றிய சரியான அறிவு அற்றவராயினும், எட்டாம் நாளில் விருத்த சேதனம் பெற்று, பகுத்தறிவு ஏற்படும் போது அவற்றைப் பற்றிய போதனை பெறுகின்றனர். கிறிஸ்தவரின் குழந்தை கள், தாங்கள் ஞானஸ்நானம் பெறும் குழந்தைப் பருவத்தில் மனந்திரும்புதல், விசுவாசம் இவற்றின் கருத்துக்களை அறியக் கூடாத நிலையிலிருப்பினும், ஞானஸ்நானம் பெற்று, மனந் திரும்புதல், விசுவாசம் இவற்றைத் தொடர்ந்து ஏற்றுக் கொள்ளுகின்றனர். வயது வந்தோரைப் பொறுத்தவரை

விசுவாசம் அவர்களை ஞானஸ்நானத்திற்கு வழி நடத்து கிறது. ஆனால் குழந்தைகள் சம்பந்தப்பட்டவரை, ஞான ஸ்நானம் அவர்களை விசுவாசத்திற்கு வழி நடத்துகின்றது. விசுவாசத்தின் ஆரம்ப நிலை ஞானஸ்நானம் என பண்டிதர் குல்மேன் (O. Cullamann) கூறியிருக்கிறார். பண்டிதர் ஜாண் பெய்லி (Dr. John Baillie) என்பாரும், மெய்யான கிறிஸ்தவ வாழ்க்கை குழந்தைகள் ஞானஸ்நானத்தின் மூலம், கிறிஸதவ சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்போது, ஆரம்பமாவதாக எழுதியிருக்கின்றார். கிறிஸ்து பெருமானும் ஞானஸ்நானம் கொடுத்ததின் பின்னரே, உபதேசம் பண்ணுங் கள், (பரி. மத். 28 : 19—20) என்றே கூறி இருக்கிறார். குழந்தை ஞானஸ்நானத்திற்கு விரோதமாய் எழும்பும் ஆட் சேபனைகளெல்லாம், கடவுளால் ஏற்படுத்தப்பட்ட குழந்தை களின் விருத்தசேதனத்திற்கு விரோதமாகக் கூறப்பட வேண்டியவைகளே. இது தெய்வ நியமத்தை ஆட்சேபிப்ப தாகுமன்றோ.

விசுவாசமும் அற்புதங்களும்.

இயேசு பெருமானின் பூலோக வாழ்க்கையில், அவரை விசுவாசித்து, அவரது அற்புதச் செயல்களில் நம்பிக்கை வைத்தோர் மாத்திரம் தங்களின் வியாதி நீங்கி குணமடைந் தனர். இஃது பொதுவான ஓர் சத்தியம். விசுவாசம் இல்லாத இடத்தில் அவர் அற்புதம் செய்யக்கூடாது போயிற்று. (பரி. மாற்கு. 6 : 5, 6) எனவும் கூறப்பட்டுள்ளது. ஆனால் விசுவாசிக்கும் சக்தியற்ற நிலையிலுள்ளோருக்கும், பிறர் விசுவாசத்தை (Vicarious faith) ஆதாரமாகக் கொண்டே கிறிஸ்து பெருமான் தமது சுகமளிக்கும் அற்புத செயல்களை நடப்பித்ததாகவும் நாம் அறிவோம்.

1. பெற்றோர் விசுவாசம் பிள்ளைகளுக்கு சுகமளிக்கும் அற்புதம் நடைபெறச் செய்ய போதுமானது.

பரி. மத்தேயு 15 : 28 "இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரிது: நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார். அந்நேரமே அவள் மகள் ஆரோக்கியமானாள்." சீரோபேனிக்கா தேசத்துப் பெண்ணின் மகளிடம் எவ்வித விசுவாசமும் கிடையாது. இந்நிலையில் அவளிடம் சுகமளிக்கும் அற்புதம் நடைபெறவும் முடியாது. ஆனால் தாயின் விசுவாசமே மகளிடம் சுகமளிக்கும் அற்புதம் நடைபெற போதுமானதாயிருந்தது.

பரி. மாற்கு. 9 : 17—27, ஊமையான ஒரு ஆவி பிடித்திருந்தவனைக் குணப்படுத்த கிறிஸ்து பெருமான் விரும்பிய போது, அந்தப் பையனிடம், "நீ விசுவாசிக்கிறாயா?" என்று கேட்கவில்லை. அவன் விசுவாசிக்கக்கூடிய நிலையிலில்லை. ஆனால் அவன் தகப்பனைப் பார்த்து, "நீ விசுவாசிக்கக் கூடுமானால் ஆகும்" என்றே சொல்ல, அவன் "விசுவாசிக்கிறேன், ஆண்டவரே" என தன் குமாரனுக்காகப் பதிலளிக்கிறான். தகப்பனின் விசுவாசத்தை ஏற்றுக்கொண்டு, மகனைக் குணமாக்குகிறார். (குழந்தைகள் ஞானஸ்நான ஆராதனையிலும் இவ்வண்ணமாகவே கேள்விகள் கேட்கப்பட்டு மறுமொழி சொல்லப்படுவதை நாம் அறிவோம்.)

பரி. லூக். 8 : 50. "இயேசு அதைக் கேட்டு பயப்படாதே; விசுவாசமுள்ளவனாயிரு. அப்பொழுது அவள் ரட்சிக்கப்படுவாள் என்றார்." ஜெப ஆலயத் தலைவனாகிய யவீருவின் மகள் மரித்துப்போனாள். அவள் ரட்சிக்கப்பட, உயிர்பெற அவளிடம் விசுவாசம் இருந்தேயாகவேண்டும். ஆனால் மரித்தவளிடம் விசுவாசம் ஏது? ஆகவே அவள் தகப்பனின் விசுவாசம் அச்சிறு பெண் இரட்சிக்கப்பட போதுமானதாயிருந்தது.

II தெச. 3 : 10 "ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று........கட்டளை

யிட்டோமே" இது ஓர் பொதுவான கட்டளை. "விசுவாசமுள்ளவனுகி ஞானஸ்நானம் பெற்றவன் ரட்சிக்கப்படுவான்" என்பதைப் போன்றது. ஆனுல் வேலை செய்யும் பிராயமும் மனதும் வரும் வரை, நாம் இக்கட்டளையை அமுல் நடத்தி குழந்தைகளைப் பட்டினியாகப் போடுகிறதில்லை. பெற்ரேரின் உழைப்பால் அப் பிள்ளைகள் போஷிக்கப்படுகிருர்கள். பெற்ரேரின் உழைப்பு ஓர் காலம் வரை குழந்தைகளின் போஷிப்புக்குப் போதியதாக விருக்குமாப்போல், பிள்ளைகள் விசுவாசிக்கும் நிலையை அடையும் வரை, பெற்ரேரின் விசுவாசம் பிள்ளைகளுக்குப் போதுமானதே.

2. ஒருவர் விசுவாசம் மற்ருெருவரை ரட்சிக்கிறது: பரி. மத் 9:2. "அங்கே படுக்கையில் கிடந்த ஒரு திமிர்வாதக்காரனை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். இயேசு அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டு, திமிாவாதக்காரனை நோக்கி: மகனே திடன் கொள். உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்ருர்." பாவத்தின் தண்டனையாக திமிர்வாதத்தால் பீடிக்கப்பட்டவனை, அவன் நண்பர்கள் கிறிஸ்துவின் சமூகத்திற்குக் கொண்டு வருகின்றனர். அவன் பாவி என்பதையும், அவனில் விசுவாசம் இல்லை யென்பதையும் கிறிஸ்து பெருமான் திட்டமாய் அறிந்திருந்த போதிலும், அவன் நண்பர்களின் விசுவாசத்தினிமித்தம் அவனுக்கு இரட்சிப்பையும், சரீர சுகத்தையும் அளிக்கிருர்.

பரி. மத். 8:13. "இயேசு நூற்றுக்கதிபதியை நோக்கி: நீ போகலாம், நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது என்ருர். அந்த நாழிகையிலே அவன் வேலைக்காரன் சொஸ்தமாஞன்." இயேசு பெருமானின் வார்த்தைகளிலிருந்து அந்த வேலைக்காரனிடம் விசுவாசம் இருந்ததாகத் தெரியவில்லை. ஆனுல் நூற்றுக்கதிபதியின் விசுவாசம், நிகரற்றதாயிருந்தது. நூற்றுக்கதிபதியின் விசுவாசம், அவன் வேலைக்காரனுக்கு சுகமளிக்கப் போதியதாயிருந்தது.

குழந்தை ஞானஸ்நானமும் மத்தியஸ்த விசுவாசமும்.

இவற்றை ஆராயுங்கால், கிறிஸ்தவக் குழந்தைகளுக்கு விசுவாசிக்கும் சக்தி இல்லாவிடினும், தமது கிருபையின்படி கடவுள், பெற்ருேர், ஞானப் பெற்ருேர் திருச்சபையின் மக்கள் இவர்களின் விசுவாசத்தைப் பார்த்து, விசுவாசித்து ஞானஸ்நானம் பெறும் பகுத்தறிவுள்ள ஒருவனை ஏற்றுக்கொள்ளுவது போல் அக்குழந்தைகளையும் ஏற்றுக்கொள்ளுகிருர். ஞானஸ்நானம் பெறும் குழந்தைகளிடமிருந்து விசுவாசம் ஞானஸ்நானத்திற்குப் பின்னும், வயது வந்தோரிடமிருந்து விசுவாச அறிக்கை ஞானஸ்நானத்திற்கு முன்னும் எதிர்பார்க்கப்படுகின்றது. குழந்தைகள் ஞானஸ்நானம் பெறும் சமயத்தில், அவர்களுக்காக ஜெபிக்கும் சபையாரிடமிருந்து விசுவாசம் அதிகமாய் எதிர்பார்க்கப்படுகின்றது.

பாப்திஸ்ட் சபையைச் சேர்ந்த பண்டிதர் வில்லியம் ஸ்டுவட் தாம் எழுதிய நூல் (‘ திருச்சபை, திருப்பணிவிடை, திவ்விய சாக்கிர லெந்துக்கள் ’) ஒன்றில், பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார் : “ செம்மையானதொரு குழந்தை திருமுழுக்கில் விசுவாசம் உள்ளது. அதாவது, அதில் கலிலேயாவின் தாய்மார்களைப் போன்று, பெற்ருேர் தங்கள் குழந்தையைக் கிறிஸ்துவிடம் மகிழ்வுடன் கொண்டுவரும் விசுவாசமும், முழுத்திருச்சபையின் விசுவாசமும் உள.”

சிறுவர் தம்மிடத்தில் விசுவாசமாயிருக்கிருர்களென்று கிறிஸ்து பெருமானே சொல்லியிருக்க (பரி. மாற்கு 9 : 42) அப்படிப்பட்ட சிறுவர் “ ஞானஸ்நானம் பெருதபடிக்கு எவனுகிலும் தண்ணீரை விலக்கலாமா. ” மேலும் பிள்ளைகள் மனந்திரும்பிய மனிதனின் நிலையை அடைந்துள்ளார் (பரி. மத். 18 : 3) என்றும் இயேசு பெருமான் விளம்பியிருக்கிருர்.

அப். 2 : 38-ல் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுவதற்கு மனந்திரும்புதல் அவசியமென சொல்லப்பட்டுள்ளது. இதுவும் மனந்திரும்புவதற்குரிய நிலையிலுள்ள வயது வந்தோ

ரிடம் காணப்படவேண்டியதே. பிள்ளைகள் இவ்வித மனந் திரும்புதலின்றியே பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளக் கூடும் (பரி. லூக். 1 : 15). எரேமியாவைப்பற்றிய குறிப்பும் இதை ஆதரிக்கின்றது (எரே. 1 : 5). ஆவியானவரின் செயல் அறிவுக்கெட்டாததேயாம். (பரி. யோவான் 3 : 8.)

"நாம் நமது குழந்தைகளை ஞானஸ்நானத்திற்குக் கொண்டு வருங்கால், அதன் முக்கிய ஆசாரியன் கடவுளே எனவும், அவர் வெளிப்படையாக அக்குழந்தைகளைத் தமது புதுப்பிக்கும் செயல் நடைபெறும் இடத்தினுள் அமரப்பண்ணு கின்ருர் எனவும், அவர் அவ்வாறு செய்வது அவரது வல்லமையை ஏற்கனவே அறிந்துள்ள தமது மக்களது விசுவாசத் திற்கு மறுமொழியே எனவும் நாம் நம்புகிருேம். இதை நாம் உண்மையாய் கைக்கொள்ளுவோம். நமது பிள்ளைகள் தகுந்த வயதை அடையுங்கால் கடவுளின் இரட்சண்ணியத்தைத் தாங்களாகவே ஏற்றுக்கொள்ளுவதையோ, தள்ளிவிடுவதையோ தெரிந்து கொள்ளக்கூடிய ஓர் சூழ் நிலையை அமைத்துக்கொடுக்க விரும்புகிருேமா? கடவுளின் நன்மையை நீங்கள் ருசித்திருப்பின், நீங்கள் நிச்சயமாய் விரும்புவது இது தானு? ....ஆரம்பத்திலிருந்தே, கடவுளின் பிள்ளைகள் பரம பிதாவின் வீட்டில் சமாதானத்தையும், மகிழ்ச்சியையும் பெற்று அனுபவிக்க இயேசு பெருமான் வகை செய்துள்ளார் எனக் கூறுவது சுவிசேஷத்திற்கு முரண்பட்டதன்று. எனினும் நாம் அந்நிலையை அடைந்திருப்பது, நமது உரிமையினுல் அல்ல, பரமபிதாவின் கிருபையினுலும், அவர் குமாரனின் பலியினுலுமே என ஞானஸ்நானம் நமக்குப் போதிக்கின்றது. இக்குழந்தை ஞானஸ்நானம் பெறுகையில், வரும் நாட்களில் ஒன்றில், சுவிசேஷத்தின் உரிமைக்கும், வாக்குத்தத்தத்திற்கும் கடவுளின் தொடர்ந்தேர்ச்சியான கிருபையினுல் ஆம் என மகிழ்வுடன் கூறத்தக்கதாக, வருங்கால உபதேசத்திற்கென கடவுள் அஸ்திபாரமிடுகிருர்." என கார்டன் ஷா M. A., LL. B. கூறியிருக்கிருர்.

VII. மறு ஞானஸ்நானம்

"ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு."

குழந்தைப் பருவத்தில் ஞானஸ்நானம் பெற்றோரில் சிலர், கிறிஸ்து அற்ற வாழ்க்கையை சில காலம் நடத்திய பின் திடீரென மனம் மாறி, கிறிஸ்து பெருமானைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளுங்கால், தங்களின் புதிய வாழ்க்கைக்கு அடையாளமாகவும், கிறிஸ்துவின் தொண்டனுயிருப்பதற்கு அத்தாட்சியாகவும் மறுபடியும் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள தூண்டப்படுவதை நாம் அறிவோம். ஆகவே சத்திய வேதம் இதைப்பற்றிக் கூறுவதை ஆராய்வோம்.

மறு ஞானஸ்நானத்திற்கு ஆதாரமாக பெரும்பாலும் கீழ்க்காட்டிய காரணங்கள் கூறப்படுகின்றன :—

1. மறு ஞானஸ்நானமே பகிரங்கமாய்க் கிறிஸ்துவை அறிக்கையிட ஓர் சிறந்த சாதனம்.

3. விசுவாசத்தையும் ஞானஸ்நானத்தையும் இணைத்தே வேதத்தில் கூறப்பட்டுள்ளது.

3. ஞானஸ்நானத்திற்கு முன் விசுவாசம் கண்டிப்பாய் இருந்தாக வேண்டும்.

4. மறு ஞானஸ்நானத்திற்கு ஆதாரம் அப். 19-ம் அதிகாரம்.

5. தண்ணீர் வார்த்து அல்லது தெளித்து கொடுக்கப்படும் ஞானஸ்நானம் மெய்யான ஞானஸ்நானமாகாததலால் குழந்தைப் பருவத்தில் ஞானஸ்நானம் பெற்ற அனைவரும் மறு ஞானஸ்நானம் முழுகியே பெறவேண்டும்.

இவற்றை ஒவ்வொன்ருய் ஆராய்வோம்.

(1) மறு ஞானஸ்நானமே பகிரங்கமாய்க் கிறிஸ்துவை அறிக்கையிட ஓர் சிறந்த சாதனம். வயது வந்தோர் கிறிஸ்துவை அறிக்கையிட, மறு ஞானஸ்நானத்தைத் தவிர வேறு சாதனங்கள் உள. திடப்படுத்தப்படுவது, திருவிருந்து ஆராதனையிலும் இதர ஆராதனைகளிலும் ஒழுங்காய்ப்பங்கு பெறுவது, புனித வாழ்க்கை நடத்துவது, கிறிஸ்துவுக்காகச் சாட்சி பகருவது, திருச்சபையின் இதர சேவைகளில் தீவிரமாய் ஈடுபடுவது, கிறிஸ்தவ ஈகையில் முன்னேறுவது, முதலிய செயல்களின் மூலமாகவும் கிறிஸ்துவை பகிரங்கமாய் அறிக்கையிட ஏதுவுண்டு.

(2) விசுவாசத்தையும் ஞானஸ்நானத்தையும் இணைத்தே வேதத்தில் கூறப்பட்டுள்ளது. புதிய ஏற்பாடு எழுதப்படுகையில், கிறிஸ்து சமயம் ஓர் நூதன சமயமாக விருந்ததுமன்றி, அப்போதுதான் பல நாடுகளிலும் பரவ ஆரம்பித்தது. ஆகவே கிறிஸ்துவைக் குறித்து முதன் முறையாகக் கேள்விப் பட்டு, கிறிஸ்தவரானவரைப் பற்றிய விபரங்களே புதிய ஏற்பாட்டில் இடம் பெற்றுள்ளது. ஏற்கனவே கிறிஸ்தவர்களாயிருந்தவர்களின் குழந்தைகளைப்பற்றிய விபரம் அக்காலத்தினவருக்கு முக்கியமானதாகத் தெரியவில்லை. ஆனபடியினுல் தான் நமதாண்டவர் சர்வ சிருஷ்டிகளுக்கும் சுவிசேஷத்தை அறிவிக்கக் கட்டளையிடுகையிலும் இரட்சிப்படைய நிபந்தனைகளைக் குறிப்பிடுகையிலும் (விசுவாசமும், ஞானஸ்நானமும்), சுவிசேஷத்தை முதன் முறையாகக் கேட்கப் போகிற வயது வந்தோரையே கருத்தில் கொண்டிருந்தார் என்பது திண்ணம். இதனுல் தான் விசுவாசத்தையும், ஞானஸ்நானத்தையும் சேர்த்துக் கூறியுள்ளார். ஆனுல் எந்த ஓர் நபரிடமாவது ஞானஸ்நானத்திற்கு முன் விசுவாசம் காணப்படாவிடில், அன்னவருக்கு மறு ஞானஸ்நானம் கொடுக்கப்படவேண்டுமென்பதற்கு இங்கு எவ்வித ஆதாரமும் கிடையாது. தர்சு பட்டணத்து சவுல், எத்தியோப்பிய மந்திரி, பிலிப்பி பட்ட

ணத்து சிறைச்சாலைக்காரன் முதலியோர் ஞானஸ்நானம் பெறுகையில் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்ட பின்னரே ஞானஸ்நானம் பெற்றனர். ஆனால் இவர்கள் குழந்தைகளா யிருக்கையில் ஞானஸ்நானம் பெற்றிருக்கவில்லை. இதுவே அவர்கள் பெற்ற முதல் ஞானஸ்நானமும், ஒரே ஞானஸ்நான முமாயிருந்தது. இவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதாக அறிக்கையிட்டால் மட்டுந்தான் ஞானஸ்நானம் பெறக்கூடும். ஆகவே இத்தகையோர் விஷயத்தில் விசுவாசமும், ஞான ஸ்நானமும் இணைக்கப்படல் இன்றியமையாதது. இக் காலத்தும் மிஷனெரிமார் சேவை புரியுமிடங்களிலெல்லாம் இதுவே முறை. இச்சம்பவங்களில் இவர்கள் கிறிஸ்தவப் பெற்றோரின் பிள்ளைகளாயிருந்து, குழந்தைப் பருவத்தில் ஞானஸ்நானம் பெற்று, பின்னர் மனந்திரும்பிய தருணத்தில் மறு ஞானஸ்நானம் பெற்றனர் எனக் கூறுவதற்கு எவ்வித ஆதாரமும் கிடையாது. இவர்கள் செயலுக்கும், தற்போது மனந்திரும்புகையில் மறு ஞானஸ்நானம் பெறுவோரின் செயலுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. மேலும் குழந்தை கள் ஞானஸ்நானத்திலும் விசுவாசமும் சேர்ந்துள்ளது என்பதை முந்திய அதிகாரத்தில் காட்டியுள்ளோம்.

(3) ஞானஸ்நானத்திற்கு முன் விசுவாசம் இருந்தேயாக வேண்டும். "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் ரட்சிக்கப்படுவான்" (பரி, மாற்கு 16 : 16) என்ற வசனத்தை ஆதாரமாகக் காட்டி ஞானஸ்நானத்திற்கு முன் விசுவாசம் இருந்தேயாக வேண்டும்; குழந்தை ஞானஸ்நானத்தில் இவ் வாறு விசுவாசம் அறிக்கை பண்ணப்படவில்லையாதலால், விசுவாசம் அறிக்கை பண்ணப்பட்டு, மறு ஞானஸ்நானம் பெற்றாகவேண்டுமென சிலர் விரும்புகின்றனர். விசுவாசமும், ஞானஸ்நானமும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளதா வென்ற விஷயத்தை இரண்டாவது குறிப்பில் கவனித்தோம். சகலரும் ஞானஸ்நானம் பெறுமுன் விசுவாசித்தேயாக வேண்டுமா என்பதையே ஈண்டு ஆராய்வோம்.

"விசுவாசமுள்ளவனுகி அதன் பின்னரே ஞானஸ்நானம் பெறவேண்டும்" என கிறிஸ்து பெருமான் கூறவில்லை யென்பது கவனிக்கத்தக்கது. கிறிஸ்து பெருமான் தம் சித்தத்தை வெளிப்படுத்த மனுஷர் பாஷையையே உபயோகிக்க வேண்டியதாயிருந்தது. மொழியின் குறைபாட்டினுல் தமது விருப்பத்தை பூரணமாய்த் தெரிவிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அவர் ஞானஸ்நானத்தையும், விசுவாசத்தையும் குறிப்பிட்டுப்பேச சித்தங்கொண்டார். இந்நிலையில் ஒன்றை ஒன்றிற்கு முன் குறிப்பிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. முதலில் கூறப்பட்டது கால வரைப்படி முதலாவதே நடைபெற்ருகவேண்டுமென நாம் அழுத்த முடியாது "அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப் பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையை பெய்யப்பண்ணுகிருர்." (பரி. மத்தேயு 5 : 45) என்ற வசனத்தின்படி, தீயோர் நல்லோருக்கு முன்னர் தங்கள் மேல் சூரிய வெளிச்சம் வீசப்படக் கூடியவர்களாகவும், ஆனுல் மழையோ, நீதியுள்ளோர் மேல் பெய்து முடியும் வரை அன்னுர் காத்திருக்க வேண்டுமெனவும் நாம் அர்த்தப்படுத்துவது எவ்வளவு தப்பாகு மென்பதை அறிந்து கொள்ள வேண்டும்! ஞானஸ்நானம் பெற்றுப் பரிசுத்தாவியைப் பெற்ருேருமுண்டு; பரிசுத்த ஆவியைப் பெற்றபின் ஞானஸ்நானம் பெற்ருேருமுண்டு (அப், 10 : 47, 48). வரிசைக் கிரமம் மொழியின் குறைபாட்டாலே ஏற்பட்டதாகும். ஆகவே வரிசைக் கிரமம் தவறிவிட்ட காரணத்தால், குழந்தைப் பிராயத்தில் ஞானஸ்நானம் பெற்ருேர் மறு ஞானஸ்நானம் பெற்ருக வேண்டுமெனக் கூறுவது முறையாகாது.

(4) மறு ஞானஸ்நானத்திற்கு ஆதாரம் அப். 19-ம் அதிகாரம். எபேசுவிலுள்ள சீஷர் பெற்ற ஞானஸ்நானத்தை மறு ஞானஸ்நானத்திற்கு ஆதாரமாகக் காட்டுவோர் ஒரு முக்கிய குறிப்பை உணர்ந்து கொள்ளவில்லை. அதாவது யோவான் கொடுத்த ஞானஸ்நானம் வேறு, திரியேகர் நாமத்தினுல் பெறும் கிறிஸ்தவ ஞானஸ்நானம் வேறு என்பதை அறியா

திருப்பதே. யோவானால் ஞானஸ்நானம் பெற்றோர், அதன் மூலம் கிறிஸ்துவின் உடன்படிக்கையின் கீழ்க் கொண்டுவரப் படவில்லை. ஆகவே இந்த எபேசிலுள்ள சீஷர், கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் மறுமுறையல்ல, முதல் முறையாகவும், ஒரே முறையாகவும் ஞானஸ்நானம் பெற்றனர். ஆனபடியால் திரியேகர் நாமத்தில் ஒரு முறை ஞானஸ்நானம் பெற்றோர், மறுபடியும் ஞானஸ்நானம் பெறுவதற்கு இவ்வரலாற்றில் எவ்வித ஆதாரமும் கிடையாது.

(5) தண்ணீர் வார்த்து அல்லது தெளித்துக் கொடுக்கப்படும் ஞானஸ்நானம், ஞானஸ்நானம் ஆகாதாதலால், அவ்வாறு ஞான ஸ்நானம் பெற்றோர் மறு ஞானஸ்நானம் முழுகியே பெறவேண்டும். முழுக்கு ஞானஸ்நானத்தைப்பற்றி விரிவாய் அடுத்த அத்தி யாயத்தில் ஆராய்வோம். தற்போது தண்ணீரை வார்த்து ஞானஸ்நானம் பெற்ற காரணத்தால் மாத்திரம், மறு ஞான ஸ்நானம் முழுகி எடுக்கவேண்டு மென்பதையே கவனிப்போம். தண்ணீரை வார்த்து ஞானஸ்நானம் பெறுவது, ஞான ஸ்நானமாகாது என்பதே இங்குத் தர்க்கிக்கப்படும் பொருள். இது உண்மையானால் அகில உலகிலுமுள்ள பெரும்பான்மை கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானமே பெறவில்லை என்பதா கின்றது!. அதாவது அவர்கள் கிறிஸ்து சபையில் சேர்க்கப் படவில்லை என்பதாகவே கருதவேண்டிய தாகின்றது. மேலும் அவர்கள் ஞானஸ்நான சம்டந்தமாய், கிறிஸ்துவின் கட் டளைக்குக் கீழ்ப்படியாமலே வாழ்ந்து தங்கள் வாழ்க்கையை முடித்துக் கொள்ளுகின்றனர். புறம்பான ஓர் சடங்காசாரத் தில் அவர்கள் சரியானபடி உபதேசிக்கப்படாதவர்களா கின்றனர். ஆனால் இதற்கு மாறாக, தண்ணீரை வார்த்தும் ஞானஸ்நானம் கொடுப்பது சரியான முறையாகக் கருதப் படுமாயின், மறு ஞானஸ்நானம் முழுகியே பெறவேண்டு மென்பது அனுவசியமாகி விடுகின்றது.

இதுவரை மறு ஞானஸ்நானத்திற்கு ஆதாரமான வாதங்களை பொருந்தாதவை எனக் கண்டோம். இனி அதற்கு எதிரிடையான சில குறிப்புகளைக் கவனிப்போம்.

(அ) மறு ஞானஸ்நானம் வேத உபதேசத்திற்கு முரணனது. எபே. 4 : 5. "ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும்......உண்டு." ஒரே ஞானஸ்நானம் மாத்திரம் உண்டு என்பதாக பரி. பவுல் கூறியிருக்கிறார். எவ்வாறு கடவுள் ஒருவரோ, எவ்வாறு நமது விசுவாசமும் ஒன்றோ, அவ்வாறே ஞானஸ்நானமும் ஒன்றேயாம். இதில் இருவகை கிடையாது. அப்படியாயின் ஈண்டு ஒரு கேள்வி எழுகின்றது. மறு ஞானஸ்நானமாவது என்ன? குழந்தைகள் பெறும் அதே ஞானஸ்நானம் தானு? அது அல்ல இது வேறு என்பதாயின் இரு ஞானஸ்நானங்கள் உண்டா? இரு ஞானஸ்நானங்கள் என்பது வேத உபதேசத்திற்கு முரணனது. இரண்டில் ஒன்றை விட்டுவிட வேண்டியதாகின்றது. குழந்தை ஞானஸ்நானத்திற்கு வேத ஆதாரங்கள் உள என்பதை ஏற்கனவே ஆராய்ந்து அறிந்திருக்கின்றோம். மேலும் கிறிஸ்தவ ஞானஸ்நானம் திரும்பக் கொடுக்கப்பட வேண்டுமென்பதற்கு வேதத்தில் எவ்விதச் சான்றும் கிடையாதெனவும் அறிவோம். குழந்தை ஞானஸ்நானமும், மறு ஞானஸ்நானமும் ஒன்றே எனக் கூறுவோமாயின், அதை ஏன் திரும்பவும் பெறவேண்டும் என்பதாகின்றது. கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையில், நாம் குழந்தைகளாயிருக்கையில் ஞானஸ்நானத்தின் மூலம் இணைக்கப்பட்டிருப்பது நிச்சயமாயின், திரும்பத் திரும்ப அவ்வாறு ஞானஸ்நானத்தின் மூலம் இணைக்கப்பட வேண்டியது அவசியமா?

(ஆ) மறு ஞானஸ்நானம், சாக்கிரமெந்து என்பதின் கருத்துக்கு மாறுபட்டிருப்பதுடன், விசுவாசக் குறைவைக் காட்டுவதாயுமிருக்கின்றது.

ஏற்கனவே ஆராய்ந்தபடி, ஞானஸ்நானம் கிறிஸ்துவின் சரீரத்துடன் மக்களை இணைக்கும் ஓர் எத்தனமாக விளங்குகின்றது. ஆகவே ஞானஸ்நானத்தில் தெய்வீகச் செயலும் மனுஷிக செயலும் சேர்ந்துள்ளது. கிறிஸ்து பெருமானின் கட்டளைப்படி பரிசுத்த திருத்துவ நாமத்தையும், தண்ணீரையும் உபயோகிக்கும் போது அது தெய்வீக ஒப்புதலைப் பெறு

கிறது. நாம் நமது பங்கை நிறைவேற்றும் போது கடவுளும் தமது பங்கை நிறைவேற்றுகிறார். இந்த உடன்படிக்கையை நிறைவேற்றுவதில் நாம் உண்மையற்றவர்களாயிருக்கும் போது, கடவுளின் முழுச்செயலும் நடைபெறுவதில் தாமதம் ஏற்படுகின்றது. பின்னர் கடவுள் கிருபையால் நாம் நமது பாவ நிலையை உணர்ந்து, முன் நிறைவேற்றப்பட்ட உடன் படிக்கையின் நமது பாகத்தை முழுமனதோடே ஏற்றுக் கொள்ளும்போது, நாம் முன்பு உடன்படிக்கைக்கு உண்மை யற்றவர்களாயிருந்த காரணத்தால், கடவுளைத் தமது உடன் படிக்கையை நிராகரித்துவிட கேட்டுக்கொள்ளலாமா? ஆனால் மறு ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுவோர் இவ்வாறே செய்கிறவர்களாகக் காணப்படுகின்றனர். ஏனெனில் ஞான ஸ்நானத்தில் நாம் கடவுளுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளு வது மட்டுமல்லாமல், கடவுளும் நம்முடன் ஒப்பந்தம் செய்து கொள்ளுகிறார். மறு ஞானஸ்நானத்தை இக்கோணத்தி னின்று நோக்குங்கால், நமது விசுவாசக் குறைவு வெளிப் படுத்தப்படுகின்றது. ஏனெனில் நமது தவறுதலினிமித்தம் கடவுளை அவரது ஒப்பந்தத்தை நிராகரிக்கக் கேட்பது, உடன் படிக்கையில் அவரது செயலில் சந்தேகப்படுவதாகின்றது.

மறு ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவேண்டு மென்பது நடை முறையில் மற்றுமோர் சிக்கலைத் தோற்றுவிக்கின்றது. அதாவது குழந்தையாக ஞானஸ்நானம் பெற்ற ஒருவர் மத விஷயத்தில் நிர்விசாரமாயிருந்து, பின்னர் மனம் மாறி மறு ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுகிறார். இதன் பின்பும் பக்தியில் அனலற்று, ஒருவேளை கிறிஸ்துவை மறுதலித்து, பாவச் செயல்களில் ஈடுபட்டு, மற்றுமோர் முறை இரட்சகரண்டை திரும்புகிறார். ஆவிக்குரியவைகளெல்லாம் இப்போது அவருக்குத் தெளி வாகின்றன. உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கை நடத்த ஆரம்பிக்கிறார். இப்போது தான் மெய்யாக மனம் மாறிய தாக உணருகின்றார். அப்படியானால் அவர் மூன்றும் முறை ஞானஸ்நானம் பெறவேண்டுமல்லவா? இந்நிலையில் ஆவிக் குரிய வாழ்க்கையில் திடமில்லாதவன் எத்தனை முறை மறு

ஞானஸ்நானம் பெற வேண்டும்? இதற்கு உச்சவரம்பு உண்டா? ஆறு முறை ஞானஸ்நானம் பெற்றவருமுண்டு! அப்படியாயின் இத்தகையோர் உண்மையான இரட்சண்ய நிலைக்குள் எப்போதாவது வந்தடைவார்களா வென்பது சந்தேகத்திற்கிடமாகின்றது.

கிராமங்களில் பெரும்பாலும் திருமணங்கள் இன்னும் பெற்றோர்களாலேயே ஒழுங்கு செய்யப்படுகின்றன. பலர் விவாகத்தினத்தில் தான் ஒருவரை யொருவர் முதன் முதல் சந்திக்கின்றனர். சில குடும்பங்களில் ஒற்றுமைக் குறைவு காணப்பட்டு ஒருவருக்கொருவர் இசைந்து போக முடியாத காரணத்தால், ஒருவரையொருவர் பிரிந்து வாழ்வதுமின்றி, தாங்களாகவே தங்களின் ஜாதிக் கட்டுப்படி விவாக ரத்தும் செய்து கொள்ளுவதை நாம் அறிவோம். இத்தகைய தம்பதி களில் ஒருவர் அபிப்பிராய பேதங்களின் மத்தியிலும் பிரியாது வாழ்ந்து வரும்போது சில வருடங்களுக்குப் பின், ஒருவரை யொருவர் நன்கு அறிந்து, தப்பிதங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, அன்புடன் தங்களின் குடும்ப வாழ்க்கை யைப் புதிதாக ஆரம்பிக்கையில், மறுபடியும் திருமண ஆராதனை நடத்தி, மறு மாங்கல்யம் அணிவிக்க குருவான வரைக் கேட்பதில்லை. ஆனால் குருவானவரிடம் சென்று தங்களின் நிலையைத் தெரிவித்து, தாங்கள் புதிதாக ஆரம்பித் திருக்கும் இன்ப குடும்ப வாழ்க்கை வெற்றிகரமாய் நடைபெற ஜெபிக்கக் கேட்கலாம். மறுபடியும் திருமண ஆராதனை நடத்தி, மறு மாங்கல்யம் அணிவிக்கப்பட வேண்டுமென்பது விபரீத ஆவலே. மறு ஞானஸ்நானமும் இத்தகையதே.

நமது கிறிஸ்தவ வாழ்க்கையில் கடவுளின் அருள் பெற நாம் தகுதி அற்றவர் என்ற எண்ணம் எப்போதாயினும் உண்டாகையில், பின்நோக்கி நமது ஞானஸ்நானத்தைப் பார்ப்போமாக. ஞானஸ்நானம் பெற்ற பயபக்தியான வேளையில் நாம் பகுத்தறிவற்ற குழந்தைகளாக இருந்த போதிலும், அந்த விலைமதிக்கப்படாத வாக்குத்தத்தங்களில்

லாம் நமக்கு அருளப்பட்டன. கடவுள் நம்முடன் ஓர் உடன் படிக்கை செய்து கொண்டார். சொல்லப்போனுல் கடவுளும் நாமும் அந்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டிருக்கிறேம். உயிருள்ள விசுவாசத்தினுல் நாம் அவற்றை ஏற்றுக் கொள்ளும் போது, அந்த வாக்குத்தத்தங்கள் நமக்குப் பலித மாகின்றன. அன்று நமக்களிக்கப்பட்ட உண்டியல், சிறிது காலம் கவனிப்பாரற்று கைவிடப்பட்டது போல் காணப் பட்டாலும், விசுவாசத்தினுல் அது புதுப்பிக்கப்பட்டு (Endorsed) ஆஜர்படுத்தப்படும்போது, அந்த உண்டியலை அளித்தவர் அதை ஏற்றுக்கொள்ளாதிருக்க முடியாது. ஆகவே நமது ஞானஸ்நானம், கடவுள் நமக்களித்த வாக்கு களை நாம் உணறுமாறு நமது விசுவாசத்திற்கு உதவி செய் கின்றது.

திருச்சபையின் ஞானஸ்நானமும் ஒன்றே.

சில கிறிஸ்தவக் கூட்டத்தார். பிறசபைகளில் கொடுக் கப்படும் ஞானஸ்நானத்தை நிராகரித்து, தங்கள் குழுவினுட் சேருவோருக்கு மறுபடியும் ஞானஸ்நானம் கொடுக்கின்றனர். இது வேத பிரமாணத்திற்கும், அகில உலக திருச்சபையின் ஒழுங்குக்கும் முரணுனது. ரோமச் சபையிலுங்கூட இதுவே பிரமாணம். ஆனுல் பல ரோம குருக்கள் பிறசபைகளில் ஞானஸ்நானம் பெற்றேருக்கும், மறு ஞானஸ்நானம் கொடுக் கின்ற வழக்கம் இருந்து வருகிறது. இவ்வாறு அவர்கள் கொடுத்துவருவது 'நிபந்தனை ஞானஸ்நானமே". மறு ஞானஸ்நானம் கொடுப்பதில்லை. ஜெப புஸ்தக ஆராதனை ஒழுங்கில், ஞானஸ்நானம் பெற வருவோரைக் குறித்து, அவர்கள் அதற்கு முன் ஞானஸ்நானம் பெற்றதுண்டோ என்னும் கேள்வி கேட்கப்படுகின்றது. அவ்வாறு பெற வில்லை என அறிந்த பின்னரே ஞானஸ்நானம் கொடுக்கப் படுகிறது. மேலும் வீடுகளில் தனியாய் ஞானஸ்நானம் பெற்ற குழந்தைகள் ஆலயத்திற்குக் கொண்டுவரப்படும் போது, அவை தண்ணீரினுல், பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றிருந்தால் மறுபடி

யும் ஞானஸ்நானம் கொடுக்கப்பட வேண்டியதில்லை எனவும் கூறப்பட்டுள்ளது.

விருத்தசேதனம் எட்டாம் நாளில் செய்யப்படுகின்றது. வயது வந்த ஓர் யூதன், 'நான் அறியாத பருவத்தில் விருத்த சேதனம் பண்ணப்பட்டேன். அதனுல் பலனென்றுமில்லை. ஆகவே பகுத்தறிவு வந்தபின் நான் மறு விருத்தசேதனம் செய்து கொள்ள வேண்டுமென' ஒரு போதும் நினைப்பதில்லை அவ்வாறே 'கையினுல் செய்யப்படாத விருத்தசேதனமாகிய' (கொலோ. 2 : 11) ஞானஸ்நானமும் அமைந்துள்ளது.

மனந்திரும்புதலும் மறு ஞானஸ்நானமும்.

குழந்தைகளாயிருக்கையில் ஞானஸ்நானம் பெற்றிருப் பினும், மனந்திரும்பும் போது மறு ஞானஸ்நானம் பெற்றே ஆகவேண்டு மென்போ மாயின், அத்தகைய புதிய வாழ்க்கை எப்போது ஆரயபமாகின்றது என்ற கேள்வி நமக்குள் திரும் பத் திரும்ப எழுகின்றது. உதாரணமாக பரி. பேதுருவில் அவ்வாழ்க்கை எப்போது ஆரம்பமாயிற்று?

1. பரி. பேதுரு கிறிஸ்து பெருமானின் அழைப்புக்குக் கீழ்ப்படிந்து அவரைப் பின் சென்ற போதா? பரி. மாற்கு 1 : 16 – 18.

2. "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனுகிய கிறிஸ்து" என அறிக்கை செய்த போதா? பரி. மத். 16 : 16.

3. இயேசு பெருமானை மறுதலித்து, அதற்காகத் துக் கித்து, மனம் கசந்து அழுத பொழுதா? பரி. லூக். 22 · 61, 62.

4. கிறிஸ்து பெருமானை நேசிப்பதாக வாக்குறுதி அளித்த பொழுதா? பரி. யோவான் 21 : 15.

5. பெந்தேகோஸ்தே தினத்தில் ஆவியின் அபிஷேகம் பெற்ற போதா? அப். 2.

இங்கிலேயில் தூய வாழ்க்கையின் ஆரம்பத்தைத் திட்டமாய்க் குறிப்பிடுவது கடினம். இப்படியிருக்க, பேதுருவைப் போன்ற ஒருவர் மறு ஞானஸ்நானம் பெறவேண்டுமாயின் எப்போது பெறவேண்டும். ஐந்து முறையும் பெறவேண்டுமோ?

சீர்திருத்தலின் திரன் மாட்டின் லூத்தர் குழந்தைப் பருவத்தில் ரோமச் சபையில் ஞானஸ்நானம் பெற்றவரே. இவர் மனந்திரும்பிய போது மறு ஞானஸ்நானம் பெறவில்லை. சாத்தான் அவரைச் சோதிக்கும் போதெல்லாம், "நான் ஞானஸ்நானம் பெற்றவன்" என்றே திட்டமாய்க் கூறுவதுண்டாம்.

திருச் சபையின் ஆரம்பக் காலத்திலிருந்தே, ஞானஸ்நானம் திருச்சபைக்குட் சேர்வதான சாக்கிரமெந்து என நம்பப்பட்டு வந்தது. மேலும் அது கடவுளால் மக்கள் மீது போடப்பட்டுள்ள முத்திரை எனவும் அறியப்பட்டு வருகிறது. இதைக் குறித்து இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் இரேனியு, ஞானஸ்நானம் நித்திய வாழ்க்கைக்கும், கடவுளால் மறுபிறப்படைவதற்கும் முத்திரையாதலால், நாம் மரிக்கும் தன்மைக்குரிய மனிதனுக்கல்ல, நித்திய ஜீவியாகிய கடவுளுக்கு மக்களாகின்றோம் எனக் கூறியுள்ளார். இதைப் பற்றி சாதாரண கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானம், கடவுள் ஜனத்தின் மீது போட்டுள்ள முத்திரையாதலால்; அவர்கள் மறுமைக்குட்படும் போது, இதன் மூலம் அடையாளங்கண்டு கொள்ளப்பட்டு நியாயத் தீர்ப்பை இன்னலின்றி கடந்து செல்லக் கூடும் என நம்பினர். மறுபடியும், மறுபடியும் முத்திரை போடப்படுவதில்லை. இவ்வாறு ஞானஸ்நானத்தின் மூலம் முத்திரை போடப்பட்டோரெல்லாரும் நித்திய ஜீவனுக்குப் பாத்திரர் எனக் கூற முடியாது. ஏனெனில் பரி. பவுல் I கொரி. 10 : 1 முதல் 15 வரையுள்ள வசனங்களில் "நம் பிதாக்களெல்லாரும் மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள்; எல்லா

ரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்து வந்தார்கள். எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்திலும் சமுத்திரத்திலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள்........அப்படியிருந்தும் அவர்களில் அதிகமான பேர்களிடத்தில் தேவன் பிரியமாயிருந்ததில்லை. ஆதலால் வனாந்தரத்திலே அவர்கள் அழிக்கப்பட்டார்கள். "எனக் கூறியுள்ளார்.

ஆதிச் சபையும் மறு ஞானஸ்நானமும்.

மறு ஞானஸ்நானம் என்பது ஆதிச் சபையில் அறியப்படாததாயிருந்தாலும், ஞானஸ்நானத்திற்குப் பின் செய்த பாவங்கள் மன்னிக்கப்படுவதைப் பற்றிய சரியான அறிவு இல்லாதபடியாலும், அக்காலத்தில் பலர் ஞானஸ்நானத்தை தங்களின் மரண காலம் வரை கடத்தி வைத்தனர். இவர்களில் கொன்னஸ்தாந்தீனு என்னும் பேரரசரும் ஒருவர்.

மறு ஞானஸ்நானமானது, வேத பிரமாணத்திற்கும், திருச்சபை உபதேசத்திற்கும் முரண்பாடான தென்றே தென் இந்திய திருச்சபையும் போதிக்கின்றது. மேலும் மறு ஞானஸ்நானம் ஏற்றுக் கொள்ளுவோர், தங்களின் முதல் ஞானஸ்நானத்தில் ஏற்பட்டுள்ள கடவுளின் செயலை நிராகரித்து, அவரது கிருபை நிறைந்த வாக்குத்தத்தங்களை ஒன்றுமில்லாததாக்குகின்றனர். இது ஓர் அவிசுவாசத்தின் கிரியை. நாம் பாவிகளாயிருக்கையிலே, கடவுளின் கிருபையை ஏற்றுக் கொள்ளத் தகுதியற்ற நிலையிலிருக்கும் போதே, நம்மை இரட்சித்தாட் கொண்ட கடவுளின் இலவச கிருபைக்குப் பதிலாக, நமது விசுவாசத்தையும், தகுதியையும் துணிந்து வற்புறுத்துவதாகின்றது. இவ்வாறு மறு ஞானஸ்நானத்தை ஏற்றுக் கொள்ளுவோர், சபையில் பிரிவினையை உண்டாக்குவதுடன், தங்களை ஆவிக்குரிய விஷயத்தில் மேம்பட்டவர்களாகக் கருதுகின்றனர். இப்படிப்பட்டவர்கள் கிரம சிட்சைக்குட்படவேண்டுமென தென் இந்திய திருச்சபை உபதேசிக்கின்றது.

VIII. முழுக்கு ஞானஸ்நானம்.

"அப்பொழுது நான் உங்கள் மேல் சுத்த ஜலம் தெளிப்பேன்"

குழந்தை ஞானஸ்நானத்திற்கு எவ்வாறு தெளிவான நேரடியான வேத ஆதாரம் இல்லாதிருக்கின்றதோ, அவ்வாறே ஞானஸ்நானம் முழுகியே பெறவேண்டுமென்பதற்கும் தெளிவான, நேரடியான வேத ஆதாரம் கிடையாது என்பதை முதற்கண் அறிந்து கொள்ளவேண்டும்.

முழுக்காட்டலும் தெளித்தலும்.

இங்கிலாந்து திருச்சபை ஜெப புத்தகத்தில் வயது வந்தோருக்கு ஞானஸ்நானம் கொடுக்குமிடத்துள்ள ஒழுங்கு பிரமாணத்தில், "அப்பொழுது ஞானஸ்நானம் பெறப் போகிற ஒவ்வொருவருடைய வலது கையையும் குருவானவர் பிடித்து, ஞானஸ்நானத் தொட்டியருகே நிற்கச் செய்து, ஞானத்தாய் தகப்பன் மாரிடத்தில் பேரைக் கேட்டு, அவர்களை ஜலத்தில் முழுக்காட்டி அல்லது அவர்கள் மேல் ஜலத்தை வார்த்துச் சொல்ல வேண்டியதாவது" என்றும், குழந்தைகள் ஞானஸ்நான முறையில் "அப்பொழுது அவர்கள் இடுகிற பேரை அவர் சொல்லி, பிள்ளை ஜலத்தில் முழுக்காட்டத் தாங்குமென்று அவர்கள் சொன்னால் பத்திரமாய் முழுக்காட்டிச் சொல்ல வேண்டியதாவது" என்றும் "பிள்ளை பலவீனமாயிருக்கிறதென்று அவர்கள் சொன்னால் அதின்மேல் ஜலத்தை வார்க்கிறதே போதும்" என்றும் சொல்லப்பட்டுள்ளது. ஆகவே முழுக்கி ஞானஸ்நானம் கொடுப்பதும், தண்ணீரை வார்த்து ஞானஸ்நானம் கொடுப்பதும் கருத்திலும், பலிதத்திலும் சமமாகக் கருதப்பட்டுள்ளது. தென் இந்திய திருச்சபையும் ஞானஸ்நானம் முழுக்காட்டியோ, தண்ணீரை வார்த்தோ அல்லது தெளித்தோ கொடுக்கலாமெனவும், இவ்வாறு எம்முறையில் ஞானஸ்நானம் கொடுத்தாலும் அதன் கருத்தில் வேறுபாடு கிடையாது என்றே போதிக்கின்றது.

பெரும்பாலும் வயது வந்தோருக்கு முழுக்காட்டியும், குழந்தைகளுக்குத் தண்ணீரை வார்த்தும் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டு வருகின்றது. மகாகனம் நீல் அத்தியஷரவர்கள் திருநெல்வேலியிலிருந்த காலத்தில், பெற்றோரின் விருப்பப்படி குழந்தைகளுக்குக் கூட முழுக்காட்டி ஞானஸ்நானம் கொடுத்ததுண்டு.

முழுக்காட்டுவது யூத, கிறிஸ்தவ அடக்கத்திற்கு அடையாளமா?

சில கிறிஸ்தவ கூட்டத்தார் முழுக்கு ஞானஸ்நானமே சரியான ஞானஸ்நானம் எனவும், வார்த்தோ, தெளித்தோ கொடுப்பது ஞானஸ்நான மன்று எனவும் தீர்க்கமாய் கூறுகின்றனர். கிறிஸ்துவுடன் மரித்து, விசுவாசத்தினுலே அவரோடு கூட எழுந்திருப்பதற்கே ஞானஸ்நானம் அடையாளமாயிருப்பதால் (ரோமர் 6 : 3—6; கொலோ 2 : 12) முழுக்கு ஞானஸ்நானம் மாத்திரம் இதை வெளிப்படுத்தக் கூடுமென வாதிக்கின்றனர். ஆனால் சுத்திகரிப்பே ஞானஸ்நானத்தின் முக்கிய அறிகுறி என வேதம் போதிக்கின்றது (எசேக் 36 : 25 ; பரி. யோவான் 3 : 25, 26 ; அப் 22 : 16; தீத்து 3 : 5; எபி. 10 : 22) இத்தகைய சுத்திகரிப்பின் ஞானஸ்நானம் தெளித்தோ, வார்த்தோ, முழுக்கியோ கொடுக்கப்படலாம். முறை எவ்வாறிருப்பினும் கருத்து பாதிக்கப்படுவதில்லை.

மேலும் தண்ணீருக்குள் அமிழ்த்துவது யூதர் கருத்தின்படி அடக்கம் பண்ணப் படுவதைக் குறிப்பதல்ல, நமக்குள்ளிருக்கும் அடக்கம் செய்யும் முறையை மனதிற்கொண்டு, அதற்கு மாருக செயலாற்றிய யூதரின் வழக்கத்தை மறந்து பேசுகிறோம். நம்முடையவர் மரிக்குங்கால் அன்னவரை பூமிக்குள் புதைக்கிறோம். கிறிஸ்து அவ்வாறு புதைக்கப்படவில்லை, அவரது தூய உடல் கன்மலைச் சார்பில் வெட்டப்பட்டிருந்த ஓர் மாடத்தில் வைக்கப்பட்டிருந்தது. வாசலிலிருந்த கல் மூடி திறக்கப்பட்டவுடன் எவரும் அருகிற்

சென்று எட்டிப்பார்க்கக் கூடியதாயிருந்தது. இப்படிப்பட்ட அடக்கத்திற்கும், தண்ணீருக்குள் அமிழ்த்தி எடுப்பதற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது.

கிறிஸ்தவ அடக்கத்தின் முக்கிய செயல், பிரேதத்தை குழியில் இறக்கியபின்னர், அதின்மேல் சிறிது மணலைத் தெளித்து, ' நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறு ரூபப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் நித்திய ஜீவனை அடைய உயிர்த் தெழுதல் உண்டாகுமென்று உறுதியாய் நம்பி, நாம் இவனுடைய சரீரத்தை மண்ணுக்கு மண்ணாகவும், சாம்பலுக்குச் சாம்பலாகவும், புழுதிக்குப் புழுதியாகவும் பூமிக்கு ஒப்புக்கொடுக்கிறோம்,'' என்ற வாசகத்தைச் சொல்லுகிறதில் அடங்கியிருக்கிறது. குழியில் மண்ணைப்போட்டு நிரப்புவது மரித்தோரை அடக்கம் பண்ணும் முறையோடு சேர்ந்ததல்ல. பெரும்பாலும் இந்த வேலை, குருவானவரும் மற்றவர்களும் போன பின்பு கூலிக்காரரால் செய்யப்படுகிறது. ஞானஸ்நானம் தண்ணீரில் முக்கிக் கொடுக்கப்படலாமாயினும், அம்முறை இன்றியமையாதது என்னும் கோட்பாட்டிற்கு எவ்வித வேத ஆதாரமும் கிடையாது.

இறுதிக் கட்டளையும் முழுக்கு ஞானஸ்நானமும்.

இயேசு பெருமானின் இறுதிக் கட்டளை பரி. மத்தேயு 28 : 19 ; பரி. மாற்கு 16 : 15 ஆகிய இடங்களில் கூறப்பட்டுள்ளது. அதின் சுருக்கம் வருமாறு:—

1. புறப்பட்டுப் போங்கள்

2. சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்
(பரி. மாற்கு 16 : 15)

3. ஞானஸ்நானம் கொடுங்கள்.

(அ) 'போங்கள்' என்று சொல்லப்பட்டதேயன்றி எவ்விதமாகப் பிரயாணஞ் செய்ய வேண்டுமெனக் கட்டளையிடப்படவில்லை. அக்காலத்தில் பெரும்பாலும் நடந்தே சுவிசேஷத்தை அறிவிக்கச் சென்றனர். இக்காலத்தில் நாம் பல பல வண்டிகளிலும், ஆகாயவிமானங்களிலும் பிரயாணஞ் செய்து சுவிசேஷத்தை அறிவித்து வருகிறோம். எந்த முறையில் பிரயாணஞ் செய்ய வேண்டுமெனத் திட்டமான கட்டளை இல்லாதபடியால், நாம் எம்முறையில் பிரயாணஞ் செய்தாலும் குற்றமாகாது. ஆனால் 'நடந்தே போங்கள்' என கூறப்பட்டிருக்குமாயின், வேறு முறையாகப் பிரயாணஞ் செய்து சுவிசேஷத்தை பிரசங்கிப்பது ஆட்சேபனைக்குரியது.

(ஆ) 'பிரசங்கியுங்கள்' அக்காலத்தில் சொற்பொழிவுகளால் மாத்திரம் சுவிசேஷம் பிரசங்கிக்கப் பட்டது. வாயின் வார்த்தைகள் மூலமாக மட்டும் பிரசங்கம் செய்ய வேண்டுமென்று திட்டமாய்க் குறிப்பிடாதபடியால், நாம் இப்பொழுது பத்திரிகை, புத்தகங்கள் மூலமாயும், படக்காட்சி, நடிப்பின் மூலமாயும் வானொலி மூலமாயும் சுவிசேஷத்தைப் பரப்பும் சகல முறைகளும் ஒப்புக்கொள்ளப் பட்டேயாக வேண்டும்.

(இ) "ஞானஸ்நானம் கொடுங்கள்" புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் தெளித்தல், வார்த்தல், முழுக்காட்டல் என்ற மூவகை ஸ்நானங்கள் வழக்கத்தில் இருந்து வந்தன. ஈண்டு அவற்றில், குறிப்பிட்ட ஒரு முறையையே கைக்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டு, கட்டளை பிறப்பிக்கப்படாமல், யாதாமொரு முறையில் ஞானஸ்நானம் கொடுக்கப்படவேண்டு மென்பதாகவே பொதுப்படக் கூறப்பட்டுள்ளது எவ்வளவு ஞானமான, பொருத்தமான கட்டளை! தண்ணீரைக் கொண்டு, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் கொடுக்கப்பட்ட எந்த வகை ஞானஸ்நானமும் இக்கட்டளைக்கிசைந்ததே.

மூல பதம் ஏற்றுக்கொள்ளப் பட்ட விதம்.

'பப்றிட்சோ' (Baptizo) என்னும் பதம், கிரேக்க மொழியை நன்கறிந்த யூத மக்களால், தண்ணீரால் செய்யப் பட்ட சடங்காசார சுத்திகரிப்பைக் குறிக்கும் வகையில் பல தலைமுறைகளாக உபயோகிக்கப் பட்டு வந்தது. கிறிஸ்துவுக்கு முன்னுள்ள இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுகளாக இதுவே சாதாரண வழக்கமாக இருந்து வந்தது. கிறிஸ்து பெருமான் வேறு கருத்துடன் இப்பதத்தை உபயோகப்படுத்தியிருப்பின், அதற்கு அவர் விளக்கம் கொடுத்திருக்க வேண்டும். மக்களும் அவர் வேறு கருத்துடன் இப்பதத்தை உபயோகித்திருந்ததாக சாதாரணமாய் எதிர்பார்த்திருக்க முடியாது. வேறு கருத்துடன் இப்பதத்தை அவர் உபயோகித்திருந்தால், அதை அவர்கள் புரிந்திருக்கவும் முடியாது." இவ்வாறு கனம் எட்மண்ட் ஃபேர் பீல்ட் என்னும் பண்டிதர் தம் புத்தகமொன்றில் எழுதியிருக்கிறார். இவர் பாப்றிஸ்ட் சபையைச் சேர்ந்த ஓர் பிரபல பண்டிதர். முழுக்கு ஞானஸ்நானத்திற்குச் சாதகமாக ஓர் நூலை எழுதுமாறு இவர் கேட்டுக் கொள்ளப்பட்டார். இதற்காக, 'ஸ்நானம்' 'ஞானஸ்நானம்' இது போன்று வேதாகமத்தில் வரும் ஒவ்வொரு வார்த்தையையும் நுட்பமாய் ஆராய்கையில், முழுக்கு ஞானஸ்நானத்திற்கு வேதத்தில் ஆதாரமில்லையெனக் கண்டு, பாப்றிஸ்ட் சபையை விட்டு விலகி, குழந்தை ஞானஸ்நானத்தை ஆதரிக்கும் 'பிரஸ்பித்தீரியன்' சபையில் சேர்ந்து, தமது ஆராய்ச்சியை "குழந்தை ஞானஸ்நானத்தைப் பற்றிய கடிதங்கள்" என்னும் புத்தகத்தின் மூலம் வெளியிட்டிருக்கிறார்.

சடங்காசார சுத்திகரிப்பு விதிகள்.

பழைய ஏற்பாட்டில், சடங்காசார சுத்திகரிப்பு முழுக்காட்டியோ, ஸ்நானம் செய்விக்கப்பட்டோ, (ஸ்நானம் என்பது மூழ்கி குளிப்பதை மட்டும் குறியாது, பாத்திரத்தில் தண்ணீர் மொண்டு தலையில் ஊற்றிக் குளிப்பதையும் குறிக்கும்)

அல்லது தெளித்தோ செய்யப்பட வேண்டுமெனக் குறிக்கப் பட்டுள்ளது. முழுகவேண்டும் என்ற சந்தர்ப்பங்களில், முழுக வேண்டுமெனத் திட்டமாய் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு கூறப்பட்டிருக்கையில், வேறு விதமாக ஸ்நானம் செய்தோ அல்லது தண்ணீர் தெளிக்கப்பட்டோ அந்த குறிப் பிட்ட சுத்திகரிப்பை நிறைவேற்றுவது குற்றமாகும். அவ் வாறே ஸ்நானம் பண்ணி சுத்திகரிக்கப் படவேண்டுமென கூறப்பட்டிருக்கும் போது தண்ணீர் தெளிக்கப்படுவதை ஒப்புக்கொள்ள முடியாது. மேலும் தெளிக்கப்படவேண்டு மென்றிருக்குமிடங்களில் தெளிக்கப்படுவதே ஒப்புக்கொள்ளப் பட்ட சடங்காசார சுத்திகரிப்பின் முறையாக ஏற்றுக் கொள்ளவேண்டும்,

தீத்து 3:5. எபே. 5:26, ரோ. 6:1-5

1. முழுகி சுத்திகரிக்கப் படல்.

லேவி. 15 : 5, 8, 11, 21, 22, 27; 17 : 15.

2. ஸ்நானம் பண்ணி அல்லது கழுவி சுத்திகரிக்கப்படல்.

லேவி. 16 : 4, 26, 28; 15 : 13; யாத். 29 . 4; 30 : 20; லேவி. 8 : 6

3. தெளிக்கப் பட்டு சுத்திகரிக்கப் படல்.

லேவி. 14 : 7; எண் 8 : 7; எபி. 9 : 19 - 22; 10 : 12; எசேக். 36 : 25.

ஞானஸ்நானம் மேற்கூறிய மூன்று முறைகளில் யாதா மொரு முறையில் கொடுக்கப்பட்டாக வேண்டுமென்பதாக இருக்குமானால், அந்த முறை மேலே காட்டியதைப் போல் திட்டமாகக் கூறப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு கூறப் படவில்லை யாதலால் மூன்றில் எந்த முறையும் ஒப்புக் கொள்ளப்படக் கூடியதே.

புதிய ஏற்பாட்டில் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்ட சந்தர்ப்பங்களை ஆராயுங்கால், அவற்றில் எந்த ஒரு சமயத்

திலாவது முழுக்காட்டி ஞானஸ்நானம் கொடுக்கப் பட்டதற்கு எவ்வித சான்றும் கிடையாது. எபே. 5:26

1. அப். 2 : 41 "அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்ருர்கள்: அன்றையத் தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப் பட்டார்கள்"

பெந்தேகோஸ்தே தினத்தன்று சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மூவாயிரம் பேரும் வசனத்தை ஏற்றுக் கொண்டு ஞானஸ்நானம் பெற்றவரேயாவர். அவர்கள் எவ்வாறு ஞானஸ்நானம் பெற்ருர்கள்? முழுகியா அல்லது தெளித்தல் மூலமாகவா? முழுகிப்பெற்றதற்கு எவ்வித சான்றும் கிடையாது. அவ்வாறு சொல்லப்படவுமில்லை. எருசலேம் சாதாரணமாய்த் தண்ணீர் வசதியற்ற ஓர் நகரம். பண்டிகை நாட்களில் பெரிய தொட்டிகளில் குடிதண்ணீரைச் சேமித்து வைப்பது வழக்கம். குடிதண்ணீருக்காக ஆங்காங்கே தோண்டப்பட்ட நீர் நிலைகளில் புறக் கணிக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் இறங்கவும் மூழ்க்கி எடுக்கப்படவும் ஒரு போதும் அனுமதியளிக்கப் பட்டிருக்க முடியாது. அங்குள்ள கீதரோன் ஓடையிலும் மழைகாலத்தில் மட்டும் தண்ணீர் உண்டு. மூவாயிரம் பேர் முழுக்கு ஞானஸ்நானம் பெற எருசலேமில் எத்தகைய வசதியும் கிடையாது.

திடீர் மன மாற்றத்தின் பயனுகவே அந்த மூவாயிரம் பேரும் தங்களை ஞானஸ்நானத்திற்கு ஒப்புக்கொடுத்தனர். ஆகவே முழுக்கு ஞானஸ் நானத்திற்கு மாற்று வஸ்திரங்களுடன் ஆயத்தமாக வந்திருக்க முடியாது. இந்நிலையில் அவர்கள் முழுக்கு ஞானஸ்நானம் பெற்ருர்கள் எனக் கூறுவது பொருந்தாது.

இக்காலத்தைப் போல் அக்காலத்தில் பலர், வரிசை பிசகாமல் ஏக காலத்தில் ஞானஸ்நானம் பெற்றிருக்கக் கூடுமென கருதலாகாது. ஒருவருக்கு ஞானஸ்நானம்

கொடுக்க ஒரு நிமிடம் தேவைப் படினும், அந்த மூவாயிரம் பேரும் முழுக்கு ஞானஸ்நானம் பெற்று முடிய இரு முழு தினங்களுக்கு மேல் ஆகியிருக்க வேண்டுமன்றோ! இவ்வாறு நடைபெற்றிருப்பது சாத்தியமா? தெளித்து ஞானஸ்நானம் பெற்றிருப்பதைத் தவிர வேறு வழி இல்லை.

2. அப். 9 : 18 "உடனே அவன் கண்களிலிருந்து மீன் செதிள்கள் போன்றவைகள் விழுந்தது அவன் பார்வையடைந்து எழுந்திருந்து ஞானஸ்நானம் பெற்றான்" இங்கு பரி. பவுலின் ஞானஸ்நானம் கூறப்பட்டுள்ளது. தமஸ்கு பட்டணத்தில் சவுல் பார்வையற்றவனாக யூதாவின் வீட்டில் இருக்கையில் அனனியாவால் ஞானஸ்நானம் பெற்றான். அக்காலத்தில் பெரும்பாலும் சாமானிய மக்களே கிறிஸ்தவர்களானார்கள். அன்னாரில் ஒருவனே யூதா. அவன் வீட்டில் முழுகி எழும்பக் கூடிய தண்ணீர் வசதி இருந்திருக்குமென நினைப்பது தவறு. தற்காலத்திலும் நடுத்தர வகுப்பாரில் எவர் வீட்டிலாவது முழுகிக்குளிக்கக் கூடிய வசதி கிடையாது. ஒருவேளை அரண்மனை போன்ற பங்களாக்களில் வசிக்கும் பிரபுக்கள் வீடுகளில் மாத்திரம் அத்தகைய வசதி இப்போது உண்டு. ஆகவே பரி. பவுலின் சிரசில் தண்ணீர் வார்க்கப் பட்டே ஞானஸ்நானம் பெற்றிருக்க வேண்டும். 'எழுந்திருந்து ஞானஸ்நானம் பெற்றான்' என்றே கூறியிருப்பதால் வெளியே சென்று பெற்றுத் திரும்பினான் எனச் சொல்ல முடியாது.

3. அப். 10 : 47, 48. "அப்பொழுது பேதுரு.........கர்த்தருடைய நாமத்தினால் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கட்டளையிட்டான்."

கொர்நேலியுவும், அவன் வீட்டாரும், அவன் உறவின் முறையாரும், அவனுடைய விசேஷித்த நண்பரும் கொர்நேலியுவின் வீட்டில் பெற்ற ஞானஸ்நானம் இங்கு குறிப்பிடப் பட்டுள்ளது. கொர்நேலியுவின் சிறிய ராணுவ வீட்டில் இத்தனை பேர் முழுகி எழும்பும்படியான எந்த வசதியும் இருந்

திருக்க முடியாது. வீட்டிற்கு வெளியிற் சென்று ஞான ஸ்நானம் பெற்றுத் திரும்பினர் எனவும் சொல்லப்படவில்லை.

4. அப். 16 : 33. "மேலும் இராத்திரியில் அந்நேரத்தில் தானே அவன் அவர்களை அழைத்துக் கொண்டுபோய், அவர்களுடைய காயங்களைக் கழுவினுன். அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்ருர்கள்.

சிறைச்சாலை சீர்திருத்தம் சமீபகாலத்தில் தான் ஏற் பட்டுள்ளது. முற்காலத்தில் அவை சுகாதார மற்றவை யாயும், வசதிக் குறைவானவையாயுமிருந்தன. இங்கிலையில் அங்குள்ள ஓர் வீட்டில், ஓர் குடும்பம் முழுவதும் நடுநிசியில் முழுக்கு ஞானஸ்நானம் பெற்றனர் என்பதை நினைக்கவும் முடியாது.

5. அப். 8 : 38. "......அப்பொழுதும் பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினுர்கள். பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான்."

பிலிப்பும் மந்திரியும் ஓர் சிறிய நீரோடையைக்கடக்க வேண்டியதாயிருந்தது. அவ்வோடையில் எவ்வளவு தண்ணீர் இருந்ததென சொல்லப்படவில்லை. ஓடும் தண்ணீரையே யூதர்கள் தங்களின் சடங்காசார சுத்திகரிப்புக்காக உப யோகித்து வந்தனர். ஆனபடியால் தான் ஓடும் தண்ணீரைக் கண்டவுடன் 'இதோ தண்ணீர் இருக்கிறதே' என்ருன் (வ. 36). மந்திரி முழுகியதாகச் சொல்லப்படவில்லை.

6. பரி. யோவான் 3 : 23 "அயினேன் என்னும் இடத்திலே தண்ணீர் மிகுதியாயிருந்தபடியால் யோவானும் அங்கே ஞானஸ்நானம் கொடுத்து வந்தான்."

யோர்தான் நதிக்கரையில் ஆரம்பித்த தனது ஊழியத்தை, யோவான் அயினேன் என்னும் இடத்திற்கு மாற்றிக் கொண் டான். திரள் கூட்டமான பேர் வசனத்தைக் கேட்க வந்த

படியாலும், அவர்களைத் தகுந்தவாறு மேசியாவுக்கு உகந்த ஜனமாக ஆயத்தஞ் செய்யவேண்டியதாயிருந்தபடியாலும்' நீரூற்றுகள் நிறைந்த அயினோன் அவனுக்கு வசதியுள்ளதாகக் காணப்பட்டது. சில நாள் மக்கள் தங்கியிருந்து உபதேசம் கேட்பதற்குத் தண்ணீர் வசதி தேவையே. இதினாலேயே அயினோனைத் தெரிந்து கொண்டான் என கிரேக்க மொழி நிபுணர் எட்மண்ட் ஃபேர்பீல்ட் கூறுகின்றார். முழுக்கி ஞானஸ்நானம் கொடுத்ததாக இங்கும் சொல்லப்படவில்லை.

7. I கொரி. 10 : 1, 2 "......நம்முடைய பிதாக்களெல்லாரும் மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள். எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்து வந்தார்கள். எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்திலும், சமுத்திரத்திலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள்."

இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் (குழந்தைகள் உட்பட) சிவந்த சமுத்திரத்தைக் கடந்து வந்ததை, பரி. பவுல், அவர்கள் ஞானஸ்நானம் பெற்றதாகக் கருதி இங்கு கூறுகின்றார். மேகம் அவர்களுக்கு நிழலாக மாத்திரம் இருந்து வந்ததேயன்றி, மழைக்காக அனுப்பப்படவில்லை. வெட்டாந்தரையில் அவர்கள் நடந்தபடியால் (யாத். 14 : 22), அவர்கள் பாதங்களில் தண்ணீர்படவில்லை. அவர்கள் மேல் தண்ணீர்பட்டிருக்கவேண்டுமாயின் இருபுறமும் மதிலாக நின்ற தண்ணீரிலிருந்து சில துளிகள் அவர்கள் மேல் தெளிக்கப்பட்டிருக்கலாம். ஆகவே இவ்வரலாறு முழுக்கு ஞானஸ்நானத்திற்கல்ல, தெளித்துக் கொடுக்கப்படும் ஞானஸ்நானத்திற்கே ஆதாரமாக அமைந்துள்ளது.

8. பரி. மாற்கு 1 : 10 "அவர் ஜலத்திலிருந்து கரையேறினவுடனே வானம் திறக்கப்பட்டதையும், ஆவியானவர் புறாவைப்போல் தம்மேல் இறங்குகிறதையும் கண்டார்."

ஜலத்திலிருந்து கரையேறினார் என்பதை, ஜலத்தில் மூழ்கிய பின் கரைக்கு வந்தார் என அனுமானிக்க வேண்டிய

தில்லை. தண்ணீருள்ள ஓடையை கால் நடையாய் கடந்து கரைசேரும் போதும் இதே வாசகத் தொடரையே உபயோகிக்கிறோம். அதனால் ஓடையின் தண்ணீரில் முழுகி வந்ததாக எவரும் கருதுகிறதில்லை. யோவான் கிறிஸ்து பெருமானை யோர்தான் நதியின் தண்ணீரில் முழங்கால் அளவில் நிறுத்தி, தலையில் தண்ணீரை ஊற்றி (அக்கால வழக்கப்படி) ஞானஸ்நானம் கொடுத்தான் என்றே கருதப்படுகின்றது. பூர்வ கல்வெட்டுகளும், சித்திரங்களும் இதற்குச் சான்றுகளாக அமைந்துள்ளன.

புதை பொருள் ஆராய்ச்சியின் பயனாக, வெளிக்குக் கொண்டு வரப்பட்ட, பழங்கால ஞானஸ்நான தொட்டிகள், முழுகக்கூடிய அளவு பெரிதாக வல்லாமல், தண்ணீரை வார்த்தோ அல்லது தெளித்தோ ஞானஸ்நானம் கொடுக்கத் தககதாகச் சிறியவைகளாகவே காணப்படுகின்றன.

மூலபதம் முழுக்காட்டுவதை ஆதரிப்பதன்று.

ஞானஸ்நானத்திற்காக உபயோகிக்கப்பட்டுள்ள கிரேக்க பதம் முழுக்காட்டுவதையே குறிக்குமாதலால், முழுக்கு ஞானஸ்நானமே ஒழுங்கான முறை என வாதிப்பாருமுளர். 'பப்றிட்சோ' (BAPTIZO) என்னும் கிரேக்க பதம் மூலத்தில் முழுக்காட்டுவதையோ, தோய்ப்பதையோ, அமிழ்த்து வதையோ குறிப்பினும், காலக்கிரமத்தில் யூத வழக்கப்படி, எவ்வித திட்டமான முறையுமின்றி கழுவுவதையோ, சுத்தி கரிப்பதையோ குறிப்பதாயிற்று. மேலும், அப்பதம் உபயோகிக்கப்பட்டுள்ள இடங்களிலெல்லாம் முழுக்குவது, அமிழ்த்துவது என்ற ஒரே கருத்தைத் தெரிவிக்கவில்லை. உதாரணமாக 'பிரஸ்பித்தர்' (மூப்பன்) என்னும் பதம் ஆரம்பத்தில் வயது முதிர்ந்தோரைக் குறிப்பதாயினும், காலக்கிரமத்தில் அபிஷேகம் பண்ணப்பட்ட ஓர் குருவைக் குறிப்பதெனவும், அன்னார் முதிர் வயதுடையவராயிருப்பது அவசியமில்லை யெனவும் நாமறிவோம்.

புதிய ஏற்பாட்டில் 'பப்றிஸ்மா' (BAPTISMA) 'பப்றிஸ்மோஸ்' (BAPTISMOS) என்னும் இரு பெயர் சொற்களும், 'பப்றிட்சோ' (BAPTIZO) என்னும் ஒரு வினைச் சொல்லும் வழக்கத்திலுள்ளது. அவற்றில் 'பப்றிஸ்மா' என்னும் பதம் சுமார் இருபத்திரண்டு முறை உபயோகிக்கப் பட்ட போதிலும், அது ஞானஸ்நானத்தையே குறிப்பதாகும். ஆகவே அது முழுக்காட்டுவதையோ முழுகாது ஸ்நானம் செய்வதையோ குறிப்பதாகச் சொல்ல முடியாது.

'பப்றிஸ்மோஸ்' என்னும் பதம் நான்கு முறை வருகின்றது. எபி. 6 : 2ல் 'ஸ்நானங்கள்' எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. இது ஞானஸ்நானத்தையே குறிக்குமென திட்டமாய்க் கூறமுடியாது. புதிய ஆங்கில வேதாகமத்தில் (N. E. B.) 'சுத்திகரிப்பின் சடங்குகள்' (Cleansing rites) என மொழிபெயர்க்கப்பட்டிருப்பது இதற்குச் சான்ருகும், ஆதலின் முழுக்காட்டுவது இப்பதத்தினுல் குறிக்கப்படவில்லே. பரி. மாற்கு 7 : 4-ம் 8-ம் வசனங்களே ஆராயுங்கால், அவை கழுவுவதையே குறிப்பதாகும். "கடையிலிருந்து வரும்போது ஸ்நானம் பண்ணுமல் சாப்பிடமாட்டார்கள்" என்பதில் வழங்கப்பட்டுள்ள 'ஸ்நானம்' முழு உடலேயும் ஜலத்தினுள் அமிழ்த்துவதையோ, உடலின் ஒரு பாகத்தை முக்குவதையோ குறிக்கிறதில்லே. மூன்ரும் வசனத்தில் கண்டபடி இது கைகளேக் கழுவும் முறையைத்தான் குறிக்கிறது, என்பது தெளிவு. கைகளேத் தண்ணீர் தோய்த்து அல்ல, கைகளில் தண்ணீரை வார்த்துக் கழுவுவதே யூதரின் வழக்கம். (II இரா. 3 : 11). காஞவூர் கலியாண வீட்டின் வரலாறு இதை அதிகத் தெளிவாக்குகின்றது. "யூதர்கள் தங்களேச் சுத்திகரிக்கிற முறைமையின்படியே, ஒவ்வொன்று இரண்டு மூன்று குடம் தண்ணீர் கொள்ளத்தக்க ஆறு கற்சாடிகள் அங்கே வைத்திருந்தது" என பரி. யோவா. 2 : 6-ல் கூறப் பட்டுள்ளது. இவை பலவித ஸ்நானங்களுக்கென வைக்கப் பட்டிருந்தவையாகும். ' விருந்தாளிகள் ஆகாரம் அருந்து முன்

இந்த கற்ஜாடிகளுக்குள் முக்கி எடுத்துவிடப்பட்டனர் என அனுமானிப்பது அறியாமையே. ஆகாரம் அருந்து முன், யூத வழக்கப்படி, ஒருவர் இத்தண்ணீரை மொண்டு வார்க்க, தங்கள் கைகளையோ, கால்களையோ அல்லது கைகளையும், கால்களையுமோ கழுவிக்கொண்டனர். (பூர்வ சித்திரங்களைக் காணுங்கால், இந்த ஜாடிகளின் வாய் மிகக் குறுகினவை யாகவே இருந்தன வென்பது புலப்படும்.)

பரி. மாற்கு 7 : 4-ம் 8-ம் வசனங்களிலும், பரி. லூக்கா 11 : 38-ம் வசனத்திலும் உபயோகிக்கப்பட்டுள்ள 'பப்றிஸ்மோஸ்' என்னும் பதம் முழுக்கப்படுவதைக் குறியாது, தண்ணீரை வார்த்தோ, தெளித்தோ கழுவுவதையே குறிப்பதாம்.

'பப்றிஸ்மோஸ்' என்னும் பதம் எபி. 9 : 10-ல் காணப்படுகின்றது. அஃது 'பலவித ஸ்நானங்கள்' என மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இவை மோசேயின் சுத்திகரிப்பு சடங்குகளைக் குறிக்குமாதலால், அவை யாவும் முழுக்காட்டியே இயங்கியதெனக் கூற முடியாது.

'பப்றிட்சோ' என்னும் பதம் புதிய ஏற்பாட்டில் 70 முதல் 80 தடவைகள் வரை காணப்படுகின்றது. ஆனால் இரு இடங்கள் தவிற ஏனைய இடங்களிலெல்லாம் அவை ஸ்நானம் செய்வதையே குறிப்பதால் முழுக்காட்டலை மட்டும் குறிப்பதாகாது. ஆகவே சொல் ஆராய்ச்சியின் முடிவு முழுக்காட்டும் ஒரே முறையை ஆதரிப்பதன்று.

ஆதித் திருச்சபையின் சான்றுகள்.

கி. பி. 100க்கும் 250க்கும் இடையில் எழுதப்பட்ட "பன்னிரு அப்போஸ்தலரது போதக தீபிகை" என்னும் புத்தகத்தில், முழுக்காட்ட போதுமான தண்ணீர் கிடைக்கா விட்டால், தண்ணீரை மும்முறை தலையின்மேல் வார்ப்பதே போதுமென கட்டளையிடப் பட்டுள்ளது. பழங்கால முதல் பிணியாளிகளுக்குத் தண்ணீர் வார்த்தே ஞானஸ்நானம்

கொடுக்கப்பட்டு வந்தது என்பதற்கு போதிய சான்று களுண்டு. பிரதம அத்தியட்சர் பரி. சிப்பிரியன், மூன்றும் நூற்றுண்டின் நடுவில் எழுதிய நிருபமொன்றில் "இந்த நீச சரீரத்தின் அழுக்கைப் போக்கி சுத்திகரிப்பதற்கு, இயற்கை முறையாய் மருந்து, மூலிகைகளை அறைத்துத் தோலைக் கழுவுமாப் போல், இரட்சிப்பின் சாக்கிரமெந்திலும் சரீரம் முழு வதையும் நீரில் நன்ருகக் கழுவ வேண்டுமெனக் கூறுவது தப்பிதம். விசுவாசியின் இருதயம் சுத்திரிக்கப்படும் வகை வேறு. ஆகவே பிணியாளி ஒருவனுக்குத் தண்ணீர் வார்த்து ஞானஸ்நானம் கொடுப்பதால். அவன் கடவுளின் அருளை நிறைவாகப் பெற்ருனே இல்லையோ என சந்தேகிக்க அவசிய மில்லை'' எனக் கூறியிருக்கிறுர். ஆகவே பூர்வ திருச்சபையின் அபிப்பிராயமும் இதற்கு ஒத்திருக்கின்றது.

ஞானஸ்நானம் சாக்கிரமெந்தாதலின் முழுகித்தான் ஆகவேண்டுமென்பதல்ல.

ஞானஸ்நானம் ஓர் சாக்கிரமெந்து. அதாவது 'நமக்கு அருளப்படுகிற ஆவிக்குரிய உள்ளான கிருபைக்குக் காணப் படும் புறம்பான அடையாளம்.' சிறிது அப்பத்துணிக்கையும், சிறிது ரசமும், கிறிஸ்துவின் நொறுக்கப்பட்ட திருச் சரீரத்திற் கும், சிந்தப்பட்ட அவரது திரு இரத்தத்திற்கும் அடையாளங் களாகி, அவரது பிராயச்சித்த மரணத்தின் அளவற்ற, நிகரற்ற நன்மைகளனைத்தையும் குறிப்பதற்குப் போதுமான தென நாம் ஒப்புக்கொள்ளும் போது, சிறிது சுத்த ஜலம் நாம் பரிசுத்த ஆவியினுல் கழுவிச் சுத்திகரிக்கப் படுவதற்கு அடையாளமாயிருப்பது கூடிய காரியமே.

ஓர் பாப்றிஸ்ட் சபை போதகரும், ஓர் ஆங்கிலேய திருச்சபை குருவும், முழுக்கு ஞானஸ்நானத்தைப்பற்றி ஒரு நாள் பேசிக்கொண்டிருக்கையில், ஆங்கிலேய சபை குரு, போதகரைப் பார்த்து,கணுக்கால் அளவு தண்ணீரில் ஞானஸ் நானம் கொடுத்தால் போதுமா எனக்கேட்க, அதற்கு அவர்,

போதாது என விடை பகர்ந்தார். அப்படியானால் முழங்கால் அளவு தண்ணீர் போதுமா என்ற கேள்விக்கு போதாது எனவே மறுமொழி கொடுத்தார். இடுப்பளவு தண்ணீர் போதுமல்லவா என்று கேட்க அதுவும் போதாது என்றார். பின்னர் மார்பளவு தண்ணீர் போதுமா என வினவ, அதுவும் போதாது என்று சொல்லி "தண்ணீர் தலையில் படவேண்டும் ஐயா" என அழுத்தம் திருத்தமாய் கூறினார். உடனே அந்த ஆங்கிலேய சபை குரு "நாங்கள் அப்படித்தான் செய்கிறோம்; தண்ணீர் தலையில் படும்படியாகவே ஞானஸ்நானம் கொடுக்கிறோம் ஐயா" என ஆணித்தரமாகக் கூறினார். இச்சம்பவத்தை பாப்திஸ்ட் சபையைச் சேர்ந்த பண்டிதர் பில்லி கிரஹாமே கூறியிருக்கிறார்.

ஓர் பக்தன் மரணப் படுக்கையில் இருக்கையில் முழுக்கு ஞானஸ்நானம் எடுத்ததாகக் கேளவிப்பட்ட அவர் நண்பர், அவரிடம் அதன் காரணத்தைக் கேட்டபோது, அவர் தாம் கடவுளிடம் போய் சேருங்காலம் நெருங்கி விட்டதால், கடவுள் தம்மைப் புறம்பே தள்ளிவிடுவாரோ என்ற சந்தேகம் அதிகமாய் எழும்பிய படியால், தமது மன சாந்திக்காக அவ்வாறு செய்து கொண்டதாகத் தெரிவித்தார். அப்போது அந்த நண்பர் அப்படியாயின் இப்போது உங்களுக்கு மெய்யான சமாதானம் உண்டாயிருக்கு மல்லவா எனக் கேட்டபோது அவர் "அதை ஏன் கேட்கிறீர்கள். இப்போதுதான் அதிகக் கலக்கமாயிருக்கிறது. கடவுளின் முகத்தைத் தரிசிக்க வெட்கப் படுகிறேன். ஏனெனில் 'மகனே, இவ்வளவு காலமாய் நீ என்னுடன் நெருங்கி வாழ்க்கையை நடத்தி வந்தாய், உன் மூலமாய் இரட்சிக்கப் பட்டோர் பலர். அவ்வாறிருக்க, மறுபடியும் ஞானஸ்நானம் பெற்று உன்னில் நான் நடப்பித்த நற்கிரியைகளை யெல்லாம் அவமதித்து விட்டாயே, அப்பாலே போ' எனச் சொல்லி விடுவாரோ என அஞ்சுகிறேன்" என்றாராம்.

குழந்தைகளாயிருந்த போது ஞானஸ்நானம் பெற்று தெய்வீக அன்பை ருசித்த நாம். சந்தேக அதிபதியின் சூட்சிக்கு இடங்கொடாது நம்மை பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்ள, ஒரே ஞானஸ்நானத்தைத் தந்துள்ள ஏக தெய்வம் துணை புரிவாராக!

குறிப்பு : 'திருமுழுக்கு' என்னும் பதம் தற்போது 'ஞானஸ்நானம்' என்னும் வடமொழிக்குப் பதிலாக சுத்த தமிழ் மொழி என கருதப்பட்டு பெரும்பாலும் உபயோகிக்கப்பட்டு வருகின்றது. ஆனால் 'திருமுழுக்கு' என்பது முழுக்காட்டப் படுவதையே குறிப்பதாக அனுமானிக்கப்பட வேண்டியதாகின்றது. உதாரணமாக, பரி. மத் 28 : 19ல் "பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் கொடுங்கள்" என்ற கட்டளை, "பிதா, குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே திருமுழுக்காட்டுங்கள்" என்றே எழுதப்படவேண்டியதா கின்றது. அப்படியானுல் ஞானஸ்நானம் முழுக்காட்டியே கொடுக்கப்பட வேண்டும் என்ற கருத்துக்கு அவ்வார்த்தை இடம் கொடுக்கிறது. ஆனுல், கிரேக்கு, தமிழ் இவற்றில் பாண்டித்திய முடைய பலர் 'ஞானஸ்நானம்' என்னும் பதமே இருந்து வரவேண்டுமென அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்றனர். ஆகவேதான் இச்சிறு நூல் முழுவதிலும் "ஞானஸ்நானம்" என்ற பதமே உபயோகிக்கப்பட்டிருக்கின்றது.

IX. குழந்தை ஞானஸ்நானமும் சரித்திரச் சான்றுகளும்.

"பூர்வ நாட்களை நினை. தலைமுறை தலைமுறையாகச சென்ற வருஷங்களைக் கவனித்துப்பார்: உன் தகப்பனைக்கேள்; அவன் உனக்கு அறிவிப்பான்; உன் மூப்பர்களைக்கேள், அவர்கள் உனக்குச் சொல்லுவார்கள்"

பதினாறும் நூற்றாண்டில் ஐரோப்பாவில் "அனுபாப்திஸ்தர்" (மறுபடியும் ஞானஸ்நானம் கொடுப்போர்) என்னும் குழுவினர் தோன்றும் வரை, அகில உலக கிறிஸ்தவ சபையில் குழந்தை ஞானஸ்நானம் சர்வசாதாரணமாய் நடைமுறையில் இருந்து வந்தது என்பதற்குச் சான்றுகள் பல உள. நம் நாட்டிலுள்ள சூரியானிய கிறிஸ்தவ சபை, பரி. தோமா அப்போஸ்தலனால் நிறுவப்பட்டதென்பது சாதாரணமாய் ஒப்புக்கொள்ளப்பட்டதோர் விஷயம். இச்சபையில் அன்று முதல் இன்று வரை குழந்தைகள் ஞானஸ்நானம் பெற்றே வருகின்றனர்.

சபைப் பிதாக்கள் நூல்கள் மூலம் கி. பி. முதல் நூற்றாண்டிலிருந்தே குழந்தை ஞானஸ்நானம் வழக்கத்திலிருந்து வந்ததாக அறிகிறோம். பரி. யோவான் அப்போஸ்தலனின் சீடரில் ஒருவரும் இரத்தச் சாட்சியுமான ஜஸ்டின் (80 - 165) குழந்தைப் பிராயத்திலிருந்தே இயேசுவின் சீடரான அறுபது, எழுபது வயதான பல ஆண்களும் பெண்களும் தம் காலத்தில் வாழ்ந்து வந்ததாகக் கூறியிருக்கிறார். அறுபது, எழுபது ஆண்டுகட்கு முன்னரே சீடராகவேண்டுமாயின் அன்னார் குழந்தைகளாயிருந்த போதே கி. பி. 80, 90ல் ஞானஸ்நானம் பெற்றிருக்க வேண்டும். இக்காலத்தில் பரி. யோவான் அப்போஸ்தலன் உயிரோடிருந்தார்.

'எண்பத்தாறு ஆண்டுகளாக அவரின் (கிறிஸ்துவின்) கொத்தடிமையா யிருந்துள்ளேன்' என கி. பி. 69 முதல் 155 வரை வாழ்ந்துள்ள போலிகார்ப் சொல்லியுள்ளார். ஆகவே அவர் சுமார் கி. பி. 70ல் குழந்தையாயிருந்தபோது ஞானஸ்நானம் பெற்றிருக்க வேண்டும்.

லயன்ஸ் நகர் அத்தியக்ஷரான ஐரேனியஸ் கி. பி. 120க்கும் 130க்கும் நடுவில் பிறந்தவர். இவர் பரி. யோவான் அப்போஸ்தலனின் சீடனுன போலிகார்ப் என்பவருடைய சீடன். இவர் இரண்டாம் நூற்றுண்டின் இறுதியில், அப்போஸ்தலர் காலத்திற்குப்பின், நூறு ஆண்டுகள் முடியு முன்னரே குழந்தை ஞானஸ்நானம் திருச்சபையில் நடந்தேறிய சாதாரண சம்பவமாகக் குறிப்பிட்டிருக்கிறுர். அதை நூதன புகுத்தலாகவோ தர்க்கத்திற்குரிய தாகவே அவர் கருதவில்லை "நம் மெல்லாரையும் மீட்டுக்கொள்ளும்படி கிறிஸ்து தாமே மனுஷாவதாரமானுர். குழந்தைகள், பாலகர், வாலிபர், வயோதிபர் அனைவரும் அவரால் தேவனுக்கென்று மறு பிறப்படைந் திருக்கிறுர்கள்" எனக் கூறியிருக்கிறுர்.

கி. பி. 185ல் பிறந்த ஆரிஜன் என்பவர் (185—253) குழந்தைப் பருவத்திலேயே ஞானஸ்நானம் பெற்றவர். சிறந்த அறிவாளி. இவரது 17வது பிராயத்தில் இவரது தகப்பனுர் இரத்த சாட்சியாக மரித்தார். ஆரிஜன் பரி. லூக்கா சுவிசேஷத்திற்கும் ரோமர் நிருபத்திற்கும் வியாக்கியானம் எழுதியுள்ளார். அவற்றில் பின் வரும் குறிப்புகள் காணப்படுகின்றன. "திருச்சபை குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்க அப்போஸ்தலரால் கட்டளை பெற்றிருக்கின்றது. பாவ மன்னிப்புக்காகவே குழந்தைகள் ஞானஸ்நானம் பெறுகிறுர்கள். எந்தப் பாவம்? ஜன்ம பாவமே. ஞானஸ்நானமாகிய சாக்கிர மெந்தில் நமது பிறப்பினுல் வந்த பாவத் தீட்டு நீக்கப்படுகிறது." இவர் அப்போஸ்தலர் காலத்திற்குப் பின் 150 ஆண்டுகளுக்குள் வாழ்ந்தவர்.

கிப்போலீட்டஸ் என்பார் குழந்தை ஞானஸ்நானத்தைப் பற்றி குறிப்பிடுகையில் (215—217) மனந்திரும்பிய வயது வந்தோரோடு சிறுவர் ஞானஸ்நானத்தைப் பற்றியும் எழுதியுள்ளார்.

தெர்த்துல்லியன் (155 – 225) கி. பி. இரண்டாம் நூற்ருண்டின் இறுதியில் குழந்தை ஞானஸ்நானத்தைப் பற்றி எழுதியுள்ளார். அவர் குழந்தை ஞானஸ்நானத்தை ஆதரிக்கவில்லையென சிலர் கருதுவதுண்டு. ஆனுல் நுட்பமாய் ஆராயுங்கால், குழந்தை ஞானஸ்நானத்தை எதிர்க்காது, குழந்தைகள் ஞானஸ்நானம் பெற்றபின் செய்யும் பாவங்களைப்பற்றிச் சில சிக்கல்கள் எழுகிறதாகவே கூறுகின்ருர். அவரது குறிப்பிலிருந்து, குழந்தை ஞானஸ்நானம் அப்போஸ்தலர் காலத்திலிருந்தே வழக்கத்திலிருந்ததாகவும், நூதனமாய் நுழைக்கப்பட்டதல்ல என்பதாகவும் நாம் அறிகிறோம். மூன்று வயதாவது ஆன பின்னரே ஞானஸ்நானம் கொடுப்பது நல்லது என அவர் கூறியிருப்பதைக் கவனிக்குங்கால், அக்காலத்தில் மக்கள் மூன்று ஆண்டுகளுக்குள்ளாகவே தங்கள் குழந்தைகளுக்கு சாதாரணமாய் ஞானஸ்நானம் கொடுத்து வந்தனர் என்பது புலனுகின்றது.

கி. பி. 253-ம் ஆண்டில் சிப்பிரியன் காலத்தில் வட ஆப்பிரிக்காவிலுள்ள கார்தேஜ் என்னும் நகரில் 66 அத்தியட்சர்மார் கூடியிருக்கையில், பீடஸ் என்ற அத்தியட்சர், ஞானஸ்நானமானது குழந்தைகளுக்கு, விருத்தசேதனத்தைப் போல் எட்டாம் நாளிலே தான் கொடுக்கப்படவேண்டுமோ என்று கேட்டபோது, அச்சங்கத்தார் ஏகவாக்காக அதை நிராகரித்து, புதிதாகப் பிறந்த குழந்தைகள் தேவகிருபையைப் பெறுவதைக் கடத்துவதற்கு எவ்வளவாகிலும் இடங்கொடோம் என்றே தீர்மானித்தனர். குழந்தைகள் ஞானஸ்நானம் பெற வேண்டுமாவென ஈண்டு தர்க்கிக்கப்படாது, அவை எப்போது ஞானஸ்நானம் பெறவேண்டு மென்பதே ஈண்டு ஆராயப்பட்டது என்பதை கவனிக்க.

கி. பி. 400-ம் ஆண்டிலிருந்த அகுஸ்தீன் என்னும் பக்தன், தமது காலத்தில் திருச்சபை முழுவதிலும் குழந்தை ஞானஸ்நானம் வழக்கத்திலுள்ளது எனவும், இது திருச்சபை சங்கங்களால் எப்போதாயினும் கட்டளையிடப்பட்டதால்

ஏற்பட்டதல்ல எனவும், எக்காலத்திலும் திருச்சபையில் இவ் வழக்கம் இருந்து வந்ததெனவும் கூறியிருக்கிறார்.

நான்காம் நூற்றாண்டின் பிற்பகுதியிலுள்ள ஒப்டேடஸ், அம்புரோஸ், கிறிசொஸ்தம் முதலியவர்களின் எழுத்துக் களிலிருந்தும் குழந்தை ஞானஸ்நானம் இவர்கள் காலத்திலும், அதற்கு முன்னதாகவும் திருச்சபையில் இருந்து வந்ததெனவும் அறியக்கூடும். ஐரேனியஸ், எப்பிபானியஸ், பிலேஸ்டிரியன், அகுஸ்தீன், தியோடாரெட் முதலியோர் அக்காலத்தில் திருச் சபையிலுள்ள பல்வேறு குழுக்களைப்பற்றிய அட்டவணை களைத் தயாரித்திருக்கின்றனர். அவற்றில் எக்குழுவாவது குழந்தை ஞானஸ்நானத்தை நிராகரித்ததாக குறிப்பு எதுவும் கிடையாது. ஆனால் ஞானஸ்நானத்தையே ஒப்புக்கொள்ளாத மக்கள் அக்காலத்திலும் இருந்ததாகத் தெரிகின்றது.

பண்டிதர் ஜெர்மியாஸ் எழுதியுள்ள 'முதல் நான்கு நூற்றாண்டுகளில் குழந்தை ஞானஸ்நானம்' என்ற நூலில், கி. பி. 200 ஆண்டுகளிலிருந்தே, சில புராதன கல்லறைகளின் களின் மேல் காணப்பட்ட எழுத்துக்களிலிருந்து குழந்தைகள் ஞானஸ்நானம் பெற்றிருப்பதை படங்களுடன் நிரூபிக்கிறார். ஆகவே முதல் நான்கு நூற்றாண்டுகளின் வரலாற்றை ஆராயுங்கால், கீழ்காட்டிய முடிவுக்கு வரவேண்டிய தாகின்றது :

1. குழந்தை ஞானஸ்நானம் வேத உபதேசத்திற்கு முரணானதென்று எந்த எழுத்தாளனாவது அல்லது வேறு எவராவது, கிறிஸ்துவுக்குப் பின்னுள்ள முதல் நான்கு நூற்றாண்டுகளில் கூறியது கிடையாது.

2. மேற்காட்டிய காலத்தில், அப்போஸ்தலர் காலத்தி லிருந்தே அகில லோக திருச்சபையில் குழந்தைஞானஸ்நானம் காணப்பட்டது என்ற சத்தியத்தை எவரும் மறுக்கவில்லை.

3. மூல பாவ நிவிர்த்தியாக குழந்தை ஞானஸ்நானத் தைக் காட்டியே மாபெரும் மேதாவிகள் எழுதியிருக்கின்றனர்.

கிறிஸ்துவுக்கு 2000 ஆண்டுகளுக்குப் பின்னுள்ள நாம், அப்போஸ்தலர் காலத்தில் குழந்தை ஞானஸ்நானம் இருந்ததா இல்லையா வென்பதைப்பற்றி அறிந்திருப்பதைவிட, கிறிஸ்துவுக்குப் பின்னுள்ள 400 ஆண்டுகளில் வசித்த மேற்கூறிய பண்டிதர்கள் நன்கு அறிந்திருந்தனர். ஆகவே பதினாறும் நூற்றாண்டில் 'அனுபாப்திஸ்தர்' எழும்பும் வரை அகில லோக கிறிஸ்தவ சபையில், குழந்தை ஞானஸ்நானம் சர்வ சாதாரணமாகயிருந்தே வந்தது. மேலும் இவ்வாராய்ச்சியின் மூலம், புதிய ஏற்பாட்டின் காலத்திற்குப் பின்னுள்ள சபையில், குழந்தை ஞானஸ்நானம் நூதனமாய் நுழைந்த ஓர் ஏற்பாடு அல்ல எனவும், திருச்சபையின் ஆரம்பத்திலேயே அதாவது புதிய ஏற்பாட்டுக் காலத்திலேயே இருந்து வந்த ஓர் முறை எனவும் நாம் ஒப்புக்கொண்டாகவேண்டும்.

சீர்திருத்த சபையின் தந்தை பண்டிதர் மாட்டீன் லூத்தர் தமது குழந்தைப் பருவத்திலேயே ஞானஸ்நானம் பெற்றவர். "நமது ஞானஸ்நானமும் உபதேசமும் கிறிஸ்து மதத்திற்கு முரணானதெனப் போதிப்போரைக் கொலையாளிகளிடம் ஒப்படைக்க வேண்டும்" என அவர் கூறியுள்ளார். (J. De Jong, Hand book Der Kerkgeschiedenis, Vol. III P. 46.)

X. குழந்தை ஞானஸ்நானமும் பெற்ளோர், ஞானப்பெற்ளோரின் பொறுப்பும்.

" நீ இந்தப் பிள்ளையை எடுத்துக்கொண்டு போய், அதை எனக்கு வளர்த்திடு. "

குழந்தை ஞானஸ்நானம் வெகுவாய்க் குறை கூறப்பட்டு வருவதற்கு, பெற்ளோர், ஞானப்பெற்ளோர் தங்களின் பொறுப்பை உணர்ந்து செயலாற்ருமையே ஓர் முக்கியக் காரணம். கடவுளின் உடன்படிக்கையில் பெற்ளோரின் விசுவாசத்திற்கு அடையாளமாக ஞானஸ்நானம் எவ்வாறு தங்கள் குழந்தைகளுக்கு அமைந்துள்ளதென முன் கவனித் தோம். ஆனால், விருத்தசேதனத்தைப்போல், இதிலும் மெய் யான விசுவாசம் காணப்படாவிடில், குழந்தை ஞானஸ்நானம் அர்த்தமற்றதாகிவிடும். பரி. யாக்கோபு தமது நிருபத்தில் விசுவாசம் கிரியைகளினுலே வெளிப்படுத்தப்படவேண்டுமென எழுதியிருக்கின்ருர். பகுத்தறிவுள்ளவன் தனது விசுவாசத்தை அறிக்கையிட்டு ஞானஸ்நானம் பெறலாம்; ஆனால், அவன் தனது விசுவாசத்தைக் கிரியைகளினுல் வெளிப்படுத்தாவிடில் அவன் விசுவாசம் செத்ததாகவும், அவன் பெற்ற ஞான ஸ்நானம் அர்த்த மற்றதாகவும் ஆகிவிடுகின்றது. தங்கள் குழந்தைகளைப்பற்றிய கடவுளின் வாக்குத்தத்தங்களை, பெற் ளோர் விசுவாசித்து, அவர்களை ஞானஸ்நானத்திற்குக் கொண்டு வரலாம்; ஆனால் அந்த விசுவாசத்தைத் தங்கள் குழந்தைகளை நீதியின் பாதையில் நடத்துவதின் மூலம் வெளிப் படுத்த வில்லையாயின், அந்த விசுவாசம் செத்ததாயும், ஞான ஸ்நானம் பரிகாசத்திற்கு இடமுமாகி விடுகின்றது. பெற் ளோரிடம் உயிருள்ள விசுவாசம் காணப்படாதிருக்க, அவர் களின் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதும் சரி யல்ல. தற்போது இங்கிலாந்திலுள்ள பெரும்பான்மையான ஆங்கிலிக்கன் சபையாரும், குருமாரும் இவ்வித அபிப்பிராய முடையவராகவே காணப்படுகின்றனர்.

யூதப் பெற்ரேரின் மாதிரி.

நீதி. 22 : 6-ல் "பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான்'' என்று சொல்லி யிருக்கிறபடி, பிள்ளைகளை சரியான பாதையில் நடத்த பெற்ரேர் கடமைப் பட்டுள்ளனர். கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினுலே, தீமோத்தேயுவை இரட்சிப்புக் கேற்ற ஞானமுள்ளவனுக்க அவன் தாய் ஐனிக்கேயா பயிற்சி யளித்ததை நாம் அறிவோம். சகரியாவும், எலிசபெத்தும் வயிற்றிலிருக்கும் போதே பரிசுத்த ஆவியினுல் நிரப்பப்பட்ட தங்களின் புதல்வன் கர்த்தருக்கு முன்பாகப் பெரியவனு யிருக்கும்படி இளமைப் பருவத்தில் தகுந்த பயிற்சி யளித்தனர் எனக் கூறுவது மிகையாகாது.

விருத்தசேதனம் பெற்ற குழந்தைகள் சம்பந்தமாய், பெற்ரேருக்குக் கடவுள் உபாகமம் ஆரும் அதிகாரத்தில், "இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது. நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொண்டிருக்கிறபோதும், எழுந்திருக்கிறபோதும், அவைகளைக் குறித்துப் பேசி ———'' (6,7) என கொடுத்துள்ள கட்டளை காணப்படுகின்றது. விருத்தசேதனத்திற்கும், ஞானஸ்நானத்திற்கும் உள்ள சம்பந்தத்தை நாம் அறிவோம். ஆகவே, ஞானஸ்நானம் பெற்ற நமது குழந்தைகளும் மேற்கூறியவாறு போதிக்கப்பட, பெற்ரேர் கவனமா யிருப்பது அவசியம். மேலும் பரி. பவுல் எபே. 6 : 4-ல் " நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக'' என்றே உபதேசிக்கிருர்.

ஞானப் பெற்ருேரின் உத்திரவாதம்.

ஞானஸ்நான ஆராதனையில் 'ஞானப்பெற்ருேர்' என ஒரு வகுப்பார் ஆஜாரா யிருப்பதை நாம் அறிவோம். வயது வந்தோர் ஞானஸ்நானத்தில், ஞானஸ்நானம் பெற வந்திருப் போரின் குணதிசயத்தைப் பற்றியும், அவர்களது விசுவா சத்தின் யதாத்தத்தைப் பற்றியும் சாட்சி பகர்வதும், குழந்தை கள் ஞானஸ்நானத்தில், குழந்தைகளுக்குப் பிணையாளிகளு மாவதும் இவர்கள் கடமை. இத்தகைய ஞானப் பெற்ருேரைப் பற்றி, கி.பி. இரண்டாம் நூற்ருண்டில் தெர்த்துல்லியன் குறிப்பிட்டிருக்கிருர், புறஜாதியானெருவன், ஞானஸ்நானத் தின் மூலம் யூதமதத்தை தழுவும் போது, ஒவ்வொருவனுக்கும் இத்தகைய மூன்று சாட்கிகள் தேவைப் படுகின்றன. ஆகவே இவ்வழக்கம் கிறிஸ்தவ ஞானஸ்நானத்திற்கும் முற்பட்டது.

குழந்தைகள் ஞானஸ்நானத்தில் ஞானப் பெற்ருேரின் பொறுப்பு அதிகம். இனத்தாராயிருப்பதாலும், குறிப்பிட் டோரை ஞானப் பெற்ருேராக நியமிக்காவிடில் அன்ஞர் தங்களை அவமதிப்பதாக நினைக்கக் கூடுமென்பதாலும், பிள்ளைகளுக்கு ஆண்டு தோறும் நல்ல பரிசுகளை வழங்கக் கூடிய நிலையிலுள்ளவர் களாயிருப்பதாலும், பெரும்பாலும் ஞானப் பெற்ருேரை நாம் தேர்ந்தெடுக்கிருேம். இம்முறை மாற வேண்டும். ஞானப் பெற்ருேரின் ஆவிக்குரிய தகுதியே முதலில் கவனிக்கப்பட வேண்டும். அவர்கள் ஞானஸ்நானம் பெற்று, திடப்படுத்தப்பட்டு, ஒழுங்காகப் பரிசுத்த நற்கருணை யில் பங்கு பெறுகிறவர்களாகவும் இருக்கவேண்டும். தாங் களே திடப்படுத்தல் பெருதிருக்கையில் தங்களின் ஞானக் குழந்தைகளைத் திடப்படுத்தலுக்கு ஆயத்தஞ் செய்வார்களென எதிர்பார்க்க முடியாது.

மேலும் ஞானப் பெற்ருேர் குழந்தைகள் பேராலே, பிசாசின் கிரியைகளை வெறுக்கவும், கடவுளை விசுவாசித்து, அவரது சித்தத்திற்கு கீழ்ப்படியவும் வாக்குக் கொடுக்கவும்

கடமைப் பட்டவர்கள். இந்த மூன்று வாக்குத்தத்தங்களையும் சரிவர தாங்கள் வாழ்கையில் நிறைவேற்றி வருகிறவர்களே ஞானப் பெற்றோராவதற்குத் தகுதியுடையோர். ஆகவே, ஞானப் பெற்றோர் உண்மையும், ஒழுங்குமுள்ள கிறிஸ்தவர்களாக இருக்கவேண்டியது அத்தியாயவசியம். அவர்களின் பொறுப்பு மூவகைப் பட்டது.

1. ஞானப் பெற்றோர் குழந்தைகளுக்காக உத்திர வாதம் செய்கிறபடியால் அவர்கள் பிணையாளிகள்கள். (Sponsors.)

2. கிறிஸ்தவ வாழ்க்கையில் குழந்தைகள் வளரவேண்டிய பொறுப்பை ஏற்றுக் கொள்ளுகிறவர்களாகிற படியால் அவர்கள் ஜாமீன்கள் (Guarantors)

3. பிள்ளைகள் கிருபையில் வளர ஜெபிக்கிறவர்களாதலால் பிள்ளைகளின் மத்தியஸ்தர். (Intercessors.)

I. பிணையாளிகள். ஞானஸ்நான ஆராதனையில், குழந்தைகளின் பிணையாளிகளாக, வெறுப்பேன், விசுவாசிப்பேன், கீழ்ப்படிவேன் என வாக்குக் கொடுக்கின்றனர். பிள்ளைகள் கிறிஸ்தவ வாழ்கையில் வளர்வதற்கு அதிகமான பொறுப்பை ஏற்றுக் கொள்ளுகிறார்கள். தனிநபர் கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தை அறிக்கையிடுவதன் மூலம் ஞானஸ்நானம் பலிதமாகின்றது. குழந்தைகள் ஞானஸ்நானத்தைப் பொறுத்தவரை, பெற்றோர், ஞானப் பெற்றோரின் மூலம் இது பலிதமாகின்றது. மேலும் குழந்தைகளும் தங்களை ஏற்றவாறு ஆயத்தப் படுத்திக் கொண்டு, தாங்களாகவே விசுவாசத்தை அறிக்கையிடும் நிலைக்கு அவர்களை வழிநடத்துகின்றது.

ஞானப்பெற்றோர், தங்களுக்காக வாக்குத் தத்தம் செய்ய வேண்டியதில்லை. ஆதலால் ஞானப் பெற்றோர் சம்பந்தப்பட்டவரை இது ஓர் இலகுவானதாகத் தோன்றலாம். ஆனால் தாங்கள் நடைமுறையில் கடைப்பிடியாததொன்றை பிறருக்காக வாக்குக்கொடுப்பது ஒப்புக்கொள்ளப்படாத

விஷயம். தாங்களே கைக்கொள்ளாத விஷயத்தில், தங்கள் ஞானக்குழந்தைகளுக்கு இவர்கள் எவ்வாறு மாதிரிகளா யிருக்கக் கூடும்? ஆகவே ஞானஸ்நான வாக்குத் தத்தங்கள் ஞானப் பெற்றோருக்கும், குழந்தைகளுக்கும் அறை கூவ லாயிருக்கின்றன.

II. ஜாமீன்கள். இந்த முறையில் ஞானப் பெற்றோர், தங்களின் ஞானக் குழந்தைகள், கிறிஸ்துவின் அன்பிலும், திருச்சபை உபதேசத்திலும் வளர்க்கப் படுவதற்கு தாங்களே பொறுப் பாளிகளாகின்றனர். இந்த பொறுப்பு அவர்களின் வாழ்நாள் முழுவதிலும் உண்டெனினும், குழந்தைகள் திடப் படுத்தலைப் பெறும் வரையாவது கண்டிப்பாய் அனுசரிக்கப் பட வேண்டியதாகின்றது. ஞானஸ்நானத்தின் மூலம் கடவுள் அருளிய அன்புக்கும், அருளுக்கும் பிள்ளைகளிடம் காணப்பட வேண்டிய பொறுப்புணர்ச்சியும், செயலுமே திடப்படுத்தல்.

பிள்ளைகளின் கிறிஸ்தவவளர்ப்புக்கு, பெற்றோரே ஏற்ற ஜாமீன்களென கருதப்படுவது நியாயமே. ஆம், அவர்கள் தாம் முதல் பொறுப்பாளிகள் என்பதற்குச் சந்தேகம் கிடை யாது. ஆனால் ஞானப் பெற்றோர் இது விஷயத்தில் அதிகப் படியான பொறுப்பாளிகளாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற னர். யாதாமொரு காரணத்தால் பெற்றோர் தங்கள் கடமை களைச் செய்யத் தவறுகையில் அல்லது முடியாத நிலை ஏற்படு கையில், ஞானப் பெற்றோரின் சேவை குழந்தைகளுக்கு அதிக மாய்த் தேவைப்படுகின்றது. தெய்வக்காரியங்களில் பெற்றோ ருக்குரிய பதவியை, அவர்கள் வகிப்பதால், 'ஞானப் பெற் றோர்' என அழைக்கப்படுகின்றனர்.

கிறிஸ்தவப்பிள்ளைகளாக வளர்க்கப்படுவதற்குத் தகுந்த ஜாமீன் இல்லாவிடில், குழந்தை ஞான்ஸ்நானம் பலித மடைவதில்லை. குழந்தைஞானஸ்நானம் ஆராதனையுடன் முடிந்து போவதன்று; குழந்தைகளின் பரிசுத்தநிலையைப்

பெற்றோரும் ஞானப்பெற்றோரும் தொடர்ந்து காத்துக் கொள்ளுவதில் அடங்கியுள்ளது. இந்நிலை வெற்றிகரமாய் நடைபெற, பெற்றோர் தங்களையே, அர்ப்பணஞ் செய்ய வேண்டும். இரட்டிப்பான உத்தரவாதத்தைக் காட்ட, ஞானப்பெற்றோரும் இதில் தீர்க்கமாய் முயற்சிசெய்ய வேண்டும். நேரடியாயும், கடிதங்கள் மூலமாயும், சன்மார்க்கப் புத்தகங்களைப் பரிசளித்தல் மூலமாயும் அடிக்கடி தொடர்பு கொள்ளுகையில் இது சாத்திய மாகின்றது.

III குழந்தைகளின் மத்தியஸ்தர். ஞானப் பெற்றோர் செய்ய வேண்டிய அதிமுக்கிய கடமை தங்களின் ஞான குழந்தைகளுக்காக ஜெபிப்பதே. இதைச் செய்யக் கூடாத நிலையில் எந்த ஞானப் பெற்றோரும் இருக்க முடியாது. தங்களின் ஞானப்பிள்ளைகள், கடவுளின் பரிசுத்த வேத எழுத்துக்களை அறிகிற அறிவில் வளர்ந்து, இயேசு கிறிஸ்துவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, கடவுளின் திருக்குடும்பத்தில் உயிருள்ள அவயவங்களாகக் காணப்பட ஞானப் பெற்றோர் ஒழுங்காகவும், உண்மையுடனும், விசுவாசத்துடனும், விடாமுயற்சியுடனும் ஜெபித்து வரக் கடமைப் பட்டவர்கள். இதைப் பற்றி அதிகம் எழுதத் தேவையில்லை.

ஜெபம்

சர்வ வல்லமையுள்ள கடவுளே, பரமதந்தையே, தேவரீர் எங்களுக்குத் தந்தருளிய பிள்ளைகளுக்காக, ஞானப்பிள்ளைகளுக்காக உம்மைத் துதிக்கிறோம். அவர்கள் கிருபையில் வளர்ந்தேறி, தெரிந்து கொள்ளப் பட்ட உம்முடைய பிள்ளைகளின் எண்ணிக்கையில் சேரும்படி, இப்பொழுது நாங்கள் அவர்களை உம்மைப்பற்றும் விசுவாசத்திலும் பயபக்தியிலும், வளர்க்க கிருபைசெய்தருள எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் கேட்டுக்கொள்கிறோம். ஆமென்.

XII. தென் இந்திய திருச்சபையும் ஞானஸ்நானமும்.

தமிழ் நாட்டுச் சபைகளில் ஞானஸ்நானத்தைப்பற்றி பல்வேறு கொள்கைகள் நிலவிவருவதால், நமது தென் இந்திய திருச்சபை ஞானஸ்நானத்தைப் பற்றித் திட்டமான அறிக்கை யொன்றை தனது 'சினட்' மூலம் வெளியிட்டிருக்கின்றது. அதன் தொகுப்பு வருமாறு :

ஞானஸ்நானம் ஒரு நிபந்தனை.

ஞானஸ்நானமாகிய சாக்கிரமெந்துக்கு தெ. இ. தி. அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றது. தென் இந்திய திருச்சபையில் அங்கத்தினராவதற்கு ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுவது ஒரு நிபந்தனையாகும். மேலும் ஞானஸ்நானம் பெறுவதின் மூலம் நாம் நமது ஆண்டவரின் கட்டளைக்குக் கீழ்ப்படிகிறோம்.

குழந்தைகளும் ஞானஸ்நானமும்.

குழந்தைகளின் ஞானஸ்நானம் கிரமமானதே. கிறிஸ்தவப் பெற்றோர் தங்கள் குழந்தைகளை தாமதமின்றி ஞானஸ்நானத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்பது வற்புறுத்தப்படுகின்றது. ஞானஸ்நானம் முழுக்காட்டியோ, வார்த்தோ, தெளித்தோ கொடுக்கப்படலாம். இவை எல்லாம் ஒப்புக்கொள்ளக்கூடிய முறைகளே.

மறு ஞானஸ்நானம்.

ஞானஸ்நானமாகிய நியமனத்தின் மூலம், குழந்தைகளோ வயது வந்தவரோ, கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையுடன் இணைக்கப்படுவதால், மறு ஞானஸ்நானமென்பது கிடையாதென தெ. இ. தி. போதிக்கின்றது. 'இரண்டாம் ஞானஸ்நானம்' என்று சொல்லப்படுவது திருமறை உபதேசத்திற்கு முரணானது (எபே 4 : 5). இரண்டாம் முறை ஞானஸ்நானம் பெறுவோர் தங்கள் முதல் ஞானஸ்நானத்திலுள்ள கடவுளின் செயலை மறுதலித்து, அவரது கிருபைநிறைந்த வாக்குத்

தத்தங்களை நிராகரிக்கின்றனர். இது ஓர் அவிசுவாசச் செயல். கடவுளின் கிருபையை உணர்ந்துகொள்ளும் முன்பும், நாம் பாவிகளாக இருந்தபோதும், கடவுள் கிறிஸ்துவின் மூலம் நம்மில் நிறைவேற்றியுள்ள இரட்சிப்பின் இலவசக் கிருபைக்கு மேலாக, தங்களின் மனுஷீக விசுவாசத்தையும், தங்களின் புண்ணியகிரியைகளையும் இத்தகையோர் சாதாரணமாய் வற்புறுத்துகின்றனர்.

மறு ஞானஸ்நான கிரமசிட்சை.

திருச்சபையின் சட்டதிட்டங்களுக்கு அடங்கிநடக்க வேண்டுமென்பது, தெ. இ. தி. அங்கத்தினரின் கடமை. ஆகவே இரண்டாம் ஞானஸ்நானம் ஏற்றுக்கொள்ளுவோர், திருச்சபையின் கிரமசிட்சைக்குட்பட்டோராவர். யாதாமொரு சபையில் ஒரு சிலர் இரண்டாம் ஞானஸ்நானம் பெறுங்கால், அச்சபையின் ஐக்கியம் சிதைவுபடுகின்றது. அத்தகையோர் தாங்கள் மற்றவர்களைவிட ஆவிக்குரியநிலையில் மேம்பட்டோராகக் கருதுவது இத்தகைய பிளவுக்கு ஒரு காரணமாகும். சபையின் பொறுப்புள்ள சபை ஊழியர், கமிற்றி அங்கத்தினர் முதலானோர் சபையின் சட்ட திட்டங்களுக்கு, உண்மையுடனும், உத்தரவாதத்துடனும் நடந்துகொள்ள வேண்டும். இவர்களில் எவரேனும், இரண்டாம் ஞானஸ்நானம் அவசியமென போதித்தாலும், இரண்டாம் ஞானஸ்நானத்தை ஏற்றுக் கொண்டாலும், அத்தகையோர், அதற்காக மனஸ்தாபப்பட்டு, சீராகும் வரைத் தங்கள் பதவியில் தொடர்ந்து செயல்படத் தகுதியற்றவராகக் கருதப்படுவர். இரண்டாம் ஞானஸ்நானம் பெற்றோர், ஊழியரின் போதனைக்குச் செவிகொடாமலும், தென் இந்திய திருச்சபையை விட்டுத் தாங்களே விலகிக் கொண்டவர்களாகத் தங்களின் நடக்கையால் வெளிப்படுத்தியுமிருந்தால் மட்டுமே அவர்களைக் கிரமசிட்சைக் குட்படுத்த வேண்டும்.

ஊழியரின் கடமை.

இரண்டாம் ஞானஸ்நானம் பெற்றோரை, ஊழியரும், சபைத் தலைவரும் கண்டு பேசி, அவர்களின் தவறை எடுத்துக் காட்டி, அவர்களை உணர்த்த வேண்டும். ஏனெனில் பலர் அறியாமையாலும் திடீரென ஏற்பட்ட உள்ளக் கிளர்ச்சியாலும் இவ்வாறு வழி விலகிப் போகின்றனர். குருக்களும், இதர ஊழியரும், தங்களின் சபையாருக்கு ஞானஸ்நானத்தைப் பற்றி ஒழுங்காக போதித்து வர வேண்டும். புதிதாகக் கிறிஸ்தவர்களாவோரை ஞானஸ்நானத்திற்காக ஆயத்தப்படுத்தும் போதும், தங்கள் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம்கொடுக்க விரும்பும் பெற்றோருடன் உரையாடும் போதும், திடப்படுத்தலுக்கு மக்களை ஆயத்தப்படுத்தும் போதும், ஞானஸ்நான ஆராதனையில் அறிவுரை நிகழ்த்தும் போதும் இத்தகைய போதனை இடம் பெறவேண்டும். தகுந்த ஆயத்தத்திற்குப் பின்னர் வெகு பயபக்தியுடன் ஞானஸ்நான ஆராதனை நடைபெற குருக்கள் எப்போதும் கவனமாயிருக்க வேண்டும். குருமாரும், இதர ஊழியரும், தெ. இ. தி. மூலச் சட்டம், *அத் III 1-ஐச் சரிவர அறிந்துகொள்ளக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். மேலும் ஞானஸ்நானத்தைக் குறித்து தெ. இ. தி. 'சினுட்' வெளியிட்டுள்ள நூல்களைக் கற்கவும், அவசியமேற்படின் அவற்றை மறுபடியும் அச்சிட்டு பிராந்திய மொழிகளில் வெளியிடவும், இறையியல் இலக்கியக் குழுவினர் இது போன்ற இதர நூல்களை அவ்வப்போது வெளியிடவும் சிபாரிசு செய்கின்றது.

"திருச்சபையில் கிறிஸ்து இயேசுவுக்குள் தலைமுறை தலைமுறையாக என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென்." எபே 3 : 21 (R. V.)

தென் இந்திய திருச்சபை மூலச்சட்டம் அத். 3 : 1

சபை அங்கத்தினர்

1. *தென் இந்திய திருச்சபை தனது 4-வது ஆளுகைப் பிரமாணத்தில் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினராக இருப்பதற்கான நியதியையும் சீர்மையையும் கூறியுள்ளது. அதன்படி*

கீழ்க்காட்டிய அந்தஸ்துக்களை ஒருங்கே உடையவர்கள் தென் இந்திய திருச்சபை அங்கத்தினராக அங்கீகரிக்கப்படுவார்கள்.

தென் இந்திய திருச்சபையின் எல்லைக்குட்பட்டவர்;

பிதா, குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஜலத்தினுல் ஞானஸ்நானம் பெற்றவர்;

திருச்சபையின் சட்டங்கள், மரபுகளின்படி நடக்கப் பிரியமுள்ளவர்;

தென் இந்திய திருச்சபையோடு பரி. நற்கருணை உறவு கொண்டிராத எந்த சபையிலும் அங்கத்தினராயிராதவர்;

சட்டப்படியாக திருச்சபை சிலாக்கியங்களுக்குப் புறம்பாக்கப்படாதவர்;

கிறிஸ்தவ மார்க்கத்தை விட்டு விட்டு பகிரங்கமாக வேறு எந்த மார்க்கத்தையும் சேராதவர்.

ஞானஸ்நானம் பெற்ற குழந்தைகளும் திருச்சபையின் அங்கத்தினராயிருந்து தங்கள் திறமைக்கு ஏற்றவாறு அதன் சிலாக்கியங்கள், கடமைகளில் பங்கு பெறுகிறுர்கள்.

2. கீழ்க்காட்டியவர்களே தென் இந்திய திருச்சபையின் பூரண சிலாக்கியங்களுக்கும் கடமைகளுக்கும் உரியவராவார்கள்.

பகுத்தறிவு அடைந்த வயதினராய் கிறிஸ்தவ வாழ்க்கையில் ஓரளவு அனுபவமுடையவர்கள்;

கிறிஸ்தவ சத்தியங்களிலும், தங்கள் கிறிஸ்தவ அழைப்பின் கடமைகளைப்பற்றியும் தேவையான போதனை பெற்றவர்கள்

தங்கள் விசுவாசத்தையும் கடவுளின் சகாயத்தைக் கொண்டு கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினராகச் சேவித்து அவரைப் பின்பற்றுவதான தங்கள் வாழ்க்கையின் நோக்கத்தையும் பகிரங்கமாக அறிக்கை செய்கிறவர்கள்;

இவர்கள் ஒரு பகிரங்க ஆராதனையில் இந்த அறிக்கையைச் செய்வார்கள். அந்த ஆராதனையில் அவர்கள் பரிசுத்த ஆவியில் பலப்படவும், தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான ஏராளமான அவரது கிருபையின் ஈவுகளை பெற்றுக்கொள்ளவும், அவர்களுக்காக ஜெபங்கள் ஏறெடுக்கப்படும்.

இப்படியாக சபையின் முழு அங்கத்தினராகச் சேர்க்கப்பட்டவர்கள் சபையின் பரிசுத்த நற்கருணையில் பங்குபெற தகுதியுடையவர்களாவதுடன் தென் இந்திய திருச்சபையின் இதர ஆலயங்களிலும் பரிசுத்த நற்கருணையில் பங்கு பெற சுதந்திரமுடையவர்களுமாயிருக்கிறுர்கள்.

முடிவுரை

"இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரிது."

குழந்தை ஞானஸ்நானத்தை ஆட்சேபிக்கும் மக்களால் அலசடிப்பட்ட கடவுளின் பிள்ளைகள், குழந்தை ஞானஸ்நானம் பரிசுத்த வேதத்தின் மூலம் ரூபிக்கப்படக்கூடியதென இதற்குள் அறிந்துகொண்டிருக்கக்கூடும். இதற்காக மனமகிழ்ந்து கடவுளைத் துதிக்கக் கடமைப்பட்டுள்ளோம். வயது வந்தோரின் ஞானஸ்நானத்தை ஆதரித்து, குழந்தை ஞானஸ்நானத்திற்கு எதிராகக்கூறும் வாதங்களெல்லாம் சத்திய வேதத்தால் ரூபிக்கப்படமுடியாதவை. அவை வேத உபதேசத்திற்கு முரணானவை, மேலும் வயது வந்தோர் ஞானஸ்நானத்தையும், குழந்தைகள் ஞானஸ்நானத்தையும் குழப்புவதாலேயே இவ்வாதங்கள் எழுகின்றன. ஞானஸ்நானத்தில் மானிடரின் பாகத்தை வற்புறுத்தி, கடவுளின் முன் கிருபையை மட்டுப்படுத்துகின்றனர் (I யோவான் 4 : 10). அவரது சிநேகம் அநாதியானது. நாம் பிறக்குமுன்பே அவர் நம்மீது அன்பு கொண்டார். இதற்கு ஞானஸ்நானம் ஓர் எடுத்துக் காட்டு. எல்லாரையும் நேசிக்கும் அன்பின் சொரூபி குழந்தைகளைப் புறக்கணிப்பாரோ! பரலோக ராஜ்ஜியத்தில் ஏற்றுக் கொள்ளப்பட தகுதியுள்ள குழந்தைகள், பூலோகத் திருச்சபையில் சேர்க்கப்படத் தடைவிதிக்க மனிதருக்கு அதிகாரம் உண்டோ?

பழைய ஏற்பாட்டிற்கும், புதிய ஏற்பாட்டிற்கும், யூத சபைக்கும், கிறிஸ்தவ சபைக்கும், யூதசபை சாக்கிரமெந்துக்களுக்கும் கிறிஸ்தவசபை சாக்கிரமெந்துக்களுக்கும் உள்ள சம்பந்தத்தை ஒப்புக்கொள்ள இவர்கள் மறுக்கின்றனர். இதனால் ஞானஸ்நானத்தின் மெய்க் கருத்தை இவர்கள் அறிந்து கொள்ள முடிகிறதில்லை. பழைய ஏற்பாட்டின் நிறைவேறுதலே புதிய ஏற்பாடு. யூதரின் தகப்பனே, கிறிஸ்தவ விசுவாசிகளின் தகப்பன். யூத சபை சாக்கிரமெந்தாகிய விருத்த

சேதனத்தின் நிறைவேறுதலே கிறிஸ்தவக் குழந்தைகளின் ஞானஸ்நானம். பழைய ஏற்பாட்டின் கடவுளாகிய யெகோவாவே, கிறிஸ்தவ மக்களின் ஆண்டவராகிய, இயேசு கிறிஸ்துவின் பிதாவாயிருக்கிறார். 'உன் சந்ததி' என்பது யூதமக்களுக்கு மட்டுமுள்ள தனி உரிமையல்ல. இது கிறிஸ்தவவிசுவாசிகளின் மக்கள் யாவருக்கும் இரண்டாம் வருகை வரை பொருந்தும்.

திருச்சபை வயது வந்தோரால் மட்டும் அமைந்துள்ள ஒரு சங்கமெனவும், கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்த வாக்குத்தத்தத்தின் புத்திரர், அந்நியரான புறஜாதியாரைப் போல் பாவிக்கப்பட, வேண்டுமென விரும்புவது தவறு. இதற்கு எவ்வித வேத ஆதாரமும் கிடையாது. பரலோகத் திருச்சபையில் குழந்தைகள் உளர் என அறிகிற நாம், பூலோகத் திருச்சபையிலிருந்து குழந்தைகளை விலக்கி வைப்பது எவ்வளவு துணிகரச் செயல்! கடவுளின் பரிசுத்த சபையில் குழந்தைப் பருவமுதலே ஞானஸ்நானத்தினால் இணைக்கப்பட நமக்கு வாய்ப்பு கிடைத்ததற்காக், கடவுளுக்கு நன்றியறிதலான துதிகளை ஏறெடுத்து, அவரை மகிமைப்படுத்தக் கடமைப்பட்டுள்ளோம். நாம் இணைக்கப்பட்டுள்ள கடவுளின் பரிசுத்த சபைக்கு நம்மூலமாய் எவ்வித இழுக்கும் ஏற்படாதவாறு வாழ்ந்து வரக் கவனமாயிருக்க வேண்டும். மேலும் இத்தகைய சிலாக்கியத்தில் நாம் பங்காளிகளாவதற்கு உதவிய நமது அருமைப் பெற்றோருக்கும், ஞானப்பெற்றோருக்கும், ஆத்தும மேய்ப்பருக்கும் நாம் நன்றியறிதலுள்ளவர்களாயிருக்க வேண்டும். நமது அனுதினச் சாட்சியின் மூலம் நாம் தேவனுடைய உடன்படிக்கையின் புத்திரர் என்பதை வெளிப்படுத்தவேண்டும்.

திருச்சபை ஊழியரின் பாக்கிய சிலாக்கியமும் பொறுப்பும்

எனது உடன் ஊழியருக்கு ஒரு வார்த்தை. திருச்சபை ஊழியராகிய நாம் எல்லா நல் மனச்சாட்சியுடனும், சத்திய வேதத்தையே ஆதாரமாகக்கொண்டு, குழந்தைகளுக்கு ஞான

ஸ்நானம் கொடுக்கலாமென்று மட்டுமல்ல, கிறிஸ்தவக் குழந்தைகள் கண்டிப்பாக ஞானஸ்நானம் பெற்றுகவேண்டும் என்ற திடசித்தமுள்ளவர்களாயும் செயலாற்றுவோம். ஏனெனில் கிறிஸ்தவக் குழந்தைகள், நமது உக்கிராணத்திற்குட்பட்ட கடவுளது உடன்படிக்கையின் மக்களாகப் பிறந்தவர்களே. நித்தியானந்த கடவுளுக்கு முன், இலவச ஈவாகிய இப்பரிசுத்த கைங்கரியத்தை, அவரது மகிமைக்காக நன்றியுள்ள துதிகளோடு நிறைவேற்றுவோம். நம்மைத் தம்முடைய மக்களாக தாமே முத்தரித்துள்ள நமது கடவுளும், இரட்சகரும் தேற்றரவாளனுமானவருக்கு, அவரது பண்ணையில் உண்மையாய்த் தொண்டாற்றி நித்தியமான அவரது பரம விருந்தில், அநேகர் பங்கு பெறுமாறு, அவருக்குச் சொந்தமான குழந்தைகளுக்கு இப்போதே ஞானஸ்நானமாகிய முத்திரையை அளித்து வருவோம் பக்தனும் அறிஞனும கிய கல்வீன் கூறியவண்ணம், கிறிஸ்தவக் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டுமென்பது, பரிசுத்த வேதாகமத்தில் திட்டமாகவும், உறுதியுடனும் அஸ்திபாரமிடப்பட்டிருக்கிறது என்ற திடசித்தமுள்ளவர்களாயிருப்போம்.

அதே சமயத்தில் வேதத்தைக் கவனமாய்ப் படிப்பதாலும் ஜெபதியானத்தாலும், கிறிஸ்தவச் சாட்சி, ஈகை இவற்றாலும் நமது விசுவாசம் வளர முயல்வது நமது கடமை. ஞானஸ்நானம் பெற்ற பிள்ளைகள், காலா காலத்தில் கிறிஸ்துவைத் தங்களின் சொந்த ரட்சகராக ஏற்றுக்கொள்ள, அவர்களைப் பல்வேறு முறைகள் மூலம் நடத்துவதில் அதிகக் கவனம் செலுத்துவது நமது அதிமுக்கியக் கடமை. நமது பிள்ளைகளுடனும் ஞானப் பிள்ளைகளுடனும், 'இதோ நானும் என் பிள்ளைகளும்' எனக் கூறி, மறுமையில் நம் பரம தந்தையை அவரது ராஜ்ஜியத்தில் மகிழ்வுடன் தரிசிக்க, திரியேகக் கடவுள் துணைபுரிவாராக.

"வாலிபரே, கன்னிகைகளே, முதிர்வயதுள்ளவர்களே, பிள்ளைகளே, கர்த்தரைத் துதியுங்கள்."

ஆக்கியோனின் ஆராய்ச்சிக்கு உதவிய நூல்கள்.

பரிசுத்த ஞானஸ்நானம் — அசரியா அத்தியக்ஷர்

குழந்தை ஞானஸ்நானம் — Barnes-Lawrence

திருமுழுக்கு — A. D. மனுவேல்

கிறிஸ்தவ சித்தாந்த திரட்டு — மார்க்கஸ் வார்ட்

கிறிஸ்தவ வழிபாடு — T. S. காரட்

* மெய் ஞானஸ்நான ஆராய்ச்சி — D. Morling

* ஞானஸ்நானத்தின் நிபந்தனைகள் — S B. M வெளியீடு

* ஞானஸ்நானத்திலுண்டாகும் மறு ஜனனம் — C. H. ஸ்பர்ஜன்

* ஞானஸ்நானத்தைப்பற்றி இலகுவான சத்தியங்கள் — T. G. ஹார்வி

ஒரே ஞானஸ்நானம் — அகஸ்டீன் மதுரம்

The Bibilical Doctrine of Infant Baptism — Pierre ch. Marcel

Your child's Baptism — Frank Colquhorn

Infant Baptism in First Four centuries — Joachim Jermias

The New Testament Doctrine of Baptism — W. F. Flemington

A Summary of Christian Doctrine — Louis Berkhof

Ye are Baptized — Lukes Visahar

Baptism in the New Testament — O. Cullman

The Orgins of Infant Baptism — J. Jermias

Infant Baptism — What saith the Scripture — A. J. Diffen bacher

Letters on Baptism — Edmund Fairfield

The Bibilical Doctrine of Baptism — A Study — Document issued by the special commission on Baptism of the Church of Scotland.

Baptism — Bishop Hollis

Infant Baptism — Bishop A.H. Legg

Nature and calling of the church — W. Stewart

Baptism and conversion — John Balleie

The Baptismal Liturgy — E. C. Whiteker

* Baptism not Infants — T. E. Watson

* Did early church baptize Infants? — Kurt Aland

* A conversation about Baptism — R. L. Child

* Your Baptism is important — Stanley Edwin Anderson

(* குறியிட்டவை குழந்தை ஞானஸ்நானத்திற்கு பாதகமாக எழுதப்பட்டவை.)

திருநெல்வேலி டயோசிசன் பிரஸ், பாளையங்கோட்டை — R. 1781

1969

திருப்பணிவிடையாளர் பாடப் புத்தகங்கள்

1. சில சங்கீதங்கள் — C. J. தானியேல்
2. கலாத்தியர் நிருபம் — S. தானியேல் ஆபிரகாம்
3. குழந்தைகள் ஞானஸ்நானம் — Y. சாமுவேல்
4. திருச்சபை வரலாறு 1518—இன்றுவரை —J. P. அலெக்சாந்தர்

INFANT BAPTISM

By

Capt. Rev. Y. Samuel

Arumuganeri

(Tirunelveli Diocese)

Copies available from :

The Diocesan Book Depot, Tirunelveli-2

The Diocesan Office, Tirunelveli-2

The Editor, C. S. I. Theological Series, Tirumaraiyur.

Price Rs. 1-50